விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதியன் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-5551)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 10 வெள்ளிக்கிழமை (22.02.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 065

## ஐ.நா. இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக்கூடாது
# சர்வதேசத்துக்கு உரத்துக்கூற
# கிளிநொச்சியில் அணிதிரளுங்கள்
## முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அழைப்பு



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்தினை நிறைவேற்றுவ்தற்கு இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்படக்கூடாது என்று தெரிவித்த தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் இந்த விடயத்தினை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழுகின்ற தமிழ் மக்கள் சர்வதேச நாடுகளுக்கும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளுக்கும் ஏகோபித்த குரலில் எடுத்துக் கூறவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

### விக்னேஸ்வரன் மீதான
## நீதிமன்றத்தை அவமதித்த வழக்கு
### மே மாதம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

வட மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட மூவர் மீதான நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டு மனுவை தொடர் விசாரணைக்காக வரும் மே 23ஆம் திகதிவரை ஒத்திவைத்தது மேன்முறையீட்டு நீதிமன்றம்.

பா.டெனீஸ்வரனை மாகாண அமைச்சுப்பதவியில் இருந்து நீக்குவது தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்தும் வகையில் மேன் முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளையை நடைமுறைப்படுத்தாது முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அமைச்சர்கள் சிவநேசன், அனந்தி சசிதரன் 23☛

## ஜனாதிபதி மைத்திரி - மகிந்த தலைமையில் புதிய கூட்டணி
### இன்று விசேட சந்திப்புக்கு ஏற்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் இன்று விசேட சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது. இந்த சந்திப்பின்போது எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்காக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் லங்கா பொது ஜன பெரமுனவை உள்ளடக்கிய பாரிய கூட்டணி ஒன்றை அமைப்பது குறித்து பேச்சுவார்த்தை இடம்பெறும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. 23☛

### தூய்மையான அரச நிர்வாகத்திற்காக
## உருவாக்கப்பட்ட 19ஆவது திருத்தம் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளது
### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

தூய்மையான அரச நிர்வாகத்திற்காக தன்னால் உருவாக்கப்பட்ட 19வது திருத்தம் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். 2015 ஜனவரி 8ஆம் திகதி தனது தேர்தல் பிரகடனத்தில் இந்த நாட்டு மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிக்கு ஏற்ப மிகவும் தூய்மையான எண்ணத்துடனும் 23☛

## கொழும்புத்துறை கடற்கரையில் கஞ்சா மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கொழும்புத்துறை கடற்கரை பகுதியில் பொதி செய்யப்பட்ட நிலையில் இருந்த கேரள கஞ்சா விசேட அதிரடி படையினரால் மீட்கப்பட்டுள்ளது. 23☛

## 250 மில்லியன் செலவில் தகவல் தொழில்நுட்ப மையம்
### யாழில் அமைக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தகவல் தொழில்நுட்ப மையம் அமைப்பதற்கு இந்திய அரசால் 250 மில்லியன் ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது.

மக்கள் மேம்பாட்டு நன்கொடையாக இந்திய அரசால் இலங்கைக்கு வழங்கப்படும் 560 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியில் இந்த திட்டமும் அடங்குகிறது என இந்தியத் தூதர 23☛

## கேப்பாப்புலவு மக்களை சந்தித்த இலங்கைக்கான
### சுவிஸ் தூதரக அதிகாரிகள்

(முல்லைத்தீவு)

கேப்பாபுலவில் 723 ஆவது நாளாக நிலமீட்பு போராட்டத்தை மேற்கொண்டுவரும் கேப்பாபுலவு பூர்வீக கிராம மக்களை இலங்கைக்கான சுவிஸ்லாந்து நாட்டின் தூதரக அதிகாரிகள் நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.


கேப்பாபுலவு மக்களின் நிலமீட்பு போராட்டம் குறித்து 23☛

## இந்திய பழங்கள் இறக்குமதிக்கு இலங்கையில் தடை

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து திராட்சை மற்றும் மாதுளம்பழங்களின் இறக்குமதியை தற்காலிகமாக தடை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளது. 24☛

## அரசியல் அமைப்பு பேரவையை காற்பந்தாக்க வேண்டாம்
### சபையில் இரா.சம்பந்தன் கோரிக்கை



(கொழும்பு)

அரசியல் அமைப்பு பேரவை என்ற விடயம் இன்று மிகவும் ஆரோக்கியமான ஒன்றாக அமைந்துள்ளதாக தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அரசியல் அமைப்பு பேரவை அரசியல் காற்பந்தாக மாறிவிடக்கூடாது. அரசியல் அமைப்பு பேரவையை பாதுகாக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க் 23☛

## யாழ்.குடாநாட்டில் இரண்டு புதிய காற்றாலை மின் நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 4.4 பில்லியன் ரூபாய் முதலீட்டில், மேலும் இரண்டு காற் 23☛

## தமிழ் மக்கள் ஒரு படி முன்னேற அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்
### பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் ஒரு படி முன்னேற அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 23☛

## வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் ஐ.நாவில் இலங்கை குறித்து ஆய்வு

(கொழும்பு)

பலவந்தமாக அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான ஐ.நா. பணிக்குழுவில் இலங்கை குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

பலவந்தமாக அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான ஐ.நா. பணிக்குழுவின் 117 ஆவது அமர்வு சரஜீவோ, பொஸ்னியா - ஹெர்சகோவினாவில், கடந்த 11 - 15 ஆம் திகதி வரை நடைபெற்றது.

இந்த அமர்வில் 37 நாடுகளின், 760 காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது அதிலும் கடந்த சில மாதங்களில் இடம்பெற்ற 51 காணாமற் போன சம்பவங்கள் தொடர்பாக அவசர நடைமுறையின் கீழ் ஐ.நா.பணிக்குழு ஆய்வு செய்தது. அதில் பங்களாதேஷ், எகிப்து, 23☛

# அகவை அறுபதில்
## சேவை நலன் பாராட்டு



**உயர்திரு. சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் SLPS - I**

*(Maths.Trd,B.Ed, Dip-in.S.M, M.Ed)* **(அதிபர் - கிளி/பளை மத்திய கல்லூரி)**

**சேவை விபரம்**

| இல | சேவைநிலையம் | பதவி | காலம் |
|---|---|---|---|
| 1 | கிளி/தட்டுவன்கொட்டி கண்ணகை அம்மன் வித்தியாலயம் | ஆசிரியர் | 01.06.1978-09.03.1980 |
| 2 | கிளி/தர்மபுரம் மத்திய கல்லூரி | ஆசிரியர் | 10.03.1980-31.12.1981 |
| 3 | பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி | ஆசிரிய மாணவர் | 01.01.1982-31.12.1983 |
| 4 | நு/நானுஓயா சிங்கள தமிழ் மகா வித்தி. | ஆசிரியர் | 01.01.1984-31.03.1989 |
| 5 | யா/காங்கேசன்துறை மகா வித்தியாலயம் | ஆசிரியர் | 01.04.1989-31.12.1989 |
| 6 | யா/நடேஸ்வராக் கல்லூரி | கொத்தணிஉதவியாளர் | 01.01.1990-31.12.1993 |
| 7 | யா/குட்டியப்புலம் அ.த.க.பாடசாலை | ஆசிரியர் | 01.01.1994-31.12.1995 |
| 8 | கிளி/அக்கராயன் மத்திய கல்லூரி | ஆசிரியர் | 01.01.1996-31.12.1997 |
| 9 | கிளி/அக்கராயன் மத்திய கல்லூரி | அதிபர் | 01.01.1998-31.12.2002 |
| 10 | கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை | அதிபர் | 01.01.2003-31.12.2006 |
| 11 | கிளி/இந்துக் கல்லூரி | அதிபர் | 01.01.2007-31.12.2012 |
| 12 | கிளி/பளை மத்திய கல்லூரி | அதிபர் | 01.01.2013-21.02.2019 |

01.06.1978 ஆசிரியராக நியமனம் பெற்று ஆசிரியர் பணிதனை சிறப்புடன் மேற்கொண்டு பின்னர் அதிபராகி 22.02.2019இல் அகவை அறுபதில் பணிவிட்டகலும் அதிபர் திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்களின் ஓய்வுகாலம் சிறப்புடன் விளங்க வாழ்த்துகின்றோம்.

(5579) **கிளி/பளை மத்திய கல்லூரி பாடசாலைச் சமூகம்**


# விபத்தில் வயோதிபப் பெண் படுகாயம்

வீதியால் நடந்து சென்ற வயோதிபப் பெண்ணை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் படுகாய மடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மு.ப 11.15 மணியளவில யாழ்.கஸ்தூரியார் வீதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் புங்குடுதீவு 06ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 70 வயதுடைய ப.சிவசோதி என்பவரே படுகாயமடைந்து சுயநினைவை இழந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையல் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3,10)

# வரணியில் தவறிவிழுந்தவர் படுகாயம்

வரணி - இயற்றாலைப் பகுதியில் வியாழக்கிழமை மதியம் உழவு இயந்திரத்தில் வைக்கோல் கும்பியின் மேல் இருந்து சென்றவர் தவறி விழுந்து படுகாயமடைந்துள்ளார்.

உழவு இயந்திரம் வயல் வரம்பில் ஏறி இறங்கியபோது அவர் தூக்கி வீசப் பட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இதில் வரணிப் பகுதியைச் சேர்ந்த 60 வயதான குடும்பஸ்தரே படுகாய மடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ம-30)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## பெயர் மாற்ற அறிவித்தல்

அச்சுவேலி தெற்கு அச்சுவேலியில் வசிக்கும் குணரத்தினம் விஜயகாந்த் (821214467V) ஆகிய நான் இதுவரை காலமும் எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உள்ளபடி விஜயகாந் என்ற பெயரை பாவித்து வந்துள்ளேன். இனிமேல் எனது சகல ஆவணங்களிலும் **விஜயகாந்த்** என்ற பெயரையே பாவிப்பேன் என்று இலங்கை சோசலிச குடியரசு மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

(C-5585) **கு.விஜயகாந்த்**

## அறை வாடகைக்கு விடப்படும்
**(மாணவிகளுக்கு மட்டும்)**

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி வீதியில் யாழ் உயர் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள வீட்டில் மாணவிகளுக்கு அறையொன்று வாடகைக்கு விடப்படும். (7617)

தொடர்புகளுக்கு- **077 125 6158**

## குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ்களின் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது
**(கொழும்பு - யாழ்ப்பாணம் - கொழும்பு)**

**கட்டணம் 1000/- மட்டும்**

யாழ்.நகரில் தங்குவதற்கு குளிரூட்டப்பட்ட Hotel அறைகள் 2500/- மட்டும்.

இச்சேவைக் கட்டணம் 50/- அறவிடப்படும்.

**Discount Travels**
யாழ்ப்பாணம் - கொழும்பு
தொடர்புகளுக்கு - 076 769 9191

# மணிவிழா நன்னாளில்
## மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



**திரு. சின்னத்தம்பி பாலகிருஷ்ணன்**

**சேவைக்காலம் 1978 - 2019**
**22.02.2019**

**ஆசிரியராக 01.06.1978 - 31.12.1997**
**அதிபராக 01.01.1998 - 21.02.2019**

நிமிர்ந்த நன்நடை நிலை
தளர்ந்திடாத மனவுறுதி
பக்குவமும் பரிவும் ஒன்றிணைந்த
பண்பு மிகு முதிர் சால்புடையோன்!
மணிவிழா நன்னாளில் மனவுவந்து
வாழ்த்துகின்றோம்!
ஆசிரியராய் அதிபராய் தானேற்ற
பள்ளிகளை மாசற வாசம் செய்த
கல்விப் புலமை மிக்கோன் - கணித மேதை
கடமைக்கான பணியின்றி பணியையே
கடமையாக்கியோன்!
நிர்வாகத்தோடு இணைப்
பாட விதானத்திலும்
பொறுப்பேற்ற பள்ளிகளை மாவட்டத்தில்
புகழ்பூத்த பள்ளிகளாக்கி வெற்றி கண்டோன்
விளையாட்டு, சங்கீதம், நாட்டுக்கூத்தென
எண்ணரிய திறத்தினால் மாணவரையும்
ஆசிரியரையும் ஒன்றிணைத்து
வெற்றி பெற்றோன்
உன்னத கொள்கையால்
உறவுகளையெல்லாம்
உளமார நேசித்தமையால் அதிபர்களின்
தலைமையாய்
ஆண்டுகள் பல நீடித்தோன்!
நினதுயிர் குணநல்லாலோடும் - மாண்புறு
மக்கட் பெருஞ்செல்வத்தோடு - சேவையன்
ஓய்வு காலமதில் சிறந்தோங்கி வாழ்ந்திடவே
வாழ்த்துகின்றோம் வாழிய! வாழி!! வாழிய!!!

**அதிபர்கள் சங்கம் கிளிநொச்சி மாவட்டம்**

# பழைய மாணவர் சங்க பொதுக்கூட்ட அறிவித்தல் - 2019

**மு/குமுழமுனை மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமானது நாளை 23.02.2019 சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.**

**பழைய மாணவர் சங்கம்**
(C-5581) **குமுழமுனை ம.வி**

# நீங்காத நினைவலைகள்



பிறப்பு: 04.12.1928 இறப்பு: 02.05.1987
அமரர் **சின்னத்தம்பி மார்க்கண்டு**
**(மின் அத்தியட்சகர், இலங்கை மின்சார சபை)**

பிறப்பு: 1935.01.02 இறப்பு: 2010.03.03
அமரர் **மார்க்கண்டு பவனேஸ்வரி**

நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து பல
ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவுகள்
என்றும் எம் நெஞ்சை விட்டு அகலாது
என்றென்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**சூராவத்த. சுன்னாகம்.** (7619) **நீங்கா நினைவுடன்: குடும்பத்தினர்**

# போதைப்பொருள் பாவனை குறித்த பட்டியலை ரஞ்சன் வழங்கவில்லை

## சபாநாயகர் கருஜெயசூரிய தெரிவிப்பு

போதைப்பொருள் பயன்படுத்தும் அமைச்சர்கள் குறித்த பட்டியலை இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க இதுவரை தம்மிடம் வழங்கவில்லை என சபாநாயகர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வு நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சபாநாயகர் கருஜெயசூரிய தலைமையில் ஆரம்பமானது. இதன்போதே சபாநாயகர் கருஜெயசூரிய இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இதேவேளை, இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் குறித்த கருத்து தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சி, அவைத்தலைவர் லக்ஷ்மன் கிரியெல்ல தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவில் வாக்குமூலம் வழங்குவதற்காக இன்று காலை 9.30 மணிக்கு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க அழைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வீட்டின் மீது பெற்றோல் குண்டுத்தாக்குதல்; குற்றத்தடுப்பு பொலிஸாரால் நால்வர் கைது

## வாள்கள், கோடரிகள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்திய சந்தேகத்தின் பேரில் நால்வரைக்கைது செய்துள்ள யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு விசேட் பொலிஸார் அவர்களிடமிருந்து ஆயுதங்களையும், மீட்டுள்ளனர்.

கொக்குவில் கிழக்குப் பகுதியிலுள்ள வீடொன்றின் மீது வாள்வெட்டுக் கும்பலொன்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் தாக்குதல் நடத்தியது.

இதன்போது அங்கிருந்த வாகனங்கள் எரிந்து நாசமாகின.

இச் சம்பவம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர். இந் நிலையில் யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவினர் நான்கு பேரைக் கைது செய் துள்ளனர்.

அவர்களிடமிருந்து வாள்கள், கோடரிகள் உள்ளிட்ட ஆயுதங்களையும் மீட்டுள்ளனர்.

விசேட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டவர்களையும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட ஆயுதங்களையும் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதற்கமைய நீதி மன்ற நடவடிக்கை களை கோப்பாய்பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (இ-89-101)

# வெளிநாட்டு சிகரெட் பெட்டிகளுடன் நெல்லியடியில் நேற்று ஒருவர் கைது



(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தடைசெய்யப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுடன் நேற்றுக் காலை 9 மணியளவில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

நேற்றுக்காலை வெளிநாட்டு சிகரெட் பெட்டிகளுடன் ஒருவர் நெல்லியடிச் சந்தைப் பகுதியில் நிற்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த நபர் ஙகது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-10-60)

# 100 மில்லியன் ரூபாய் செலவில் நாடாளுமன்றில் 10 மின்தூக்கிகள்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் 10 புதிய மின்தூக்கிகளை பொருத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக 100 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்படவுள்ளன.

நாடாளுமன்றத்தின் மின்தூக்கிகள் கடந்த ஜனவரி 27 ஆம் திகதியன்று இடையில் பழுதடைந்ததன் காரணமாக 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதில் சிக்குண்ட சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான தினேஷ் குணவர்த்தன மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு வந்தமையையடுத்து சபாநாயகர் அதற்காக மன்னிப்பைக் கோரினார். (இ-7)

சிறுநீரக நோய்களுக்குச் சிகிச்சை
Ayurvedic Treatment for Renal Diseases

சிறுநீர் குறைவாகவும், வலி மற்றும் எரிச்சல் கடுப்புடன் வெளியேறல். ஆரம்ப நிலை சிறுநீரக செயலிழப்பு நிலை (Renal Failure in Primary Stage). சிறுநீரகம், சிறுநீர்பை இவற்றில் கற்கள் காணப்படுதல் (Stone in the Kidney & Bladder) கற்கள் காரணமாக ஏற்படும் வயிற்று வலி, சிறுநீர்த் தடை, இரத்தம் கலந்த சிறுநீர் வெளியேறல் மற்றும் ஆண்களில் ஏற்படும் புரஸ்தகோள (Enlargement of the Prostate gland) பிரச்சினைகள் போன்றவற்றால் சிறுநீர் கழிப்பதில் தாமதம், தடை, அடிக்கடி வெளியேற்றும் உணர்வு மற்றும் சிறுநீர்த்தொற்று (Urine Infection), கீழ்வயிற்று வலி, நித்திரை மற்றும் மனக்குழப்பம் போன்ற பிரச்சினைகளுக்கு சித்த ஆயுள்வேத முறையில் சிகிச்சைகள் பெறலாம்.

சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dcp Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

## வடக்கை அபிவிருத்தி செய்ய

# கூட்டமைப்பு அரசுடன் இணைய வேண்டும்!

## அமைச்சர் சம்பிக்க யாழில் அழைப்பு



(யாழ்ப்பாணம்)

**அரசுடன் கைகோர்த்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கை அபிவிருத்தி செய்வதற்காக எதிர்காலத்தில் அரசுடன் இணைய வேண்டும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க யாழில் அழைப்பு விடுத்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நேற்று ஆரம்பித்து வைத்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க, யாழ்ப்பாணம் புல்லுக்குளம் பகுதியில் தூர சேவை பேருந்துத்தரிப்பிட கண்காணிப்பு நிலையத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தியை இங்குள்ள பிரதிநிதிகளை இணைத்துக்கொண்டு பல திட்டங்கள் ஊடாக முறையாக செயற்படுத்தவுள்ளோம். குறிப்பாக நகரங்களை அபிவிருத்தி செய்யும் போது, சாதாரணமாக எமது நிதியைக்கொண்டு அபிவிருத்தி செய்வதை விட சில சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு நிதியைப் பெற்று மூலோபாய நகரமாக அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவைகள் இருக்கின்றன. அவ்வாறு அபிவிருத்தி செய்யும் போது, அதற்குப் பெருந்தொகையான நிதி தேவை. அதற்கு வெளிநாட்டு உதவிகளை நாடி நிற்கின்றோம்.

தற்போது இனங்கண்டுள்ள மூலோபாய அபிவிருத்தித் திட்டங்களில் யாழ்ப்பாணமும் இணைக்கப்பட்டுள்ளது. ஆகவே, மூலோபாய நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண நகரமும் அபிவிருத்தி அடையும்.

எதிர்வரும் காலங்களில் மூலோபாய நகர அபிவிருத்தித் திட்டங்களின் போது, ஏனைய நகரங்களையும் இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கின்றோம். அந்தச் சந்தர்ப்பத்தில் திருகோணமலை மற்றும் மன்னார் மாவட்டமும் உள்ளடங்கும்.

எமக்குப் பல்வேறு விதமாக பௌதீக ரீதியிலான பிரச்சினைகள் இருக்கின்றன. மழைநீர் வழிந்தோடும் வடிகால்கள் எவ்வாறு உள்ளன என்பது பற்றித் தெரியாது. அவை மிக முக்கியமானவை. அதைவிட மின்சாரமும் மிக முக்கியமான விடயம். கழிவு முகாமைத்துவம் மிக முக்கியமானது. விசேடமாக, திண்மக்கழிவு முகாமைத்துவம் அதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படும்.

சில அடிப்படை வசதிகள் அரசாங்கத்தால் செய்யப்பட வேண்டும். அந்த வசதிகளை திட்டமிட்ட வகையில் செய்து தருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வோம்.

அதேநேரம், இன்னுமொரு முக்கிய விடயத்தை குறிப்பிட வேண்டும். நீலன் திருச்செல்வம், தேசிய அரசியலில் நீரோட்டத்தில் இணைந்து அமைச்சராக இருந்து இந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையை முன்னெடுத்தார். அதற்குப் பிறகு, பல அரசியல் கட்சிகள் இருந்தும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அமைச்சர்கள் இருக்கவில்லை. ஆகவே, தான் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனிடம் ஒன்றைக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

இன்று அரசாங்கத்துடன் கைகோர்த்துக்கொண்டு இருப்பது போன்று, எதிர்காலத்தில் அரசாங்கத்தில் இணைந்துகொண்டு, இந்தப் பிரதேச மக்களின் அபிவிருத்திக்காக உழையுங்கள். அப்போது, இந்த மக்களுக்கு தேவையான சேவைகளைச் செய்ய வாய்ப்புக் கிடைக்கும்

இந்த மக்களுக்குத்தேவையான அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அந்த வகையில், நாம் திட்டமிட்டவாறு அபிவிருத்தி நடவடிக்கை முன்னெடுக்க வேண்டும். அரசியல்வாதிகள், அனுசரணை அரசியல்செய்து கொண்டிருக்கின்றார்கள்.

திட்டமிட்டவகையில் அரசியலை முன்னெடுக்கவில்லை. அவர்களின் பிரதேசத்தை மட்டுமே அபிவிருத்தி செய்கின்றார்களே தவிர, பொதுவான எண்ணக்கருவுடன் செயற்படுத்த வேண்டுமென்ற சிந்தனையுடன் செயற்படுவதில்லை.

இந்தக் குறைபாடுகளைக் களைந்து, எதிர்காலத்தில் திட்டமிட்டவாறு இந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வோம். அதற்கான ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அதேநேரம், மக்களின் ஒத்துழைப்புடனும், மக்கள் பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடனும், இந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய எங்களுடன் கைகோர்த்து செயற்பட முன்வருமாறு சம்பிக்க மேலும் தெரிவித்தார். (இ-9-101)

# அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள பட்ஜெட் முக்கியத்துவம் வாய்ந்தது

## நிதியமைச்சர் மங்கள தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் தனியார்த் துறையினருடன் மேலும் நெருக்கமாக செயற்பட எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்த நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர, அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத் திட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் எனவும் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள வர்த்தக சமூகத்தினர்மற்றும்கொள்கை வகுப்பாளர்களுக்கு இடையில் நெருக்கமான இடைத் தொடர்பினை ஏற்படுத்தி, பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இலங்கையிலுள்ள அமெரிக்க வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த சந்திப்பு நிகழ்வொன்று ஹில்டன் ஹோட்டலில் நேற்று நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நிதியமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

நாட்டில் கடந்த ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி நிலை நாட்டின் பொருளாதாரத்தை மிக மோசமாகப் பாதித்தது. வெளியகப் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட பாதிப்புக்களை டிசெம்பர் 17 ஆம் திகதியின் பின்னர் சீர் செய்து வருகின்றோம்.

இந் நிலையில் சர்வதேச நாணய நிதியத்தால் இடைநிறுத்தப்பட்ட கடனுதவியைப் பெற்றுக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளை வோஷிங்டனில் நடத்தியிருந்தோம்.

தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்து உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் மத்திய வங்கியுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் மங்கள தெரிவித்தார். (இ-7)

# அடேங்கப்பா இங்கிலாந்து

## மே.தீவுகளை 'விரட்டி விரட்டி' அடித்தது



சதம் அடித்த ஜோ ரூட் எகிறிக் குதித்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தியபோது...

ஜேசன் ரோய், ஜோ ரூட் சதம் கடந்து கைகொடுக்க மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கிறிஸ் கெய்ல் சதம் வீணானது.

மே.தீவுகள் - இங்கிலாந்து அணிகள் மோதிய முதல் ஒரு நாள் போட்டி பிரிட்ஜ டவுனில் நடந்தது.

நாணயச்சுழற்சியில்வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மே.தீவுகள் அணிக்கு ஜோன் கேம்ப்பெல் (30) நல்ல ஆரம்பம் கொடுத்தார். பொறுப்பாக ஆடிய ஷேய் ஹோப் (64) அரைசதம் கடந் தார். மறு முனையில் அசத்திய கிறிஸ் கெய்ல் (135) சதமடித்தார். ஷிம் ரான் ஹெட்மையர் (20), டரன் பிராவோ (40) ஆறுதல் கொடுத்தனர். நிக்கோலஸ் பூரன் (0), அணித் தலைவர் ஹோல்டர் (16), கார்லஸ் பிராத்வைட் (3) ஏமாற்றினர்.

50 ஓவர்கள் நிறைவில், மே.தீவுகள் அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 360 ஓட்டங்களை எடுத்தது. ஆஷ்லே நர்ஸ் (25), தேவேந்திர பிஷூ (9) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் ஸ்ரோக்ஸ், ரஷித் தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற் றினர்.

**ரோய் - ரூட் ஜோடி**

சவாலான இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணிக்கு ஜொனி பேர்ஸ்டோவ் (34) சிறப்பாக ஆரம்பம் கொடுத்தார். பின் இணைந்த ஜேசன் ரோய், ஜோ ரூட் ஜோடி விண்டீஸ் பந்துவீச்சை அடித்து நொருக்கியது. அசத்தலாக ஆடிய ஜேசன் ரோய் சதம் கடந்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக 114 ஓட்டங்களைச் சேர்த்த போது ஜேசன் ரோய் (123) ஆட்டமிழந்தார். அணித் தலைவர் ஒய்ன் மோர்கன் (65) அரைச் சதத்தை பதிவு செய்தார். மறுமுனையில் கைகொடுத்த ஜோ ரூட் (102) தன்பங்கிற்கு சத மடித்தார். ஹோல்டர் பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய பட்லர் வெற்றியை உறுதி செய்தார்.

இங்கிலாந்து அணி 48.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 364 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. பென் ஸ்ரோக்ஸ் (20), ஜொஸ் பட்லர் (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



சதம் அடித்த ஹெய்ல்



ஜேசன் ரோய்

### 5000 ஓட்டங்கள்

அபாரமாக ஆடிய ஜோ ரூட், ஒரு நாள் போட்டி அரங் கில் 5000 ஓட்டங்களை எட்டிய 4வது இங்கிலாந்து வீரரானார். இதுவரை இவர், 122 போட்டிகளில், 14 சதம், 29 அரைசதம் உட்பட 5048 ஓட்டங்கள் குவித்துள்ளார். முதல் மூன்று இடங்களில் முறையே இயான் மார்கன் (5878 ஓட்., 190 போட்டி), இயான் பெல் (5416 ஓட்., 161 போட்டி), போல் கொலிங்வுட் (5092 ஓட்., 197 போட்டி) உள்ளனர்.

### 488 சிக்சர்

அசத்தலாக ஆடிய மே.தீவுகள் அணியின் கிறிஸ் கெய்ல், ஒருநாள் போட்டியில் தனது 24 வது சதத்தை பதிவு செய்தார். இவர், 129 பந்துகளில், 12 சிக்சர், 3 பவுண்டரி உட்பட 135 ஓட்டங்கள் குவித்தார். இவர், தனது முதலாவது சிக்சரை அடித்தபோது, டெஸ்ட், சர்வதேச ஒரு நாள், சர்வதேச 'ரி20' போட்டிகளில் ஒட்டு மொத்தமாக அதிக சிக்சர் விளாசிய வீரர்கள் பட்டியலில் பாகிஸ் தனின் அப்ரிடியை (476 சிக்சர், 524 போட்டிகள்) முந்தி முதலிடம் பிடித்து புதிய உலக சாதனை படைத்தார். இதுவரை கெய்ல், 444 போட்டிகளில், 488 சிக்சர் பறக்க விட்டுள்ளார்.

### 364 ஓட்டங்கள்

மே.தீவுகளுக்கு எதிராக 364 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி, ஒரு நாள் போட்டி வரலாற்றில் அதிக ஓட்டங்களை 'சேஸ்' செய்த அணிகளுக்கான பட்டியலில் 3வது இடம்பிடித்தது. முதலிரண்டு இடங்களில் தென்னாபிரிக்க அணி (438 ஓட்., எதிர் ஆஸி., இடம்: ஜொகனஸ்பேர்க், 2006 மற்றும் 372 ஓட்., எதிர் ஆஸி., இடம் டர்பன், 2016) உள்ளது.

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

**சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான 01.03.2019 - 31.12.2019 வரையுள்ள காலப்பகுதிக்கான பகிரங்க ஏலக் கேள்வி அறிவித்தல்**

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 01/03/2019 - 31/12/2019 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக பகிரங்க ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலம் 27/02/2019 காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் கேள்வி வைப்புப் பணத்தினை செலுத்தி பற்றுச்சீட்டினை22/02/2019 தொடக்கம் 27/02/2019 முற்பகல் 10.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | குத்தகை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஆகக் குறைந்த ஏலத் தொகை (வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 38400.00 | 100.00 |
| 02 | கோயிற்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1500.00 | 150,000.00 | 100.00 |
| 03 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 5000.00 | 498,200.00 | 100.00 |
| 04 | உடுப்பிட்டிச் சந்தை கோழிக்கடை | 2000.00 | 192,200.00 | 100.00 |
| 05 | உடுப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 4000.00 | 409,000.00 | 100.00 |

இதற்கான ஏலக் கேள்வியில் கலந்து கொள்பவர்கள் மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணத்தினை 2019/02/27ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் செலுத்துவதுடன், சித்திரக் கேள்விக்காரர் உடனடியாக ஏலத் தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்புப் பணம், VAT, NBT ஆகியவற்றைச் செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டும். பாதுகாப்பு வைப்புப் பணம் உடனடியாக செலுத்தத் தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகை வழங்கப்படும்.

க.த.ஐங்கரன்
தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
22/02/2019. (C-5578)


**நீரிழிவு நோயா? மற்றும் அதிக உடற் பருமனா? இதோ**

TEASTAR
REFRESHING THE WORLD

நிறுவனம் யாழ்ப்பாணத்தில் பலரது நிவாரணியாகவும் நம்பிக்கையையும் வென்று இப்போது உங்கள் வவுனியா நகரில்.

**இலவச மருத்துவ பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை விளக்கங்கள்**

ஆண்மை அதிகரிக்க, நீரிழிவு மற்றும் அதிக உடற்பருமனை குறைத்து ஆரோக்கியமாக வாழ மற்றும் அல்சல் நோய், மனஅழுத்தம், மற்றும் தூக்கமின்மை குறைபாடு போன்றவற்றிற்காக நாம் வழங்கிய வெற்றிகரமான எமது மருத்துவ பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகளுடன் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

**வாருங்கள் அழைத்து வாருங்கள்...**

100% இயற்கையானது, 04 வாரங்களில் தீர்வு

இடம் : நகரசபை மண்டபம், வவுனியா
காலம்: **22 & 23** (வெள்ளி மற்றும் சனி)
நேரம் : மு.ப. 9.00 முதல் பி.ப. 7.00 மணி

முற்பதிவுகளுக்கு அழையுங்கள்
0770 811 880 / 0770 812 666






யாழ்.வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் ஜே.ஏ.தவநாயகம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன்,ஏனைய விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்விப்பணிப்பாளர் நா.சிவநேசன், யாழ்.பல்கலைக்கழ சிரேஷ்ட உதவி நூலகர் இ.குபேசன், வாதரவத்தை ஜே/280 கிராம உத்தியோகத்தர் கா.குகதாஸ், பொதுச்சுகாதார பரிசோதகர் ஜீ.அனுதர்சன், கல்வி இராஜாங்க அமைச்சின் இணைச் செயலர் எஸ்.கவிகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### "போதைப்பொருள் கடத்தல் முக்கிய பிரச்சினை இல்லை"

# திட்டமிடப்பட்ட குற்றங்களைப் புரிந்தவர்கள் மக்கள் பிரதிநிதியாவதை நிறுத்த வேண்டும்

## தேர்தல்கள் ஆணையாளர் தேசப்பிரிய வலியுறுத்து



(கொழும்பு)

திட்டமிடப்பட்ட வகையில் குற்றங்களை புரிந்தவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக மாறுவதற்கு இடமளிக்கப்படுகின்றமை நிறுத்தப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் போதைப் பொருள் கடத்தல்கள் தொடர்பில் அதிகம் பேசப்படுகிறது என்றாலும் அது நாட்டின் முக்கிய பிரச்சினை இல்லை.

திட்டமிட்ட குற்றங்களை புரிகின்றவர்கள் தேர்தல்களில் நின்று மக்கள் பிரதிநிதிகளாக மாறுவதற்கான வாய்ப்பு இருக்கின்றமையே நாட்டின் முதலாவது பிரச்சினையாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு நேற்று கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## பொதுக்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)


தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தலுக்கான விசேட பொதுக்குழுக் கூட்டம் நாளை மறுதினம் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல.1077, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமைச் செயலகத்தில் நடைபெறும். (இ-5)

## மருத்துவ முகாமும் கருத்தரங்கும்

கொமர்ஷல் வங்கியில் அனுசரணையுடன் நடத்தப்படும் ஓய்வூதியர்களுக்கான மருத்துவ முகாமும் வங்கியின் கடன் திட்டம் பற்றிய கருத்தரங்கும் நாளை 23 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை "ரில்கோ" ஹோட்டலில் நடைபெறும். (இ-5)

### பேராசிரியர் திஸ்ஸ தலைமையில்

# மண் விநியோகம் குறித்து யாழில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மண் விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சங்கிலியன் வீதியில் அமைந்துள்ள யூரோவில் மண்டபத்தில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் இடம்பெறும்.

இதில் யாழ்.மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மண் விலையேற்றம், மண் தட்டுப்பாடு போன்ற விடயங்கள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன.

இதில் கட்டடப் பொருள் விற்பனையாளர்கள்,மண் விநியோகச் சாரதிகள், பொது மக்கள் என அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-10)

# இராசி பலன்

**மீனம்:** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**மேடம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், நல்ல வர்களின் அறிவுரையும், ஆதரவும் கிடைக்கும், கௌரவமான நாள்.

**இடபம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்:** பொதுக்காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள்,தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்:** கடவுளை வழிபட்டு தொடங்க வேண்டிய நாள், மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, வேலைச்சுமை கூடும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| | செவ் | | ராகு |
| சூரி, புத | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூரட்டாதி | | |
| | | | |
| சனி, கேது, சுக் | குரு | | சந் |

**22.02.2019**

மாசி 10, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.27மணிக்கு

திருதியை பிற்பகல் 3.36 மணிவரை

அத்தம் பின்னிரவு 5.19 மணிவரை

சுபநேரம் 6.31 - 8.01 மணிவரை

இராகுகாலம் 11.01 - 12.31 மணிவரை

சங்கடகர சதுர்த்தி, அமிர்தசித்தம்

வளவன்

**கடகம்:** பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், நிதி நிலை உயரும்நாள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு ஆன்மீக நாட்டம் கூடும் நாள்.

**மகரம்:** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்:** இறைவழிபாட்டால் இன்பங்கள் கூடும் நாள், வாக்கு மேன்மையுண்டு, ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


**தனுசு:** வாழ்க்கைத்தரம் உயர வழி வகை செய்வீர்கள், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், கௌரவமான நாள்.

**விருச்சிகம்:** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம் கௌரவமான நாள், விருந்தினர் வருகையுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**துலாம்:** ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை ஏற்படலாம், கூட்டாளிகளிடம் கூடுதல் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கன்னி:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், குடும்பத்தினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

# அமைச்சர் சம்பிக்க யாழ்.விஜயம்; பல்வேறு திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்





(யாழ்ப்பாணம்)

ஜாதிக ஹெல உறுமய வின் தலைவரும் மேல் மாகாண மற்றும் நகர அபி விருத்தி அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க யாழ்ப்பாணத்திற்கு நேற்றுக் காலை விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இதன் போது யாழ்ப் பாண மாவட்டத்தை மைய மாக கொண்டு மேற்கொள் ளப்படும் அபிவிருத்தி வேலைகளைப் பார்வை யிட்டதுடன் புதிய அபிவிருத் திப் பணிகளையும் ஆரம் பித்து வைத்தார்.

முதலில் யாழ். புகை யிரத நிலையம் முன்பாக ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை ஆரம்பித்து வைத்த அமைச் சர் சம்பிக்க யாழ். நீதிமன்றத் தொகுதி க்கு முன்பாக யாழ்ப்பாணம் நிர்வாகத் தொகுதிக்கான அடிக்கல்லை நாட்டி வைத் தார். இதன் பின்னர் தூர சேவை பேருந்துச் தரிப்பி டத்திற்கான அடிக்கல்லை யும் நாட்டி வைத்தார்.

இந் நிகழ்வுகளில் வட க்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், யாழ் மாநகர முதல்வர் இ.ஆனே ல்ட்,மாநகர சபை உறுப்பி னர்கள்,அரச அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-




## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்) தேசிய ரீதியிலான பொது அறிவு, நுண்ணறிவு விரிவுரையாளரும், அளவையியல் ஆசிரி யரும் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பிரதி அதிபருமான பத்மநாதன் கமலதாசன் கடந்த 11 ஆம் திகதி யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து தொண்டார். (5-9)

## பதிவு செய்யப்பட்ட நூலகங்களுக்கு ரூ. 10,000 பெறுமதியான நூல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட நூலகங்களு க்கு 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நூல்கள் வழ ங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட கலாசார அலுவல் கள் திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர் எஸ்.கிருஷ்ணகுமார் தெரி வித்தார்.

இலங்கை வீடமைப்பு மற்றும் கலாசார அமைச் சால் முன்னெடுக்கப்படும் "நணஹர" திட்டத்தின் கீழ் இந் நூல்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளதா கவும் இந் நூல்களைப் பெற விரும்பும் நூலகங்கள் 15.03.2019 இற்கு முன்னர் தங்கள் பிரதேச செயலக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

இருபாலை சி.சி.த.க. பாடசாலையும் பாலர் சர்வதேச பாடசாலையும் இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் ஆ.பாலச் சந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக யாழ்.கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் மற்றும் "டஸர் நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் சாரா சிஷ்னல் ஆகியோர் கலந்து கொள்வர். (5-10-136)

(யாழ்ப்பாணம்)

யாழ்.வளலாய் அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியும் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் க.ரவீந்தி ரன் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவன்அறக் கட்டளை நிறுவுனர் வே. கணேஸ்வரன் கலந்து கொள்வார். (5-10-136)

## 198 மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் திறமையாக சித்தியெய்திய இலங்கை வங்கியின் Ran kekulu புலமைப்பரிசில் திட்டத்திற்கு தகுதி பெற்ற வடமாகாணத் தைச் சேர்ந்த 198 மாண வர்கள் இலங்கை வங்கி யால் கௌரவிக்கப்பட்ட வுள்ளனர்.

இந் நிகழ்வு யாழ். மாவட்டத்தில் யாழ். கிறீன் கிறாஸ் ஹோட்டலிலும் வன்னி மாவட்டத்தில் வவுனியா ஓவியா ஹோட்ட லிலும் இன்று வெள்ளிக் கிழமை நடைபெறும் என இலங்கை வங்கி வடமா காண உதவிப் பொது முகா மையாளர் அறிவித்துள் ளார். (இ)

## பாவனையாளர் சட்டத்தை மீறியவர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் சட்ட த்தை மீறிய யாழ்.மாவட்ட வர்த்தகர்களுக்கெதிராக நேற்றைய தினம் யாழ். நீதவான் நீதிமன்றில் 3 வழக்குகள் தாக்கல் செய் யப்பட்டு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாக பாவனையாளர் அலுவல் கள் அதிகார சபையின் வடமாகாணப் பணிப்பாளர் முகமட் சாவிக் தெரிவித்தார்.

யாழ்.நகரப்பகுதியை அண்டிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே அதிகார சபையின் சட்ட திட்டங்களை மீறிய வர்த் தகர்களுக்கெதிராக வழக் குத் தாக்கல் செய்யப்பட்டு நீதி மன்றத்தில் அபராதம் அற விடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (5-10)

## சுகாதாரத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபை யினர் ஒப்பந்த அடிப்படை யில் சுகாதாரத் தொழிலா ளர்களை உள்வாங்கும் போது அவர்களுக்கு குறை ந்தது நாளாந்தம் ஆயிரம் ரூபாயாவது வழங்க வேண் டும் என சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் ம.நடன தேவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்ப ளத்தை ஆயிரம் ரூபாயாக உயர்த்துமாறு ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு நாம் ஒப் பந்த அடிப்படையில் வேலைக்கு அமர்த்துபவர் களுக்கு அறுநூறு ரூபாய் வழங்குவது எந்த வகை யில் நியாயமாகும்?

குறைந்த சம்பளத்தை வழங்குவதனால் தான் அவர்கள் கடமை நேரத் தில் கடமைக்கு சமுகமளிக் காமல் வேறு வேலைகளுக் குச் செல்கின்றனர். தற்போ தைய விலைவாசிகளின் படி நாளாந்தம் ஆயிரம் ரூபாய் என்ற தொகை நியா யமானதாகக் காணப்படு கிறது என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.(5-30)

## சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தின த்தை முன்னிட்டு சிறகுகள் அமையம், பாடசாலை மாண வர்களுக்கிடையேயான கட் டுரைப் போட்டியினை நடத் தவுள்ளது.

இப்போட்டிகள் கீழ் வரும் வயதுப் பிரிவுகளில் ஒழுங் கமைக்கப்பட்டுள் ளது.

தரம் 4,5 மாணவர்க ளுக்கு 1.அம்மாவும் நானும், 2.எனக்குப் பிடித்த சாத னைப்பெண், 3.பெண் தெய் வங்கள் எனும் தலைப்பு களிலும், தரம் 6,7 மாண வர் களுக்கு, 1. குடும்பமும் பெண்களும், 2.எனக்குப் பிடித்த மூதாட்டி, 3.பெண் பிள்ளைகளும் பெற்றோ ரும் எனும் தலைப்புகளி லும், தரம் 8,9 மாண வர்க் ளுக்கு 1.பெண் கல்வியின் முக்கியத்துவம், 2.என்னை கவர்ந்த பெண்விஞ்ஞானி ,3. பெண்களும் சுகாதாரமும், எனும் தலைப்புகளிலும் தரம் 10,11 மாணவர் களு க்கு 1.பெண்களும் பால் நிலைசமத்துவமும், 2.பெண் ணடிமைத்தனமும் பெண்க ளின் சுதந்திரமும் 3.இலக் கியத்தில் பெண்களும் அவர் தம் வகிபாகமும் எனும் தலைப்புகளிலும் தரம் 12,13 - மாணவர்களுக்கு 1.பெண்களும் உரிமைக ளும், 2.தமிழ் சமூகத்தில் பெண்களின் வகிபாகம் 3.நவீன உலகத்தில் பெண் ணியம் எனும் தலைப்புகளி லும் திறந்த பிரிவு- 1. 20 ஆம் நூற்றாண்டின் பின் னர் தமிழ் சூழலில் பெண் கல்வி, 2.பால்,பாலியல் மற்றும் பெண்ணியம் பற் றிய சமூக நோக்கு, 3.பெண் கள்,ஆண்கள் மற்றும் மாற் றுப் பாலினத்தவர் தொடர் பில் சமகால பிரச்சினை களும் தீர்வுகளும் எனும் தலைப்புக்களிலும் போட் டிகள் நடைபெறவுள்ளன.

கட்டுரைகள் மார்ச் 5 ஆம் திகதிக்கு முன்னர் சஜீவா ஜெயக்குமார் (ஒருங் கிணைப்பாளர்), சிறகுகள் அமையம், கைதடி தெற்கு, கைதடி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண் டும். மேலதிக தகவல்க ளுக்கு ஜெ.சஜீவா +94 77 664 6607, பி.பிறேமிஷா: 072 195 9571 என்ற தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (5)

## ஹனுமான் சாலிசா பாராயணம்

(யாழ்ப்பாணம்)

இராம்போத (Ramb oda) ஸ்ரீபக்த ஹனுமான் ஆலயத்தில் 108 ஹனு மான் சாலிசா பாராயணம் மற்றும் ஹோமம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கி ழமை காலை 6 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெறும்

இச் சங்கல்ப பூசை மற் றும் ஹோமத்தில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர் கள் தங்கள் பெயர்களை இன்று நண்பகல் 12 மணிக்கு முன்பாக யாழ். சின்மயா மிஷன் அலுவலகத் தில் பதிவு செய்யுமாறு கேட் டுக்கொள்ளப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இரு ந்து நாளை 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணியளவில் பயணம் ஆரம்பமாகும் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களு க்கு 021 222 3447, 077 857 3447 ஆகிய தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.(5)




யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் திறன் வகுப்பறைத் திறப்பு விழா நேற்று முன்தினம் புதன்கிழமை பாடசாலை அதிபர் வை. விஜயகுமாரன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் கலந்து கொண்டார். (படங்கள்: வரணி செய்தியாளர்)

# ஜெனிவாவில் மேற்குலக நாடுகளின் தேவைக்கேற்பவே காய்நகர்த்தல்

## அருட்தந்தை சக்திவேல் சுட்டிக்காட்டு



(ஜெனிவா)

ஜெனிவா கூட்டத் தொடரிலும் மேற்குலக நாடுகளின் தேவைக்கேற்பவே காய்கள் நகர்த்தப்படுவதாக சுட்டிக்காட்டிய அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல், ஜெனிவாவில் நடைபெறுகின்ற மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடருக்கு இலங்கையிலிருந்து பிரதிநிதிகள் செல்வது ஓர் சுற்றுலாப்பயணம் போன்றே உள்ளது எனவும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் இங்கிருந்து ஜெனிவா செல்பவர்களுக்கு இடையில் இடைத்தொடர்போ, புரிதலோ இல்லை. ஜெனிவாவில் தாம் எவ்விடயம் தொடர்பில் பேசப்போகின்றோம், எத்தகைய அழுத்தத்தை வழங்கப் போகின்றோம் என்ற திட்டமிடல் இல்லை. இலங்கையிலிருந்து ஜெனிவா செல்பவர்கள் ஓர் தனிநபரின் பிரச்சினைக்காகச் செல்லவில்லை. மாறாக ஒரு இனத்தின் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அநீதிக்கு தீர்வு பெறும் நோக்கிலேயே செல்கின்றார்கள் என்ற தெளிவிருக்க வேண்டும்..

இலங்கை தொடர்பில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையும் போதியளவு அழுத்தத்தை வழங்கவில்லை என்பதே உண்மையாகும்.

காரணம் தற்போதைய அரசாங்கத்தை பாதுகாப்பதொன்றே மேற்குலக நாடுகளின் தேவைப்பாடாக உள்ளது. எனவே இந்த அரசாங்கத்திற்கு பாரிய அழுத்தங்களை வழங்குவதற்கு அவர்கள் முன்வர மாட்டார்கள். ஜெனிவா கூட்டத் தொடரி லும் மேற்குலக நாடுகளின் தேவைக்கேற்பவே காய்கள் நகர்த்தப்படுகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் வித்தியாலய வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி யோ.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக தீவகக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) ஜெ.ஞானசீலன் சிறப்பு விருந்தினராக தீவகக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் (வழிகாட்டலும் ஆலோசனையும்) திருமதி சு.அரசரட்ணம், புங்குடுதீவு உலக மையத் தலைவர் பி.சதீஸ் கௌரவ விருந்தினர்களாக வட இலங்கை சர்வோதய புங்குடுதீவு அறங்காவலர் பொ.ஜமுனாதேவி, புங்குடுதீவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வ.அபராஜ், புங்குடுதீவு ஐலண்ட் வியூ ஹொட்டல் உரிமையாளர் சபா.மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)





இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

**றோயல் குளுக்கோஸ்**

உங்கள்வியாபாரிகளிடம்நீங்கள்குளுக்கோஸ்வாங்கும்
போதும் குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

PACKED BY: ROYAL Industries® Colombo 12,
T.P: 077 727 7670

அனைத்து பாமஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்கள்: சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P:-021 222 2567



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 4
கி.பா: 33 3/4 செவ் 8 ல்
உயரம்: 175cm
தகைமை/தொழில்: M.Sc, Transit Inspecter, Canada
எதிர்பார்ப்பு: மிருகவைத்தியர்
தொ.இ: B/9356

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அனுசம் 2
கி.பா: 81/2செவ் 2 ல்
தகைமை/தொழில்:பட்டதாரி, கட்டடபொறியியலாளர்
தொ.இ: B/9357

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்:சித்திரை 3
உயரம்: 6'
தகைமை/தொழில்:Q.S , Technical Officer
தொ.இ: B/9358

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 44 1/2செவ் 7 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L, காப்புறுதி நிதிஆலோசகர்
எதிர்பார்ப்பு: A/L
தொ.இ: B/9345

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2 செவ் 8 ல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:BA,வங்கி
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/9397

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: கேட்டை 1
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:HNDA Following
எதிர்பார்ப்பு: அரசதொழில்
தொ.இ: G/9398

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா:52 1/4 சூரி செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: அரச, தனியார் சுயதொழில
தொ.இ: G/2393

பிறப்பு: 1970 இந்து
நட்சத்திரம்: புரட்டாதி 4
கி.பா: 39 உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA, அரச பதவி நிலை அலுவலகர்
எதிர்பார்ப்பு: அரச, தனியார் சுயதொழில்
தொ.இ: G/2394

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



வாழ்க வளமுடன்

# பிறந்த தின வாழ்த்தும் பாராட்டு வாழ்த்தும்



**22.02.2019**

**சத்தியமோகன் சோபிகா**

யா/புற்றளை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று 2018 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 176 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த எமது செல்வப் புதல்வி ச.சோபிகா(யாமினி) அவர்களை 11 ஆவது பிறந்த தினத்தன்று வாழ்த்துவதோடு இன்னும் பல கலைகளில் சித்தியடைந்து பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

இவரை கற்பித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வல்லிபுரம், பருத்தித்துறை

வாழ்த்துவோர்: அப்பா - மோகன்
அம்மா- உதயா,அண்ணா, தம்பி,
அம்மம்மா,அப்பப்பா அன்ரா



இணுவில் திருப்பதி

அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய

# இலட்சார்ச்சனை விழா 2019

**22.02.2019-03.03.2019 வரை**

கோவிந்தன் அடியார்களே!

வேண்டுவார்க்கு வேண்டுவன தந்தருளும் வண்ணம் கோவில் கொண்டிருக்கும் நித்திய கல்யாண மூர்த்தியாக அருள்பாலிக்கும் ஸ்ரீநிவாசப் பெருமானுக்கு நிகழும் விளம்பி வருடம் மாசித் திங்கள் 10ஆம் நாள் (22.02.2019) தொடக்கம் மாசித்திங்கள் 19ஆம் நாள் (03.03.2019) திருவோண நட்சத்திரம் கூடியுள்ள நன்னாள் வரை இலட்சார்ச்சனை நடைபெற திருவருள் கூடியுள்ளது. தச அவதார மூர்த்தியான எம்பெருமானுக்கு பத்து ஆச்சாரியர்கள் ஒன்றுகூடி எம்பெருமானுக்கு இக்கைங்கரியம் நடைபெறவுள்ளதால், அடியார்கள் யாவரும் இவ்வாலயத்திற்கு வந்து, இந்த அர்ச்சனையிலும், தினமும் நடைபெறும் மகாயாகத்திலும் கலந்து கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

**தினமும் மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகி 7.00 மணிக்கு நிறைவடையும்**

01 ஆம் நாள் (22.02.2019) மஹா சுதர்சன சக்கர ஹோமம்- வீரம் பெறவும் மற்றும் சகலவித தடை விலகவும்
02 ஆம் நாள் (23.02.2019) கயக்கிரீவ ஹோமம்/மேதாசூக்த ஹோமம் - சிறந்த கல்வியைப்பெற
03 ஆம் நாள் (24.02.2019) தன்வந்திரி ஹோமம்/ஆயுஷ்ய ஹோமம் - நோய் நொடி நீங்க
04 ஆம் நாள் (25.02.2019) இலக்ஷ்மி நரசிம்ம ஹோமம் - தீயசக்திகளில் இருந்து விலகி இலட்சுமி கடாட்சம் பெற
05 ஆம் நாள் (26.02.2019) சந்தான கோபால ஹோமம் - பிள்ளைப்பாக்கியம் பெறுவதற்கு
06 ஆம் நாள் (27.02.2019) இலட்சுமி ஹோமம்/தன ஆகர்ஷண லக்சுமி ஹோமம்- ஸ்ரீசூக்த ஹோமம் - செல்வம் பெறுவதற்கு
07ஆம் நாள் (28.02.2019) நாராயண சுத்த ஹோமம், புருஷ சுத்த ஹோமம் - சர்வசித்தி
08 ஆம் நாள் (01.03.2019) சம்பரண சுத்த ஹோமம்-நாட்டில் உள்ள குழப்பங்கள் நீங்க
09 ஆம் நாள் (02.03.2019) விஷ்ணு சகஸ்ரநாம ஹோமம் - சர்வ சித்தி
10 ஆம் நாள் (03.03.2019) பகவத் கீதா ஹோமம் - சர்வசித்தி பெறல், மகா பூர்ணாகுதி, தாரா ஹோமம், மாலை 2.00 மணிக்கு பகவத் கீதா ஹோமம் ஆரம்பமாகி மாலை 6.00 மணியளவில் பூர்ணாகுதியும் விஷேட பூஜையும் தொடர்ந்து திருவேங்கடேஸ்வரப் பெருமானுடன் கும்ப வீதியுலா இடம் பெற்று கும்ப சம்புரோட்சணம் நடைபெறும்.

**முக்கிய குறிப்பு:** விஷேட ஹோமங்கள் நடைபெறுவதால் அடியார்கள் தங்களின் வேண்டுதலுக்கேற்ப ஹோமத் திரவியங்களை ஆலயத்திற்கு சமர்ப்பிக்க முடியும். தொடர்புகளுக்கு ஆலய காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல. :
021 224 2300, 077 725 2476


(c-3874)

ஆலய தர்மகர்த்தா
ச.கணேசலிங்கம்

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# பாம்புகளை அடையாளம் காண்போம்

## வடமாகாணத்தில் காணப்படும் சில பாம்பினங்கள்



உரு 17: மலைப்பாம்பு/வெங்கடாந்திப்பாம்பு முதுகுப்புறத்தோற்றம்

**மலைப்பாம்பு/வெங்கடாந்திப்பாம்பு - உரு 17 (Python molurus – Python / Rock python)**

இது வடமாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவுக் காட்டுப் பகுதிகளில் சாதாரணமாகப் பார்க்கக்கூடிய ஓர் நஞ்சற்ற பாம்பாகும். தற்போது யாழ்ப்பாணத்தில் தென்மராட்சிப்பகுதிவரை பரம்பலைக் காட்டுகின்றன. இவையும் தலை மற்றும் முதுகுப்புறத்தில் கிட்டத்தட்ட முத்திரைப் புடையன்களிலுள்ள திட்டுக்களை ஒத்த உடலமைப்பைக் கொண்டிருக்கும். ஆனால் அவை மஞ்சள், பழுப்பு மற்றும் மண்ணிறம் கலந்த கலவையாக இருக்கும். இவை கிட்டத்தட்ட 5 - 6 அடிவரை வளரக்கூடியவை. சற்றே நீண்ட தலையையும் அழுத்தமான செதிலைக் கொண்ட பருத்த நீண்ட உடலையும் ஒப்பீட்டளவில் குறுகிய வாலையும் கொண்டவை.

இவை காலை, மாலை இரவு என எல்லா வேளைகளிலும் நடமாடக்கூடியவை. இவற்றின் பாரிய உடலமைப்பினாலேயே மக்களிடையே பிரபலம் வாய்ந்தவை. வெங்கடாந்திப்பாம்பு காடுகளில் வாழும்போது தமது வால் பகுதியை மரக்கிளைகளில் சுருட்டிக் கொண்டு மிகுதியுடலை ஆலம் விழுதுகள் போன்று கீழேவிட்டபடி இருக்கும். விலங்குகள் இவற்கை கடக்கும்போது சட்டென அவற்றைச் சுற்றி வளைத்துக் கொள்ளும். தரையில் புற்களிற்கிடையே அல்லது முள்ளம்பன்றிகளின் பொந்துகளிற்கிடையேயும் காணப்படலாம்.


உண்மையில் இவை காடுகளில் வாழும்போது அவற்றிற்குரிய சமநிலையில் காணப்படும் ஆனால் இவை மக்கள் வாழும் பிரதேசங்களில் இவற்றிற்குரிய இயற்கை எதிரிகள் இல்லாத நிலையில் நுழையும்போது சாதாரண பூச்சிகள் எவ்வாறு பீடை நிலைக்கு மாறுகின்றனவோ அவ்வாறே இவை ஓர் பீடைபோன்று மாறுகின்றன. இவற்றிற்குப் பசி வந்துவிட்டால் கண்ணில் பட்டதெதையும் விட்டு வைக்காது. ஆகவே வெங்கடாந்திப்பாம்பு ஒன்று மனிதக்குடியிருப்பினுள் நுழைந்து விட்டால் அவற்றை மீண்டும் காட்டினுள் விடுவதே சாலச்சிறந்ததாகும்.

இனி இன்னொருவகைப் புடையனான சுருட்டை பற்றிப் பார்ப்போம். முன்பே குறிப்பிட்டதுபோல இலங்கையிலுள்ள அதிகூடிய விஷத்தன்மையுள்ள பாம்பினங்களில் ஒன்றாக இருப்பதுடன் வடமாகாணத்தில் மணல் பாங்கான பிரதேசங்கள் யாவிலும் இது தனது பரம்பலைக் காட்டுகின்றது.

**சுருட்டை - உரு 18: (Echiscarinatus - Little Indian viper/ Saw scaled viper)**

இது இலங்கையில் காணப்படும் புடையன்களில் மிகவும் சிறியதாகும். இது ஒரு நச்சுப்பாம்பாகும். இலங்கையில் மாத்திரமல்லாது தென்னாசிய பிராந்தியத்திலுள்ள வரண்டகாலநிலை நிலவும் எல்லா இடங்களிலும் பிரதானமாக கரையோரப் பிரதேசங்களையண்டிய இடங்களில் இவை காணப்படும். அடர்த்தியான காடுகள், மலைப்பிரதேசங்கள் போன்றவற்றில் இவை பெரும்பாலும் இருப்பதில்லை. மற்றைய புடையன்கள் போன்று இவற்றிலும் தலைச் செதில்கள் மிகச் சிறியவையாகவே காணப்படும். உடலின் நிறம் வெண்ணிறத்திலிருந்து கரிய நிறம்வரை வேறுபாட்டைக் காட்டும். உடற் செதில்கள் யாவும் அழுத்தமற்றவை. இவற்றிலும் முக்கோணத்தலை சூரிய வெப்பத்தின் தாக்கத்திற்கு ஈடு கொடுத்து அதிக சூடான மணல் பிரதேசங்களைச் சற்றேனும் பொருட்படுத்தாமல் செல்லும். அருட்டப்பட்டால் உடலை சிறியதாக வளைத்துச் சுருட்டி செதிலிலுள்ள ஏரா போன்ற அமைப்பை ஒன்றுடன் ஒன்று உரசி ஒருவித ஒலியை எழுப்பும். முன்னெச்சரிக்கை எதுவுமின்றி மிக வேகமாகக் கடிக்கக் கூடியவை. ஆபத்து வேளைகளில் மணலிற்குள் முற்றாகத் தம்மை ஒளித்துக் கொள்ளும் வல்லமையும் இவற்றிற்குண்டு. மற்றைய வகையில் பார்த்தால் இவற்றின் நடத்தை அச்சு அசலாக முத்திரைப்புடையன்கள் போன்றே இருக்கும்.

அதாவது கரையோரப் பிரதேசங்களையண்டிய நெல்வயல்களில் அறுவடைக் காலங்களில் இவை மிகத் தாராளமாகத் திரியும். இவ்வாறான காலங்களில் வயல்களில் பலர் இப்பாம்பின் கடிக்கு ஆளாகும் சந்தர்ப்பங்கள் அதிகம் என்றே சொல்லவேண்டும். இதிலிருந்து தப்புவதற்கு முழங்கால் மறையும் வகையில் பாதணி அணிவதும் கைகளை மூடி கையுறை அணிவதும் சிறந்த வழியாகும்.



உரு 18: முதிர்வடைந்த ஒரு சுருட்டைப்பாம்பு முதுகுப்புறத் தோற்றம்

தெளிவாகத் தெரியும். தலையில் திரிசூலம் போன்ற குறியீடு இருக்கும். முதுகுப்புறத்தின் இரு பக்கங்களின் ஓரமாக அரைச்சந்திரன் வடிவத்தில் வெள்ளை நிறத்திட்டுக்கள் காணப்படும் (பார்க்க உரு 18). வயிற்றுப்புறம் வெண்மையா னது. அதில் அங்கிங்கெனப் புள்ளிகள் இருக்கும். ஒப்பீட்டளவில் சிறிய வால் இருப்பதால் இவை தரை வாழ்க்கையைக் காட்டுபவை என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இதன் முற்றாக வளர்ந்த தலையின் மொத்த நீளமே 30cm (ஒரு அடி) ஒட்டி இருக்கும். பிறக்கும் போது 8 -10 cm அளவில் காணப்படும். இவற்றின் நஞ்சானது பிரதானமாக குருதித்தொகுதியைத் தாக்கும். இவற்றின் கடி வலிமிகுந்ததாகும்.

**நடத்தை:** இவை பொதுவாக இராக்கால வழக்கமுடையவையாயினும் அதற்கிணையாகப் பகலிலும் சுறுசுறுப்பாக இவற்றால் இருக்க முடியும். ஏனெனில் இவை வரண்ட காலநிலைக்குப் பழக்கப்பட்டதால்,

இனி இப்பாம்பு போன்று தோற்றமளிக்கின்ற வேறொரு பாம்பைப் பற்றிப் பார்ப்போம்.

**கோழிப்புடையன்/ஓலைச் சுருட்டை/பன்னோலைச் சுருட்டை: உரு.19 (Boiga trigonata – Cat snake)**

இது ஒரு மெல்லிய நீண்ட மரவாழ்க்கையைக் காட்டுகின்ற ஒருவகைப் பாம்பாகும். இதனை இலகுவாக அடையாளம் காண்பதற்கு தரையில் 'Y' வடிவ அடையாளத்தை வைத்து தெரிந்து கொள்ளலாம். இதன் முக்கோணத்தலையும் முதுகுப்புறதிட்டுக்களின் ஒழுங்கமைப்பும் கிட்டத்தட்ட சுருட்டைப்புடையன் போன்றதொரு தோற்றத்தை நினைவுபடுத்தினாலும் இது மெல்லிய நீண்ட வாலைக் கொண்டவை. மிக நன்றாக மரமேறக்கூடியவை. இது சுருட்டையைவிட நீளம் கூடியது. 2 - 2½ அடிவரை வளரக்கூடியது.

**நடத்தை:** இவை இராக்கால வழக்கமுடையவை. பகல்வேளைகளில் சற்றுகுளிர்மையான இடங்களையே நாடுகின்றன. பொதுவாக பனைஓலைகளிற்குக் கீழாகவோ அல்லது பனைமரங்களின் தண்டுகளிற்கிடையேயோ அல்லது பனைமரங்களில் காணப்படும் பொந்துக்களிற்கிடையேயோ காணப்படலாம். இதைவிட பனையோலையால் வேய்ந்த இடங்களில்கூடக் காணப்படலாம் இதனால் ஓலைச் சுருட்டை, பன்னோலைச் சுருட்டை எனவும் அழைக்கப் படுகின்றன.

இது மரவாழ்க்கையைக் காட்டுவதால் மரத்திலுள்ள பல்லிகள், ஓணான்கள் மற்றும் சிறிய வெளவால்கள் போன்றவற்றை உண்ணும். எனினும் பிரதானமாக மரப்பொந்துகள், கூடுகள் போன்றவற்றிலுள்ள சிறிய பறவைக்குஞ்சுகள்,அவற்றின் முட்டைகள் என்பவற்றையே விரும்பி உண்கின்றன. இவை மனித நடமாட்டம் அதிகமுள்ள இடங்களைத் தவிர்க்கின்ற போதிலும் இரவில் கோழிக்கூடுகள் மற்றும் வீட்டில் செல்லப் பிராணிகளாக வளர்க்கும் love birds இருக்கும் கூடுகளைத் தேடி வந்திருக்கலாம். கோழிப்புடையன் என்று அழைக்கப்படுவதற்கான காரணம் இதுதான்.

இவற்றின் இரைகளாக கோழிக்குஞ்சுகள் அடங்காவிடினும் பறவைக்குஞ்சுகளின் வாசனையால் கவரப்பட்டு வந்து பழக்கதோஷத்தில் குஞ்சுகளையும் முதிர்ந்தவைகளையும் சேர்த்துத் தீண்டி விடுகின்றன. இது வாயின் கடைசிப்பகுதியில் அமைந்த விஷப் பற்களைக் கொண்டவை. வீரியம் குறைந்த விஷம் கொண்டவை. மனிதர்களைக் கடித்தாலும் பாதிப்பினளவு மிகவும் குறைவு அல்லது இல்லை என்றே சொல்லலாம்.

ஆனால் இரைகள் விஷத்தால் மயங்கும் அல்லது இறக்கும். காரணமின்றி ஒருசில பறவைக்



உரு 19: கோழிப்புடையன்
முதுகுப்புறத் தோற்றம் வேறுபாடு முதுகுப்புற ஓரங்களில்
அரைச்சந்திரன் வடிவத் திட்டுக்கள்
அற்றிருப்பதும் வித்தியாசமான தலைக் குறியீடும்

குஞ்சுகள் அல்லது கோழிக்குஞ்சுகள் இறப்பதற்கு இவை கூடக் காரணமாயிருக்கலாம். தற்போது இவற்றைக் காண்பது மிகக்குறைவே. காரணம் பனங்காணிகள் பல மாயமாகியதும் பனையோலைக்கூரைகளின் வழக்கம் அற்றுப்போனதும் என்று சொல்லலாம். எனினும் மீண்டும் பனைவளப் பயன்பாடு அதிகரித்திருப்பதால் இப்பாம்புகளிற்கான வாழிடம் பாதுகாக்கப்படுவதற்கான சந்தர்ப்பமும் வாழுவதற்கான சந்தர்ப்பமும் அதிகரித்துள்ளதாகவே எண்ணுகிறேன்.

(வளரும்)

கலாநிதி அபிராமி சிவரூபன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
விலங்கியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 221 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

ஆரபி கருணாகரன்
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

**புதிர் 221 க்கான கேள்வியும் விடையும்:**

தற்போது வாழும் பாம்பினங்களில் மிகப்பருமனான பாம்பினம் எது?

பச்சை அனகொண்டா / **Giant Green Anaconda**

## வாரத்திற்கு ஒரு புதிர்! 221

பாம்புகள் தமது தலையை விடப்பெரிய இரையை எவ்வாறு விழுங்குகின்றன?

**புதிர் 222 இற்கான விடைகளை 04.03.2019 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

Dr. வி.சா.துளசிதா
விலங்கியல்துறை,
விஞ்ஞானபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 222**

சரியான விடை:-...........................................

முழுப்பெயர்:-...........................................

முகவரி:-...........................................

தொ.பே. இல:-...........................................

கையொப்பம்:-...........................................

## 11 மாணவர்கள் வழக்கு

# வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டவர்கள் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர்

### குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் வெள்ளை வானில் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட 11 மாணவர்களில் ஐவர் திருகோணமலை கடற்படை தளத்தில் அமைந்துள்ள கன்சைட் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மைக்கான சாட்சிகள் காணப்படுவதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளது. இது தொடர்பாக பலர் சாட்சியங்களை வழங்கியுள்ளதாகவும், குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.

கொழும்பில் வெள்ளை வானில் கடத்தி காணாமல் ஆக் கப்பட்ட 5 தமிழ் மாணவர்கள் உட்பட 11 பேர் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பு, கோட்டை நீதவான் நிதிமன்றில் இட்ம்பெற்றபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலமான 2008, 2009 ஆம் ஆண்டுகளில் கொழும்பின் தெஹிவளை, கொட்டாஞ்சேனை ஆகிய பிரதேசங்களில் 5 தமிழ் மாணவர்கள் உட்பட 11 பேர் வெள்ளை வானில் கடத்திச் சென்று காணாமல் ஆக் கப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

இந்த சம்பவங்களுடன் இலங்கை கடற்படை புலனாய்வுப் பிரிவுக்கு தொடர்பிருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், விசாரணைகளை ஆரம்பித்த குற்றப் புலனாய்வுத் திணைக்களம், கடற்படையின் புலனாய்வுப் பிரிவு அதிகாரியான லெப்டினன் கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி உட்பட புலனாய்வாளர்களையும் கைது செய்தது.

இந் நிலையில் இதுதொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வழக்கு விசாரணையின்போது, அறிக்கை ஒன்றை சமர்ப்பித்த குற்றப்புலனாய்வுத் திணைக்களம், கடத்தப்பட்ட 11 பேரில், ஐந்து பேர் திருகோணமலை கடற்படை தளத்தில் அமைந்துள்ள கன்சைட் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை தொடர்பாக சிலர் சாட்சியமளித்துள்ளதாகத் தெரிவித்தனர்.

மேலும், குறித்த சாட்சியாளர்கள் அந்த முகாம் அமைந்துள்ள இடத்தை குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு காட்டியுள்ளதாகவும், அவர்களிடம் மேலதிக விசாரணைகளை நடத்துவதற்கு அனுமதியளிக்குமாறும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் அனுமதி கோரியது.

அதேநேரம், இந்த வழக்கின் பிரதான சந்தேக நபரான லெப்டினன் கொமாண்டர் சந்தன பிரசாத் உட்பட மூன்று சந்தேகநபர்களையும் எதிர்வரும் மார்ச் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவு பிறப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தாய்மொழி தினத்தை முன்னிட்டு மன்னாரில் விழிப்புணர்வு பேரணி






(மன்னார்)

தேசிய தாய்மொழி தினத்தை முன்னிட்டு மன்/அல் அஸ்ஹர் தேசிய பாடசாலை மாணவர்களினால் நேற்றுக் காலை விழிப்புணர்வு பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது

தேசிய தாய்மொழி தினமானது தமிழ்மொழியினதும் தாய் மொழியின் மகத்துவத்தையும் வெளிக்கொண்டுவரும் முகமாக மன்/அல் அஸ்ஹர் பாடசாலை மாணவர்கள் நேற்றுக்காலை பாடசாலை வளகத்தில் இருந்து பேரணியை ஆரம்பித்தனர்.

மன்னார் பிரதான சாலை ஊடாக மன்னார் மாவட்ட செயலகம், பிரதேச செயலகம்,நகர சபை ஆகிய அரச அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு சென்று மீண்டும் ஊர்வலமாக பாடசாலையை வந்தடைந்தனர்.

குறித்த ஊர்வலத்தில் மொழி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு மாணவர்கள் ஊர்வலமாக சென்றிருந்தனர். (9-285)

# மல்லாவி ஆதார வைத்தியசாலையின் தேவைகளை நிறைவேற்றக் கோரிக்கை

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு மல்லாவி பிரதேச வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டபோதும், அதற்கான சத்திர சிகிச்சைக் கூடம் மற்றும் இரத்த வங்கி என்பன அமைக்கப்படாத நிலையில் காணப்படுவதுடன், பல்வேறு தேவைப்பாடுகள் நிறைந்த வைத்தியசாலையாக இவ் வைத்தியசாலை காணப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முல்லைத்தீவு நகரத்தில் இருந்து மேற்குப்புறமாக சுமார் 80 கிலோமீற்றருக்கும் அப்பால் அமைந்துள்ள மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் வாழும் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கும் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களின் எல்லைப்புறக்கிராமங்களைச்சேர்ந்த மக்களுக்குமாக மருத்துவத்தேவைகளை வழங்குகின்ற ஒரு வைத்தியசாலையாக் காணப்படும் மல்லாவி வைத்தியசாலை அண்மையில் 2017 ஆம்ஆண்டில் ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தரம் உயர்த்தப்பட்ட வைத்தியசாலையின் தேவைகள் இதுவரை பூர்த்திசெய்யப்படவில்லை. குறிப்பாக இந்த வைத்தியசாலைக்கான சத்திரசிகிச்சைக்கூடம் மற்றும் இரத்த வங்கி என்பன இதுவரை அமைக்கப்படவில்லை.

இதனால் இந்தப் பிரதேசங்களில் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் காயங்களுக்கு உள்ளாகும் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்க முடியாது. இவ்வைத்தியசாலையிலிருந்து ஐம்பது கிலோமீற்றருக்கும் அப்பால் உள்ள கிளிநொச்சி மற்றும் வவுனியா வைத்தியசாலைகளுக்கே அனுப்பி வைக்கப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

இதனைவிட, குறித்த வைத்தியசாலையானது, ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டாலும் அதற்கான எந்த அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்படவில்லை.


இதனால் பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்களும் வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

ஆகவே இவ்வைத்தியசாலைக்கான சத்திர சிகிச்சைக்கூடம் மற்றும் இரத்த வங்கி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த வைத்தியசாலைக்கான இரத்த வங்கி மற்றும் சத்திர சிகிச்சைக்கூடம் என்பவற்றுக்கான கோரிக்கைகள் அரசிடம் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன், இந்த வைத்தியசாலையினுடைய சகல கோரிக்கைளும் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், இதற்கான நிதியொதுக்கீடுகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் அவற்றை விரைவாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

## குறை'களை' பதிகம் 22



### வயரெல்லாம் நிலத்தில் புதைப்பீர் நல்மரமெல்லாம் நாட்டி வைப்பீர்

ஊரெல்லாம் மின்சார வயர்கள்
உயர் மின் அழுத்தப்பட்டிகள்
உலகெல்லாம் கதைக்க
உதவும் ரெலிக்கொம் கேபிள்கள்
தொல்லைதரும் தொலைக்காட்சி கேபிள்கள்

அண்ணார்ந்து பார்த்தால்
இடியப்பச் சிக்கல்போல்
எங்கும் ஒரே வயர்க்கூட்டம்
இருவீதி மருங்கும் கண்டபாட்டில்
செல்கின்ற கரண்ட் கம்பிகள்

சில வீதிகளில்,
வீட்டு வளவையும் ஆக்கிரமிக்கும்
அகண்டபெரும் மின் தூண்கள்
ஆபத்து நிறையவே இருந்தாலும்
ஆர்டிஏ வீதிச்சட்டம்
வீட்டு வளவையும் பறித்தெடுக்கும்
விந்தைதான் என்னே!

மழைவளம் பெருக
மரம் வளர்ப்போம் என்பார்
ஆனால் கரண்ட் கம்பி
போகும் பாதை எங்கும்
வெட்டிச்சரிக்கும் மரங்களைக்
கணக்கெடுக்க எவரும் விரும்பார்

குளிர் இளநீர் தரும் தெங்கு
முக்கனி தரும் மா பலா வாழை
நறுமணம் தரும் பூமரங்கள்
நல்ல பெரும் தேக்குகள்
விருட்சமாய் நிற்கும்
ஆல் அரசு வேம்பு மரங்கள்
எல்லாமும் வெட்டிச் சரிப்பார்
கரண்ட்வயர் முட்டி விடும்
என்றும் பதில் உரைப்பார்
ஐயகோ! வான்வெளியில்
வளை காப்பிடும் மரங்களை வெட்டி
வயர்வேலி போடுவதால்
வெயில் போகுமோ
மழைதான் வருமோ
அன்னவரே அபிவிருத்தி சொன்னவரே
ஊரெல்லாம் போகும் வயரை
உரிய பாதுகாப்புக் கவசமிட்டு
வீதியோரத்து நிலத்தில் புதைத்தால்
வான்வெளிக்கும் வான் பயிர்கள்
தாம் தழைக்கும்
கொடும் வெயில் என்று பதறுவாரும்
ஆஹா என்னே குளிர் நிழல்
என்று இன்புறுவார்

ஆகையால்
வான்வெளி வயரை
நிலத்தினில் புதைத்து
வீதியோரம் எங்கும்
நல்மரம் நட்டு வளம் பெருக்க
புதியதோர் திட்டம் செய்திடுவீர்
புதுமை படைத்திடுவீர்

கூத்தனார்

அன்பு வாசகர்களே!

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# இராகு-கேது பெயர்ச்சி - 2019

## 13.02.2019 – 31.08.2020

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

இராகு-கேது பெயர்ச்சி எண்ணற்ற நல்ல மாற்றங்களையும் ஏற்றங்களையும் வழங்கப்போகிறது. மறைந்த இராகு, நிறைந்த தன இலாபத்தைத் தருவார். அதுமட்டுமல்லாமல் தன ஸ்தானத்தில் கேது, குரு வீட்டில் சஞ்சரிக்கப் போகிறார். நிழல் கிரகம் என்று வர்ணிக்கப்படும் இராகுவும் கேதுவும் இருக்கும் இடத்தைப் பொறுத்தே பலன் கொடுப்பார்கள்.

உங்கள் இராசிக்கு 8 இல் அடியெடுத்து வைக்கும் இராகு பகவான், புனர்பூசம் நட்சத்திரக் காலில் குரு சாரத்திலும் திருவாதிரை நட்சத்திரக் காலில் சுய சாரத்திலும் பிறகு மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்திலும் சுமார் முதலாம் 1 1/2 ஆண்டு காலங்கள் சஞ்சரிப்பார். அதேபோல கேது பகவான், உத்தராடம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்திலும் பூராடம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்திலும் மூலம் நட்சத்திரக் காலில் சுய சாரத்திலும் சஞ்சரிக்கப் போகிறார்.

இந்த நட்சத்திரப் பாதசார அடிப்படையிலும் குருப்பெயர்ச்சி மற்றும் குருவின் அதிசார காலம் சனியின் வக்கிர இயக்க காலத்திற்கு ஏற்பவும் சுய ஜாதகத்தின் திசாபுத்திப் படியும் உங்களுக்கு உரிய பலன்கள் நடைபெறும்.

அஷ்டமத்திற்கு வரும் இராகு!
தன ஸ்தானத்திற்கு வரும் கேது!

கடந்த 1 1/2 ஆண்டுகளாக உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த இராகு பகவான் இப்பொழுது 8 ஆம் இடத்திற்கு வருகிறார். 8 ஆம் இடம் என்பது மறைவு ஸ்தானமாகும். அஷ்டமத்தில் ராகு சஞ்சரித்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. அங்கு சஞ்சரிக்கும் மறைந்த இராகுவால் நிறைந்த தன இலாபம் கிடைக்கும். தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்யப் புதிய வழிபிறக்கும். பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். விரயம் வருவதற்கு முன்னதாகவே வீடு தேடி வரவு வரும். இது போன்ற சமயங்களில் குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்குவதில் அக்கறை செலுத்தலாம். அல்லது சுப காரியங்கள் நடத்துவதன் மூலம் சுப விரயங்களாக மாற்றலாம். தொழிலில் புதிய கூட்டாளிகளை இணைத்து, தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

மூன்றாம் இடத்தில் இருந்து, 2 ஆம் இடத்திற்கு பெயர்ச்சியாகும் கேதுவால், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயற்படுவதன் மூலம் ஆதாயம் அதிகம் பெறலாம். அரசியலில் உள்ளவர்களுக்கு திடீர் பொறுப்புகள் வந்து சேரும். உங்கள் பேச்சுத் திறமையால் மற்றவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துவீர்கள். கல்வி வளம் சிறப்பாக இருக்கும். மேற்படிப்பு படிக்கும் வாய்ப்பு உண்டு. ஒரு சிலருக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் தானாகக் கிடைக்கும். சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுவீர்கள். வீடு வாங்கும் முயற்சியில் இருப்பவர்கள் சுய ஜாதகத்தில் செவ்வாய் பலம் பார்த்து வாங்குவது நல்லது. வாகன மாற்றம் அவசியம் தேவை.

13.3.2019 முதல் 17.5.2019 வரையான கால கட்டத்தில் விருச்சிகத்தில் இருக்கும் குரு, அதிசார கதியில் தனுசு இராசிக்கு வருகிறார். அப்போது தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். தொழில் முன்னேற்றம் மிகச் சிறப்பாக இருக்கும். பண மழையிலும் குடும்பத்தினர்களின் பாச மழையிலும் நனையப் போகிறீர்கள்.

குரு சாரத்தில் இராகு சஞ்சாரம்
(13.02.2019 முதல்
19.08.2019 வரை)

புனர்பூசம் நட்சத்திரக் காலில் குரு சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, அற்புதமான பலன்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். வாழ்க்கைத் துணை வழியே வேலை கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். பிள்ளைகளின்

### எட்டில் வருகிறது இராகு வழிபாட்டால் கிடைக்கும் இனிமை

படிப்பிற்கேற்ற வேலை கிடைத்து, அதன் மூலமாக வருமானம் கிடைக்கும். ஊதிய உயர்வால் உத்தியோகத்தர்கள் மகிழ்ச்சி காண்பார்கள். வீட்டில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகள் தென்படும்.

சுய சாரத்தில்
ராகு சஞ்சாரம்
(20.8.2019 முதல் 27.4.2020
வரை)

திருவாதிரை நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது, இல்லத்தில் இனிய பலன்கள் கிடைக்கும். நீங்கள் பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். விலகிச் சென்ற நண்பர்கள் விரும்பி வந்திணைவர். நீண்டதூரப் பயணங்கள் இலாபம் தருவதாக அமையும். பாகப் பிரிவினை சுமுகமாக முடியும். அதிகம் செலவாகும் என்று நினைத்த காரியம் குறைந்த செலவிலேயே முடியும். புதிய தொழில் தொடங்க முயற்சிப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சுய தொழில் செய்ய முன்வருவார்கள்.

செவ்வாய் சாரத்தில் இராகு
சஞ்சாரம் (28.4.2020 முதல்
31.8.2020 வரை)

மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, மிதமிஞ்சிய பொருளாதாரம் ஏற்படும். என்றைக்கோ கொடுத்து உதவிய பணம்இப்பொழுது திரும்பிவரும் உங்கள் இராசிநாதன் செவ்வாய் சாரத்தில் இராகு உலா வருவதால், நினைத்த காரியம் நினைத்தபடி நடைபெறும். ஆரோக்கியத் தொல்லை அகலும். கனவும் வாக்கும் பலிக்கும். கட்டடப் பணி பாதியில் நிற்கின்றதே என்ற கவலை அகலும். புதிய திருப்பங்கள் ஏற்படும். இல்லம் கட்டிக் குடியேற வேண்டும் என்ற ஆசை நிறைவேறும்.

சூரிய சாரத்தில் கேது சஞ்சாரம்
(13.2.2019 முதல் 16.4.2019
வரை)

உத்தராடம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, அற்புதமான பலன்களை அள்ளி வ்ழங்குவார். சூரியன் உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்திற்கு அதிபதியாவார். எனவே தொழிலை வளப்படுத்தி வருமானத்தைப் பெருக வைப்பார். புதிய ஒப்பந்தங்கள் வந்து கொண்டே இருக்கும். வியாபார விருத்தியை முன்னிட்டு புதிய பங்குதாரர்களை சேர்த்துக் கொள்ள முன்வருவீர்கள். வாடகை கட்டடத்தில் இருந்து, சொந்த இடத்திற்கு தொழிலை மாற்றம் செய்யும் நேரம் இது. தொழிலை விரிவாக்கம் செய்யவும் உகந்த நேரம். வெளிநாட்டு வணிகம் செய்பவர்களுக்கு அதிக இலாபம் கிடைக்கும்.



சுக்கிர சாரத்தில் கேது
சஞ்சாரம் (17.4.2019 முதல்
23.12.2019 வரை)

பூராடம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். கல்யாண முயற்சி கைகூடும். பயணங்கள் அனுகூலமாகும். வாகன யோகம் உண்டு. பெண் பிள்ளைகளின் சுபச் சடங்குகள் நடைபெறும் நேரம் இது. தொழில் விருத்தியும், தன தான்ய விருத்தியும் ஏற்படும். எதிர்பாராத தனலாபம் வந்து இதயத்தை மகிழ்விக்கும். என்றைக்கோ கொடுத்த தொகை இப்பொழுது வந்து சேரும். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் சுபகாரியங்களை முன்னின்று நடத்துவீர்கள். புனித யாத்திரைகள் செய்யும் யோகம் உண்டு.

சுய சாரத்தில் கேது சஞ்சாரம்
(24.12.2019 முதல்
31.8.2020 வரை)

மூலம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். புதிய ஆலயங்கள் கட்ட வேண்டுமென்ற ஆசை மேலோங்கும். கோவில் விழாக்களை முன்னின்று நடத்திப் பெருமை காண்பீர்கள். பிள்ளைகள் வெளிநாட்டில்




கைநிறைய சம்பாதித்துக் கொண்டு திரும்புவார்கள். பெற்றோர் வழியில் சொத்துக்கள் வரக்கூடிய நேரமிது. பூர்வீக சொத்துப் பிரச்சினையை நல்ல விதமாக முடித்துக்கொள்வீர்கள். இக்காலத்தில் குலதெய்வ வழிபாடும், பௌர்ணமி கிரிவல வழிபாடும் பலன்களை அதிகம் வழங்கும்.

வழிபாடு

8 ஆம் இடத்து இராகுவால் இனிய பலன் கிடைக்கவும், தன ஸ்தானத்து கேதுவால் தனவரவு தானாக வந்து சேரவும், உங்கள் சுய ஜாதகத்தில் இராகு- கேதுக்களின் பலமறிந்து சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்ளுங்கள். சதுர்த்தியன்று விநாயகரையும், மூலம் நட்சத்திரமன்று அனுமனையும் வழிபடுங்கள்.

கவனம் தேவைப்படும் காலம்

இராகு-கேது பெயர்ச்சி நிகழ இருக்கிறது. மூன்றாம் இடத்தில் இருந்து வந்த கேது, இப்பொழுது 2ஆம் இடமான தன ஸ்தானத்திற்கு வருகிறார். அப்படி வரும் அவர் தனுசு இராசியில் சனியோடு இணைந்து சஞ்சரிக்கிறார். இந்த கால கட்டத்தில் 08.5.2019 முதல் 3.9.2019 வரை சனி பகவான் வக்கிரம் அடைகிறார். வக்கிரம் பெற்றிருக்கும் சனியோடு, கேது இருப்பது அவ்வளவு நல்லதல்ல.

இந்த நேரத்தில் உங்களுக்கு தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகமாக தேவைப்படும். மனக் குழப்பத்திற்கு இடம் கொடுக்காதீர்கள். அது உங்களை பிரச்சினைகளில் இருந்து விடுபட முடியாமல் செய்து விடும். அருளாளர்களின் ஆலோசனைகள் இது போன்ற நேரத்தில் உங்களுக்கு கைகொடுக்கலாம். புதிய நண்பர்களை நம்பி எந்தத் திட்டத்தையும் செயற்படுத்தாதீர்கள். அவர்களை நம்பி வேறு பணிகளையும் ஒப்படைக்காமல் இருப்பது நல்லது. உள்ளதைக் கொண்டு நல்லதைச் செய்யுங்கள். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

பெண்களுக்கான பலன்கள்

இந்த இராகு- கேது பெயர்ச்சி, உங்களுக்கு அமைதியையும், ஆனந்தத்தையும் வழங்கப் போகிறது. செல்வ நிலை உயர்ந்து சேமிப்பை தக்க வைத்துக் கொள்ள வழிபிறக்கும். கல்வி முன்னேற்றம் உண்டு. படித்த படிப்புக்கேற்ற வேலை கிடைக்கும் நேரம் இது. கணவன் - மனைவி ஒற்றுமை பலப்படும். புகுந்த வீட்டில் உள்ளவர்களின் மனதிலும், கணவர் மனதிலும் இடம் பிடிப்பீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு பதவி உயர்வும், ஊதிய உயர்வும் வந்து சேரும். வீடு கட்டவோ, வாங்கவோ வாய்ப்பு கூடிவரும். தாய்வழி ஆதரவு திருப்தி தரும்.

சகோதர வர்க்கத்தினர் உங்கள் மனம்போல உதவி செய்வர். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். பிள்ளைகளுக்காக எடுத்த முயற்சி வெற்றி தரும். குலதெய்வ வழிபாடும், தசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

(தொடரும்)

# முல்லை.மாவட்டத்தில் தொடரும் வைத்தியர்கள் பற்றாக்குறை

## நிவர்த்தி செய்யக் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 50 இற்கும் மேற்பட்ட வைத்தியர் வெற்றிடங்கள் நீண்டகாலம் நிரப்பப்படாமையினால் மாவட்டத்தில் காணப்படுகின்ற வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் வெற்றிடங்கள் தொடர்ந்தும் நிலவி வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாவட்டப்பொது வைத்தியசாலை மற்றும் ஆதார வைத்தியசாலைகள், பிரதேச வைத்தியசாலைகள் உள்ளிட்ட வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் வைத்தியர்கள் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

குறிப்பாக, முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்கு 60 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் தேவையான நிலையில் 38 வரையான வைத்தியர்களே கடமையாற்று வருகின்றனர்.

இதிலும் குறிப்பிட்ட சில வைத்தியர்கள் இடமாற்றம் பெற்றுச்செல்லும் நிலை காணப்படுகின்றது.

இதனைவிட, மாவட்டத்தில் காணப்படுகின்ற ஏனைய வைத்தியசாலைகளில் பணியாற்றுவதற்கு 60 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் தேவையான போதும் 33 வரையான வைத்தியர்களே உள்ளனர்.

இதனால், பல வைத்தியசாலைகளில் வைத்தியர் பற்றாக்குறை நிலவி வரும் அதேநேரம் ஐயன்கன்குளம் வைத்தியசாலை, துணுக்காய் வைத்தியசாலை, நட்டாங்கண்டல் வைத்தியசாலை, மூங்கிலாறு போன்ற வைத்தியசாலைகளில் வார நாட்களில் நடமாடும் வைத்திய சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாவட்டத்திலிருந்து மருத்துவத்துறைக்குத் தெரிவாகி தமது மருத்துவப்படிப்பை நிறைவு செய்த நூற்றுக்கும் மேற்பட்ட வைத்தியர்கள் தென்பகுதி மற்றும் வெளி மாவட்ட வைத்தியசாலைகளில் கடமைகளைப்பொறுப்பேற்பதனால் இந்த நிலைமை காணப்படுகின்றது.

இதனைவிட, ஏனைய பணி நிலைகளிலும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் மக்களுக்கான வைத்திய சேவைகள் வழங்கும் வகையில் வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களுக்கு தமிழ் அரசியல் தலைமைகள் வலியுறுத்த வேண்டுமென பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)




## பழைய சுவரை அகற்றி புதிய சுவர் அமைக்கக் கோரிக்கை

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா ஆரம்பப்பாடசாலையில் ஆபத்தான நிலையில் காணப்படும் மதில் சுவரை அகற்றி புதிய சுவர் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி நகரத்திற்கு அண்மையில் உள்ள முதன்மையான பாடசாலைகளில் ஒன்றாகக் காணப்படுகின்ற முரசுமோட்டை முருகானந்தா ஆரம்பபாடசாலையின்முன்பக்க மதில் சுவர் ஆபத்தான நிலையில் காணப்படுவதுடன், இதில் ஒரு பகுதி மதில் அண்மையில் இடிந்து வீழ்ந்துள்ளது.

இதேவேளை எஞ்சியிருக்கின்ற மதிலும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. இதைவிட, குறித்த பாடசாலையில் காணப்படுகின்ற பழைமையான கட்டடம் ஒன்றும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. ஆகவே ஆபத்து நிலையில் காணப்படுகின்ற மதில் சுவரை அகற்றி புதிய சுவர் ஒன்றினை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

# காலாவதியான பொருட்களை விற்ற எட்டு வர்த்தகர்களிடம் இருந்து 40,500 ரூபா தண்டம் அறவீடு

(மன்னார்)

மன்னார் கிராமப்புற பகுதிகளிலுள்ள கடைகளை மன்னார் நுகர்வோர் பாதுகாப்பு சபை உத்தியோகத்தர்கள் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டபொழுது எட்டு வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டன.

பேசாலை, இலந்தமோட்டை, வங்காலை, முள்ளிக்குளம் மற்றும் மன்னார் நகர் ஆகிய இடங்களிலுள்ள வர்த்தக நிலையங்களை மன்னார் நுகர்வோர் பாதுகாப்புச் சபை உத்தியோகத்தர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அத்தாட்சிப்படுத்தப்படாத மின்சார பிளக், காலாவதியான பொடி லோசர், காலாவதியான வெள்ளைச் சீமெந்து, சம்பல் பக்கெற், கோப்பித்தூள் போன்ற பொருட்களை விற்ற 8 வர்த்தகர்கள் கண்டு பிடிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக கடந்த 20 ஆம் திகதி புதன் கிழமை மன்னார் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புச் சபை உத்தியோகத்தர், மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் எட்டு வர்த்தகர்களுக்கு எதிராக தனித்தனி வழக்குத் தாக்கல் செய்து சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினார்.

மன்னார் நீத வான் ரி.சரவணராஜா முன்னிலையில் விசாரிக்கப்பட்ட இவ் வழக்கில் எட்டுப் பேரும் தங்கள் குற்றங்களை ஏற்றுக் கொண்டனர். அதில் ஐந்து நபர்களுக்கு தலா 4,500 ரூபாய் அபராதமும் மூன்று பேருக்கு தலா 6000 ரூபா அபராதம் விதித்தார். (9-285)

# பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கையில் கிளி.அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்



(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி நகரை அண்டிய திருநகர்ப்பகுதியில் வேகமாகப் பரவிவரும் தீங்கு விளைவிக்கும் நச்சுச் செடியான பார்த்தீனியம் செடியைப் பிடுங்கி அழிக்கும் சிரமதானப் பணியை நேற்று முன்தினம் கிளிநொச்சி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

கிளிநொச்சியில் இயங்கி வரும் கிளிநொச்சி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் மக்கள் நலச்சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கிளிநொச்சியிலிருந்து பார்த்தீனியத்தை முற்று முழுதாக அழிப்பதற்கான தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவுள்ளதாகவும் அதற்கான ஒத்துழைப்பை அனைவரும் வழங்க வேண்டுமெனவும் மேற்படி நிறுவனத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-281)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை குழப்ப முயற்சி; அஞ்சலி நிகழ்வுகளை கொச்சைப்படுத்த வேண்டாம்

## பொதுமக்கள் கோரிக்கை

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை குழப்பும் வகையில் சிலர் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக யுத்தத்தில் உறவுகளை பறிகொடுத்த மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் படுகொலையின் 10 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்காக தமிழர் மரவுரிமை பேரவை, முள்ளிவாய்க்கால் கிராம அபிவிருத்திச் சங்கம், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பல்வேறு சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து குழு ஒன்றினை அமைத்ததுடன் இந்த பொதுக்குழுவே இனிவரும் காலங்களில் எந்தவிதமான குழப்பங்களும் இல்லாத வகையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்தும் என்றும் அக் கூட் டத்தில ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை முள்ளிவாய்க்கால் பகுதிக்குச் சென்ற கட்சி உறுப்பினர் ஒருவர் அடங்கிய குழுவினர் அங்குள்ள மக்களை அழைத்து தாம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை இவ் வருடம் செய்யப் போவதாகவும் அதற்கு பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

இந் நினைவேந்தலை நடத்துவதற்கு குழு ஒன்றை நியமிக்கப் போவதாகவும் அதில் முள்ளிவாய்க்கால் பகுதி மக்களையும் உள்வாங்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கான பொதுக்குழு அமைக்கப்பட்டுள்ள நிலையில் இவர்களின் செயற்பாடு நிகழ்வில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே பறிகொடுத்த உறவுகளை நினைவுகூர்ந்து மனமார்ந்த அஞ்சலிகளை செய்யும் அந்நிகழ்வினை சுயநலத்திற்காக யாரும் குழப்ப முற்பட வேண்டாம் என்றும் அப்பகுதி மக்கள் உருக்கமான கோரிக்கை ஒன்றினை விடுத்துள்ளனர். (9-89)

# இராணுவத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு சக்கரநாற்காலிகள் வழங்கி வைப்பு



வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் குமுது பெரேரா மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளின் ஆலோசனையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அங்கவீனமுற்றவர்களுக்கான சக்கர நாற்காலிகள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை வன்னிப் பிராந்திய கட்டளை தலைமையகமான ஜோசப் இராணுவ தலைமையகத்தில் இடம்பெற்றது.

இதில் மன்னார், வவுனியா, வெலிஓயா,அநுராதபுரத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு சக்கரநாற்காலிகள் மற்றும் கைத்தாங்குபிடிகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன. இந் நிகழ்வில் 56 ஆவது படைப்பிரிவின் படைத்தளபதி மேஜர் ஜெனரல் பிரபாத், தனியார் ஆடை உற்பத்தி நிறுவனம் ஒன்றின் பணிப்பாளர், வன்னிப் பிராந்திய கட்டளைத்தளபதி மற்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் எனப் பலரும் விருந்தினர்களாக கலந்து கொண்டு பயனாளிகளுக்கான உதவிகளை வழங்கி வைத்தனர். (9-250)

# கடற்படையை வெளியேற்றக்கோரி சிலாபத்துறை மக்கள் போராட்டம்



(மன்னார்)

முசலிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறையில் மக்களின் காணிகளில் நிலை கொண்டுள்ள கடற்படையினரை அகற்றி தமது காணிகளை வழங்கக் கோரி பாதிக்கப் பட்ட மக்கள் நேற்று முன்தி னம் மாலை முதல் தொடர் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக முசலிப்பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறை கிராமத்தில் இருந்து 1990 ஆம் ஆண்டு 250 குடும்பங்கள் இடம்பெயர்ந்து கற்பிட்டி உள்ளிட்ட இடங்களாக வேறு இடங்களுக்குச் சென்றனர்.

இந்த நிலையில் யுத்தம் நிறைவடைந்த நிலையில் இடம்பெயர்ந்தவர்கள் 625 குடும்பங்களாக தமது சொந்த இடமான சிலாவத்துறைக்கு மீண்டும் 2009 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் வந்தனர்.

மீண்டும் சொந்த இடங்களுக்கு வந்த மக்கள் முசலியில் பல்வேறு இடங்களில் குடியேற்றப்பட்டனர்.

எனினும் 218 குடும்பங்களுக்குச் சொந்தமான 35 ஏக்கர் நிலப்பரப்பை கடற்படையினர் சுவீகரித்துள்ளதோடு, கடற்படை முகாமும் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த காணியை விடுவித்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்த போதும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 2.30 மணியளவில் சிலாவத்துறை பள்ளிவாசலுக்கு முன் ஒன்றுகூடி அங்கிருந்து பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் சிலாவத் துறை கடற்படை முகாமை நோக்கிச் சென்றனர்.

ஊர்வலத்தில் கலந்து கொண்டு கடற்படை முகாம் முன் கூடிய மக்கள், "கடற்படையே வெளியேறு, எங்கள் நிலம் எமக்கு வேண்டும், கடற்படையே எம் நிலத்தில் இருந்து புலம் பெயர்ந்தவர்களை மீண்டும் குடியேற்ற வழி செய், கடற்படை முகாமை மாற்ற 10 வருடங்கள் காணாதா?, கடற்படையே எமது பூர்வீக நிலத்தில் வாழும் உரிமையைத் தா" உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் கடற்படை அதிகாரிக்கு தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்தனர்.

குறித்த போராட்டத்தில் அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளார், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹுனைஸ் பாரூக், சர்வமதத்தலைவர்கள், மன்னார் மாவட்ட சமூகப் பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் பணியாளர்கள், குறித்த கிராமங்களைச் சேர்ந்த முஸ்லிம், தமிழ் மக்கள் எனப் பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர். அத்துடன் முசலிப் பிரதேச செயலாளருக்கும் மகஜர் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மக்கள் மீண்டும் சிலாவத்துறை கடற்படை முகாமிற்கு முன் அமர்ந்து தமது தொடர் போராட்டத்தை தொடர்ந்துள்ளனர். (9-285)

# பாரதம்

# பனிச்சரிவில் சிக்குண்டு 6 இராணுவ வீரர்கள் பலி

## 150 இற்கும் மேற்பட்டோர் மீட்புப்பணியில்

(இமாச்சல பிரதேசம்)

இமாச்சல பிரதேசத்தில் பனிச்சரிவில் சிக்கி 6 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

காஷ்மீர் படைப்பிரிவை சேர்ந்த 16 இராணுவ வீரர்கள் நேற்று முன்தினம் காலை ரோந்து சென்றனர். அந்தப்பகுதியில் திடீரென பனிச்சரிவு ஏற்பட்டது. இதில் 6 வீரர்கள் சிக்கிக்கொண்டனர்.

இந்நிலையில், 6 பேர் உயிரிழந்த நிலையில் மீட்



கப்பட்டதோடு, ஏனையோரை தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மேலும், அப்பகுதியில் கடும் பனிச்சரிவு ஏற்பட்டிருப்பதால் ஏனைய வீரர்களை இரவுவரை தேடியும் மீட்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவர்கள் உயிருடன் இருப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகக் காணப்படுவதாகவும் இவர்கள் உயிரிழந்திருக்கக் கூடும் என்றும் அஞ்சப்படுகின்றது.

இந்த நிலையில், தொடர்ந்தும் அப்பகுதிகளில் 150 இற்கும் மேற்பட்டோர் மீட்புப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இமாச்சாலபிரதேச மாநிலத்தில் இந்திய-சீன எல்லையில் உள்ள பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் 11 மணி அளவில் ஏற்பட்ட திடீர் பனிச்சரிவினாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.(7)

# புல்வாமா தாக்குதலைக் கண்டித்து நியூசிலாந்து நாடாளுமன்றில் தீர்மானம்

(வெலிங்டன்)

புல்வாமா தாக்குதலைக் கண்டித்து நியூசிலாந்து நாடாளுமன்றில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நியூசிலாந்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை கூடிய நாடாளுமன்ற அமர்வுகளின் போது துணை பிரதமர் வின்ஸ்டன் பீட்டர்ஸ் குறித்த தீர்மானத்தினை கொண்டுவந்துள்ளார்.

இது குறித்து கருத்துத்



தெரிவித்த துணை பிரதமர், பயங்கரவாதத்தால் இந்திய இராணுவ வீரர்கள் உயிரிழந்திருப்பது மிகுந்த மன வேதனையளிப்பதாகத் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த தாக்குதலில் உயிரிழந்த வீரர்களின் உறவினர்களுக்கும் இந்தியர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் அவர் தெரிவித்தார்.

கடந்த 14 ஆம் திகதி ஜம்மு-காஷ்மீரில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலில் 45 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் உயிரிழந்திருந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு உலக நாடுகள் பலவும் தமது கண்டனங்களைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு இந்தியர் ஒருவர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள புளோரிடா மாகாணத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இந்தியர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இதுகுறித்து உள்ளூர் ஊடகங்கள் தரப்பில், "அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திலுள்ள பல்பொருள் அங்காடியில் நுழைந்த இரு நபர்கள் திருடும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு பணிபுரிந்த கோவர்தன் ரெட்டி (வயது-50) என்பவரை அந்த நபர்கள் துப்பாக்கியால் சுட்டனர்.

இதில் கோவர்தன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்" என்ற செய்தி வெளியானது.

துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டவர்கள் ஆபிரிக்க அமெரிக்கர்கள் என்றும் அவர்கள் அந்தப் பல்பொருள் அங்காடியிலிருந்து எந்தப் பணத்தையும் எடுத்துச் செல்லவில்லை என்றும் தகவல் வெளியானது.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் குறித்து பொலிஸார் தீவிர



விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (7)

# வடகொரிய பிரதிநிதிகள் வியட்நாம் பயணிக்க ஐ.நா.அங்கீகாரம்

வடகொரிய பிரதிநிதிகள் வியட்நாமிற்கு பயணிப்பதற்கு வடகொரியாவிற்கு எதிரான ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தடைகள் குழு அங்கீகாரம் அளித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதிக்கும், வடகொரிய ஜனாதிபதிக்கும் இடையிலான மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

வடகொரிய பிரதிநிதிகள் குழு வியட்நாமிற்கு பயணிப்பதற்கு அவர்கள் மீதான தடைகளிலிருந்து விலக்களிக்குமாறு வியட்நாம் அரசாங்கம் கோரியிருந்தது.

இந்நிலையில், வடகொரிய பிரதிநிதிகள் குழு வியட்நாம் பயணிப்பதற்கு எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என ஐ.நா. அதிகாரிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்துள்ளனர். அதன்படி, ஐ.நா.வின் கறுப்புப் பட்டியல், பயணத்தடை மற்றும் சொத்து முடக்கம் போன்ற தடைகளை எதிர்நோக்கியிருந்த அனைவருக்கும் விலக்களிப்பட்டுள்ளது. (7)

## பங்களாதே

# பழைமையான நக
# 70 பேர் பலி; 50 பே





(டாக்கா)

**பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் பல நூற்றாண்டுகள் பழைமையான சவ்காரபஸார் பகுதியில் இடம்பெற்ற பாரிய தீ விபத்தில் சுமார் 70 பேர் உயிரிழந்துள்ளனர்.**

இரச
பயன்பட
கட்டடெ
புதன்கி
டுள்ளது
நால
முன்தி
காலை
பாட்டுக்
ல்லை எ
குறி
உயிரிழ

# 2 நாட்கள் பயணமாக தெ
# பிரதமர் மோடிக்கு செங்





2 நாட்கள் பயணமாக தென்கொரியா சென்ற பிரதமர் மோடிக்கு தென்கொரிய அரசு செங்கம்பள வரவேற்பு அளித்து அங்குள்ள இந்திய மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தென்கொரியாவுடன் வர்த்தகம், முதலீடு, நட்புறவு ஆகியவற்றை வலுப்படுத்தும் நோக்கில் இந்த பயணத்தை பிரதமர் மோடி மேற்கொண்டுள்ளார்.

பிரதமர் மோடி நேற்று இரவு தென்கொரியா புறப்படும் முன் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறுகையில், "தென்கொரியா இந்தியாவுக்கு மிகமுக்கியமான நட்பு நாடு. குறிப்பாக மேக் இன் இந்தியா உள்ளிட்ட திட்டங்களை முன்னெடுக்க ஊக்கமாக இருந்தது. இரு ஜனநாயக

நாடுகளு
பிராந்தி
அமைத
ளும்.
அறி
நுட்பத்தி
டன் செ
கது. அ
முன்ன
ளும் இ
வேற்கக்

# ஐரோப்பிய கார் இறக்குமதிக
# வரி விதிப்புகளை மேற்கொள்ள

## ஜனாதிபதி ட்ரம்ப் மிரட்டல்


(வோஷிங்டன்)

ஐரோப்பிய கார் இறக்குமதிகளின் மீது வரி விதிப்புகளை மேற்கொள்ள நேரிடும் என, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்துடன் வர்த்தக உடன்பாடொன்றை எட்டுவதற்கு முடியாத பட்சத்தில் இந்த வரி விதிப்பு அமுல்படுத்தப்படும் என ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஒஸ்
நேற்று
வெள்
கூட்டா
சந்தித்
தெரிவி
ஐரே
பாடொ

# தேஷின்
# நகரில் பாரிய தீ பேர் படுகாயம்!



இரசாயன களஞ்சியசாலையாக பயன்படுத்தப்பட்டுவரும் குடியிருப்பு கட்டடமொன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை இத்தீப் பரவல் ஏற்பட்டுள்ளது.

நான்கு மாடி கட்டடத்தில் நேற்று முன்தினம் பரவிய தீ நேற்றுக் காலை வரை முழுமையாக கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அனர்த்தத்தில் 70 பேர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுவதாக தீயணைப்புப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 50 பேர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாகக் காணப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.. (7)

# சிரிய இறுதிப் போர் விவகாரம்; ஐ.எஸ்.பிடியில் 200 குடும்பங்கள்



(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் 200 குடும்பங்களைப் பிடித்து வைத்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்துமனிதஉரிமை ஆணையத்தின் உயரதிகாரி மிச்செல்லா கூறும் போது, "சிரியாவில் ஐ.எஸ். கட்டுப்பாட்டிலுள்ள கடைசிப் பகுதியான இட்லிப் மாகாணத்தில் 200 குடும்பங்களை வெளியேற விடாமல் ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடித்து வைத்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை 10 இற்கும் மேற்பட்ட லொறிகளிலிருந்து பொது மக்கள் ஐ.எஸ். கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து மீட்கப்பட்டனர்.

இந்த வாரம் மட்டும் 20 ஆயிரம் பேர் ஐ.எஸ். பகுதியிலிருந்து மீட்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் சில குடும்பங்களை வரவிடாமல் ஐ.எஸ். தீவிரவாதிகள் தடுத்துள்ளனர்" எனத் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை இட்லிப் மாகாணத்தில் நடந்த குண்டு வெடிப்புத் தாக்குதலில் 24 பேர் பலியாகினர்.

இதில் பெண்களும், குழந்தைகளும் அடக்கம். இந்தத் தாக்குதலில் 51 பேருக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.


சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்துக்கும் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கும் இடையே கடந்த ஆறு ஆண்டுகளாக நடந்து வரும் போர் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

ஐ.எஸ். பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டிலிருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் அரசு கூட்டுப் படைகளால் மீட்கப்பட்டுவிட்டன.

இந்த நிலையில் ஐ.எஸ். வசமுள்ள மற்றப் பகுதிகளை மீட்க இறுதிப் போர் நடத்தப்பட்டு வருகிறது. (7)

# ஈரான்-அமெரிக்கா இடையே பதற்றம் அதிகரித்துள்ளது

## ஈரான் ஜனாதிபதி தெரிவிப்பு



(டெஹ்ரான்)

டெஹ்ரானுக்கும் வோஷிங்டனுக்கும் இடையிலான பதற்றம் அதிகரித்துள்ளதாக, ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவுகானி தெரிவித்துள்ளார்.


அமைச்சரவைக் கூட்டமொன்றில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளதாக, ஈரான் ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்கா அனைத்து அதிகாரங்களையும் ஈரானுக்கு எதிராக பயன்படுத்துவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த வாரம் போலந்து தலைநகரில் அமெரிக்காவின் ஏற்பாட்டில் நடைபெற்ற மத்திய கிழக்கு மற்றும் ஈரானுக்கு இடையிலான மாநாட்டின் இலக்கு அடையப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இது அமெரிக்க பிராந்திய கொள்கைகளின் மற்றுமொரு தோல்வியென்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (7)

# தென்கொரியா சென்ற சங்கம்பள வரவேற்பு




நாடுகளும் தங்களின் மதிப்புகளும் பிராந்திய கண்ணோட்டத்தையும் அமைதியையும் பகிர்ந்து கொள்ளும்.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் இருநாடுகளும் கூட்டுறவுடன் செயற்படுவது வரவேற்கத்தக்கது. அடிப்படை அறிவியல் முதல் முன்னணி ஆய்வுகளில் இருநாடுகளும் இணைந்து செயற்படுவது வரவேற்கக்கூடியது.

நமது மக்கள் தென்கொரிய மக்களுடன் நல்ல நட்புறவோடும், வர்த்தக பரிமாற்றங்களோடும் இருக்கிறார்கள்.

ஒன்றாக இணைந்து பணியாற்றுவது, எதிர்காலத்தில் நமது உறவை முன்னோக்கி அழைத்துச் செல்லும்" எனத் தெரிவித்துள்ளார். (7)

# அமெரிக்கவின் உதவிகளைத் தடுக்க எல்லையை மூடியது வெனிசுவெலா



(கராகஸ்)

வெளிநாடுகளிலிருந்து மனிதாபிமான உதவிகளைப் பெற எதிர்க்கட்சி முயற்சித்து வருகின்ற நிலையில் கரிபியன் தீவுகளுடனான கடல் எல்லையை வெனிசுவெலா மூடியுள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளிடமிருந்து மனிதாபிமான உதவிகளை பெற்றுக் கொள்வதற்கு எதிர்க்கட்சி முயற்சித்து வருகிறது.

இந்நிலையில், எதிர்க்கட்சியின் அந்த முயற்சிகளைத் தடுக்கும் வகையில் வெனிசுவெலா இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவினால் வழங்கப்பட்ட உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் எதிர்வரும் சனிக்கிழமை நாட்டை வந்தடையும் என எதிர்க்கட்சி தலைவர் ஜுவான் கெய்டோ தெரிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து மேற்கு வெனிசுவெலா கடலோர எல்லை ஊடான படகு மற்றும் விமான சேவைகளைத் தடுக்கும் வகையில் எல்லை மூடப்படுவதாக இராணுவப் பிரிவின் தளபதி தெரிவித்தார். ஆனால், எல்லை மூடலுக்கான காரணம் எதனையும் அவர் வெளியிடவில்லை.

நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக பற்றாக்குறை நிலவுவதை மறுத்துவரும் வெனிசுவெலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ, வெளிநாட்டு உதவிக்கான சலுகைகளையும் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# மதிகளின் மீது காள்ள நேரிடும்

ஒஸ்திரியா ஜனாதிபதியுடன் நேற்று முன்தினம் புதன்கிழமை வெள்ளை மாளிகையில் வைத்து கூட்டாக ஊடகவியலாளர்களை சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்துடன் உடன்பாடொன்றை எட்டுவதற்கு தாம் முயற்சித்து வருவதாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்துடன் உடன்பாட்டை எட்டுவது கடினமாகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில், உடன்பாடை எட்டுவது சாத்தியமற்ற நிலையில், ஐரோப்பாவின் கார் இறக்குமதிகள் மீது வரி விதிக்கப்படும் எனத் தெரிவித்தார். (7)

# சலுகை அடிப்படையில் வடகொரியாவுடன் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்தத்தயார்

## தென்கொரிய ஜனாதிபதி ஆவல்



(சியோல்)

சலுகை அடிப்படையில் வடகொரியாவுடன் பொருளாதார உடன்பாட்டை எட்டுவதற்கு எதிர்பார்ப்பதாக தென்கொரியா தெரிவித்துள்ளது.

அணுவாயுதப் பாவனையை ஒழிக்கும் நடவடிக்கையை பியாங்யாங் துரிதப்படுத்தும் பட்சத்தில் இது சாத்தியமாகும் என தென்கொரிய ஜனாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி உரையாடலொன்றின் போது தென்கொரிய ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இருகொரிய நாடுகளுக்கும் இடையே ரயில் மற்றும் வீதி இணைப்புக்களை இணைப்பதன் மூலம் எதனையும் செய்யத் தயாராக இருப்பதாக தென்கொரிய ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதாக ஒருங்கிணைப்பு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (7)

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலுள்ள

# முரண்பாடுகளால் சர்வதேச முதலீடுகள் வரவில்லை!

## மகிந்தானந்த சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விற்கும் இடையில் உள்ள முரண்பாடுகள் காரணமாகவே இலங்கைக்கு சர்வதேச முதலீடுகள் வரவில்லை. மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் செய்துகொண்ட சர்வதேச முதலீடுகளே இன்றும் நாட்டுக்கு வரு கின்றதே தவிர இந்த ஆட்சியில் எவரும் முன்வரவில்லை என எதிர்க்கட்சி நாடா ளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத் கமகே தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இல ங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்ட விவாதத்தில் உரை யாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் முதலீடு கள் குறித்து விவாதம் நடத் தப்பட்டாலும் கூட இந்த ஆட் சியில் பாரிய முதலீடுகள் எவையும் கொண்டு வரப் படவில்லை. ஒருசில சர்வ தேச முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வந்தாலும் கூட அவர்கள் ஏதோவொரு அச்சம் காரணமாக திரும்பிச் சென்று விடுகின்றனர்.

ஒருசில சந்தர்ப்பங்களில் கப்பம் கேட்கும் நிலை மையும் உள்ளது. இந்த ஆட் சிக் காலத்தில் சர்வதேச முதலீட்டாளர்கள் எவரும் இலங்கைக்கு வராததற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகி யோருக்கு இடையிலான முர ண்பாடுகளே காரணமாகும்.

கடந்த மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் செய்து கொண்ட பாரிய வேலைத் திட்டங்கள் மூலமாக இண ங்கிய சர்வதேச முதலீட்டா ளர்கள் தான் இன்றும் நாட் டில் முதலீடுகளைச் செய்து வருகின்றனர்.

குறிப்பாக துறைமுக நகர் மற்றும் சங்கிரில்லா போன்ற வேலைத் திட்டங்களின் மூலமாக நாம் கொண்டு வந்த சர்வதேச முதலீட்டா ளர்கள் மட்டுமே இன்றும் செயற்பட்டு வருகின்றனர்.

இந்த ஆட்சியில் ஒருசில சில்லறைத்தனமான முத லீடுகளைப் பிடித்துக்கொண்டு இவர்கள் மார்தட்டிக்கொள் ளும் நிலைமையே உள் ளது. ஹொரண ரயர் நிறு வனம் குறித்து மட்டுமே இவர்களால் பேச முடிந்து ள்ளது. ஆயிரம் பில்லியன் வேலைத்திட்டம் ஒன்றுகூட இவர்கள் செய்யவில்லை. அவ்வாறான பாரிய முத லீட்டாளர் ஒருவரை இவர் களால் நாட்டுக்குக் கொண்டு வர முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மோசடிமிக்க அமைப்பாக அரசியலமைப்புப் பேரவை

## கம்மன்பில காட்டம்



(கொழும்பு)

கடந்த காலத்தில் எதிர்க் கட்சித் தலைவரால் நியமிக் கப்பட்டவர்கள் பதவி விலகி அரசியலமைப்புப் பேரவை க்கு புதியவர்களை நியமிக்க இடமளிக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித் தார்.

அரசியலமைப்பு பேரவை தொடர்பாக பிரதான எதிர்க் கட்சியால் பாராளுமன்ற உறு ப்பினர் அறையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே கம்மன்பில மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் இருக்கும் மோசடிமிக்க அமைப்பாக சபாநாயகரின் தலைமையில் இயங்கும் அரசியலமைப்புப் பேரவை இருக்கின்றது. அரசியலமைப்புப் பேரவை யில் இருக்கும் சதித்திட்டம் தொடர்பாக நாங்கள் பாராளு மன்றத்தில் இடம்பெறும் விவாதத்தில் வெளிப்படுத்து வோம் எனவும் கம்மன்பில மேலும் தெரிவித்தார். (இ-7)

# மக்கள் எதிர்பார்க்கும் சலுகை இந்த பட்ஜெட்டில் இல்லை

## அமைச்சர் தயாகமகே தெரிவிப்பு



(கொழும்பு)

மக்கள் எதிர்பார்க்கும் விதத்தில் உதவிப் பொதி களை இம்முறை வரவு-செல வுத் திட்டத்தினூடாக வழங்க முடியாது என அமைச்சர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

இவ்வருடத்தில் அரசாங் கத்தின் செலவினங்களில் பெரும்பாலானவற்றை அபி விருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மக்களின் வருமான த்தை அதிகரிக்கும் விதத் திலான அபிவிருத்தித் திட் டங்களின் பால் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தியுள் ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சமாளிப்பு

சமாளிப்பு என்பது ஒரு தனி சாமர்த்தியம்.

அது எல்லோருக்கும் சுலபமாக வந்துவிடாது! சில பேருக்கு அது கைவந்த கலையாக இருக்கும். முக்கியமாக கலைஞர்களுக்கு இந்த சாமர்த்தியம் மிகவும் அவசியம்.

இப்பொழுதெல்லாம் வானொலி நாடகங்களை முன்னாடியே ஒலிப்பதிவு செய்து-இசையெல்லாம் சேர்த்து அழகு செய்து டேப்பிலே தயாரித்து தேவையான நேரத்திலே ஒலிபரப்பி விடுகின்றார்கள்!

முன்னரெல்லாம் இந்த வசதி இல்லை! நேரடியாகவே வசனம் பேசி நடிக்க வேண்டும். அப்படியே அது ஒலிபரப்பவும் தேவைப்படுகின்ற நேரத்திலே இசை, சத்தம் இதையெல்லாம் தனியாக ஒருத்தர் போட்டுக் கொண்டிருப்பார். கதாநாயகன் காட்சி ஆத்துகிறார் என்றால் நிஜமாகவே ஒருத்தர் தனியா ஒரு மைக் முன்னாடி கோப்பியையோ தண்ணியையோ ஆத்தி அந்த சத்தத்தை உண்டாக்கிக் கொண்டிருப்பார். இப்பொழுது என்றால் அந்த சத்தத்தை தனியாக Record செய்து வசனத்தோடு சேர்த்துவிடலாம்.

அந்த நாளிலே இதையெல்லாம் மிகவும் எச்சரிக்கையோடு செய்ய வேண்டும். ஏதாவது தவறாக ஒலிபரப்புச் செய்துவிட்டால் அதை திருத்து வதற்கு வழியே இல்லையே!

காற்றிலே போனது போனதுதானே!

அதுமாதிரி சமயத்திலே சமாளிப்பு மிகவும் அவசியம். அந்தக் காலத் திலே...அரைமணிநேர நாடகம் ஒன்று நடந்து கொண்டிருக்கிறது... நேர டியாக ஒலிபரப்பு ஆகிக்கொண்டிருக்கின்றது!

டி.கே.சண்முகமும் திரௌபதியும் நடித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு இடத்தில் குழந்தை வீறிட்டு அழவேண்டும். உடனே கணவன் மனைவியை பார்த்து பொறுப்பில்லாமல் குடும்பத்தை நடத்துகின்றாய் என்று பேச வேண்டும். இதுதான் சீன்.

ஒரு இசைத் தட்டிலே Effects எல்லாம் பதிவு செய்து இருக்கும். அதிலே குழந்தை அழுகின்ற சத்தம், நாய் குரைக்கின்ற சத்தம், ரயில் போகின்ற சத்தம், பூனை கத்துகின்ற சத்தம் இப்படி நிறைய இருக்கும். அதிலே குழந்தை அழுகின்ற சத்தத்தை ஒருத்தர் அந்த நேரத்திலே போட வேண்டும்.

அந்த இசைத்தட்டிலே அது இரண்டாவது கட்டம். ஆனால் அந்த ஆள் தவறுதலாக மூன்றாவது கட்டத்தைப் போட்டுவிட்டார்! என்ன ஆகிவிட்டது தெரியுமா?

குழந்தை அழுவதற்குப் பதிலாக நாய் குரைக்க ஆரம்பித்துவிட்டது! எல்லோரும் பதறிப் போய்விட்டார்கள்! என்ன செய்வது என்று புரியவில்லை!

அப்போது நாடகத் தயாரிப்பாளராக இருந்த பேராசிரியர் அ.ச.ஞான சம்பந்தன் திகைச்சுப்போய் T.K.S. முகத்தை பரிதாபமாகப் பார்த்தார்.

T.K.சண்முகம் கொஞ்சம் கூட பதறாமல் இப்படி ஆரம்பித்தார்.

ஏன்டி! வாழுகின்ற வீட்டிலே இப்படி நாயைக் கொண்டுவந்து வளர்க்க வேண்டாம் என்று எத்தனை தடவை நான் சொல்வது? குழந்தை அழுகின்ற சத்தத்தைக்கூட நாய் சத்தம் அடக்கி விட்டது பார்த்தீர்களா? என்றார்.

ஒலிபரப்பு அறைக்குள்ளே நடந்த ஒரு தவறு வெளி உலகத்திற்கு தெரியாமல் போய்விட்டது. இதற்குக் காரணம் அந்தக் கலைஞருடைய புத்திசாலித்தனமான சமாளிப்பு.

இதேமாதிரித்தான் 1959 இலே ஒரு வரலாறு நடந்து கொண்டிருக்கின் றது.

இளவரசர் போரிலே வெற்றி பெற்று வந்து கொண்டிருக்கின்றார் என்று சொல்ல வேண்டியவர் மைக் முன்னாடி வந்தார்.

அரசே இளவரசர் தோற்றுப் போய் வந்து கொண்டிருக்கின்றார் என்று சொல்லி விட்டார்.

நாடக தயாரிப்பாளர் எஸ்.கந்தசுவாமி துறைவன் இதைக் கேட்டவுடனே எழுந்து மைக் முன்னாடி ஓடி வந்து நின்றார்.

இளவரசர் தோற்கவில்லை! வெற்றி வாகை சூடி விரைந்து இங்கு வந்து கொண்டிருக்கின்றார். எதிரியின் ஒற்றன் இவன்! பொய் சொல்லி ஓடப் பார்க்கின்றான்! இவனுக்கு சரியான தண்டனை கொடுக்க வேண்டும்! என்று சொல்லிவிட்டு அடிக்க ஆரம்பித்துவிட்டான். அதனாலே நாடகம் அடிபட்டுப் போகாமல் ஒலிபரப்பாகிவிட்டது!

இது மாதிரியான சாமர்த்தியமான சமாளிப்புக்கள், பெரிய தவறுகள் எல்லாம் வெளியே தெரியாமல் காப்பாற்றுவதற்கு உதவியாக இருந்தி ருக்கின்றது!

ஒரு மேடை நாடகம். கலைவாணர் N.S.K. நடித்துக் கொண்டி ருக்கின்றார் அவர் இன்னொருத்தரைப் பார்த்து வசனம் பேசுகின்றார்.

அடிக்கின்ற அடியிலே பல்லு முப்பத்தொன்றும் உடைந்து விடும்! என்று சொல்லிவிட்டார். அவரோடு நடித்துக் கொண்டு இருந்தவர் சிரித்துக் கொண்டே ஒரு பல்லைவிட்டு விட்டீர்களே! என்றார். கலைவாணர் பார்த்தார்.

அந்த ஒரு பல்லிலே பல் வலி வந்தே நீ சாக வேண்டும். அதற்காக விட்டு வைத்திருக்கின்றேன்! என்றார் !

## ரஞ்சன், பத்திரன ஆகியோரின் அமைச்சுப் பதவிகளை நீக்குக



(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மற்றும் பிரதி அமைச்சர் புத்திக பத்திரன ஆகியோரிடமிருந்து அமைச்சுப் பதவிகளை நீக்குமாறு ஐக்கிய தேசிய முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் ஆலோசனை வழங்கியுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஒழுக்காற்றுக் குழுவின் அறிக்கை வரும்வரையில் எதிர்பார்த்திருக்காமல் அவர்களை அப்பதவிகளிலிருந்து நீக்கி விடுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் கொக்கெயின் பயன்படுத்துவதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் தெரிவித்திருந்தார்.

இதே வேளை, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் பன்றிக் கொழுப்பு கலந்திருப்பதாக பிரதி அமைச்சர் பத்திரன குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த இருவரின் கருத்துக்களாலும் அரசாங்கத்துக்கு நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இதன் காரணமாகவே இவர்களை அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அரசியலமைப்பை மீறி தேசிய அரசு அமையாது

## அமைச்சர் ஹாஷிம் தெரிவிப்பு

(கொழும்பு)

**அரசியலமைப்புக்கு முரணாக தேசிய அரசாங்கம் அமைக்கப்படாதெனத் தெரிவித்துள்ள நெடுஞ்சாலைகள் வீதி அபிவிருத்தி, பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாஷிம், மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அனைத்துக் கட்சிகளையும் பொது அரங்கில் ஒன்றிணைக்கும் நோக்குடனேயே தேசிய அரசு அமைக்கும் முயற்சி முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.**

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு சகலரும் ஒத்த கருத்துடன் செயற்பட வேண்டிய தன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார். நீண்ட காலமாக கையாளப்பட்டு வரும் ஒரு விடயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முனைகின்றபோது வாதப் பிரதிவாதங்கள் எழுவது தவிர்க்க முடியாதுதான். ஆனால் அதனை புரிதலுடன் நோக்கும் போது சரியான நிலைப்பாட்டுக்கு வர முடியும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது எனவும் அமைச்சர் கபீர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய அரசாங்கம் தொடர்பில் இன்று நீண்ட வாதப்பிரதிவாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. நாளாந்தம் ஊடகங்களில் இதற்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றன.

ஐக்கிய தேசிய முன்னணி நேர்மையான, நல்லெண்ணத்துடனேயே இத்திட்டத்தை முன்னெடுக்கிறது. 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் சட்டவரையறைக்கு உட்பட்டதாகவே தேசிய அரசாங்கத்தை அமைக்கும் முயற்சிகளை எடுத்து வருகிறோம்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் யாப்புக்கு முரணாக செயற்பட ஐக்கிய தேசிய முன்னணி அரசு முற்படவில்லை. தேசிய அரசாங்கத்தை தனிக் கட்சியால் உருவாக்க முடியாது. ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளைக் கொண்டே அதனைச் செய்ய வேண்டும். இன்றைய அரசுடன் இணைந்து செயற்பட பல கட்சிகளைச் சேர்ந்தோர் முன்வந்துள்ளனர்.

மக்களும், அரசியல் வாதிகளும் அரசுக்கு பலம் சேர்த்து பொது வேலைத் திட்டத்தின் கீழ் செயற்பட்டு நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல விருப்பம் கொண்டுள்ளனர். நாட்டில் அரசியல் ஸ்திர நிலையை ஏற்படுத்த வேண்டியது முக்கியமானதாகும்.

முதலில் நாடு குறித்த நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அதற்காகவே தேசிய அரசாங்கத்தை அமைக்கும் முயற்சி முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர் கபீர் ஹாஷிம் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ் அரசியல்வாதிகள் யானையுடன் கொண்டாட்டம் மக்கள் யானைகளால் திண்டாட்டம்!

## உயிர்ப் பாதுகாப்பளிக்குமாறு கோரி ஆர்ப்பாட்டப் பேரணி






(ஏறாவூர்)

மின்சார வேலி அமைத்து தமக்கு உயிர்ப் பாதுகாப்பளிக்குமாறு கோரி மட்டக்களப்பில் மக்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆர்ப்பாட்ட பேரணியொன்றை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு - தொப்பிகல பகுதி மக்களே இவ்வாறு ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர். திகிலிவெட்டைப் பிரதேசத்திலிருந்து ஆரம்பமான பேரணி கிரான் பிரதேச செயலக முன்றலில் நிறைவடைந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை திகிலிவெட்டை கிராமத்தில் காட்டு யானை தாக்கியதில் இரண்டு பிள்ளைகளின் தாயான முத்துலிங்கம் நிரஞ்சலா (வயது-31) என்பவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். இவ்வாறு கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் பல உயிரிழப்புக்கள் மற்றும் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையிலேயே மக்கள் தமக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

இதன்போது "யானைகளை சரணாலயத்தில் கொண்டே விடு இல்லையேல் எங்களை சரணாலயத்தில் அடைத்துவை, தமிழ் அரசியல்வாதிகள் யானையுடன் கொண்டாட்டம். தமிழ் மக்கள் யானைகளால் திண்டாட்டம். ஆற்றிலும் காட்டிலும் சாகும் எங்களைக் காப்பாற்றுங்கள், எங்கள் உயிர்கள் மிருகங்களுக்கு பலி கொடுக்கவா போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

கடந்த போர்ச் சூழலினால் வெகுவாகப் பாதிப்பட்டு இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்துள்ள தமது வாழ்வாதாரத் தொழில் மற்றும் உடைமைகளையும் காட்டு யானைகள் அழிக்கின்றன.

எனவே யானைகளின் தாக்குதலிலிருந்து பாதுகாப்புப் பெறும்பொருட்டு உடனடியாக மின்சார வேலிகள் அமைக்கப்படவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிரான் செயலகப்பிரிவில் எந்தவொரு பகுதியிலும் இதுவரை பாதுகாப்பு வேலி அமைக்கப்படவில்லை எனத் தெரிவித்த மக்கள், சுமார் 69 கிலோ மீற்றருக்கு யானை வேலி அமைக்கப்பட வேண்டியுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியின் நிறைவாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கான மகஜரொன்றை கோராவெளி வட்டார மக்கள், பிரதேச செயலாளர் எஸ். ராஜ்பாபுவிடம் கையளித்தனர். (இ-7)

## நீதி நூற் தொகுப்புகள் வெளியீட்டு விழா நாளை

(கொழும்பு)

இந்து சமய அறநெறிப் பாடசாலைகளுக்கான வழிகாட்டல்களையும், வசதிகளையும் வழங்கிவரும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தற்போது மாறிவரும் சூழலிற்கு ஏற்ப இந்துசமய அறநெறிக் கல்விச் செயற்பாடுகளை மேலும் மேம்படுத்தி இலங்கையில் வாழும் அனைத்து இந்துச் சிறுவர்களுக்கும் இந்து சமய அறநெறிக் கல்வியை வழங்கும் நோக்குடன் இந்து சமய அறநெறிக் கல்வித் திட்ட பாடவிதானத்தை மீளமைத்தல் மற்றும் இந்து சமய அறநெறிப் பாடசாலைகளை மேலும் சிறப்பாக இயக்குவதற்குரிய பல்வேறு செயற்பாடுகளில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முனைப்பாக ஈடுபட்டு வருகின்றது.

இந்துசமய அறநெறிக் கல்வி - புதிய பாடத்திட்டத்தில் அறப் போதனைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. அத்தகைய போதனைக்குத் துணையாக அமையத்தக்க அறநூல்கள். மாணவர்களின் பருவத்திற்கு ஏற்ற வகையில் தொகுத்து வெளியிடப்படுகின்றது.

இந்துசமய அறநெறிக் கல்வி - புதிய பாடத்திட்டத் திற்கமைவாக வெளிவரும் நீதி நூற் தொகுப்புகள் வெளியீட்டு விழா நாளை 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணியளவில் கொழும்பு, பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறும்.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர், ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்த மகராஜ் திருமுன்னிலையில், யாழ்.பல்கலைக்கழக வேந்தர். பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் இடம்பெறும்.

இவ்விழாவில் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோகணேசன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் ,சிறப்பு விருந்தினராகக் கலந்து "அறத்தான் வருவதே இன்பம்" எனும் தலைப்பில் சிறப்புரையாற்றவுள்ளார். (இ-7)


# PEO TV BIZ

## விளம்பர விபரணம்

15 தொலைக்காட்சிகள் வரை ஒரே ஃபைபர் இணைப்பில் சேவை வழங்குகின்ற இந்நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகங்களுக்கு PEO TV BIZ பொருத்தமான தொலைக்காட்சி தீர்வு.

இந்நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்றுறையின் வர்த்தக இடங்களில் தொலைக்காட்சி சேவையின் தேவையை வழங்குவதற்காக PEO TV BIZ என்ற பெயரில் மிகக் கவர்ச்சிகரமான தீர்வொன்றை வழங்குவதற்கு PEO TV நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி குறித்த வர்த்தகத் தேவைக்கு அமைய, PEO TV BIZ செயல் முறை மூலம் 5 தொலைக்காட்சிகள் தொடக்கம் 15 வரை எண்ணிக்கையில் ஒரே ஃபைபர் இணைப்பு மூலம் PEO TV சேவையை பெற்றுக்கொள்வதற்கு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகர்களுக்கு சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

அதுவரையும் FTTH செயல்முறை மூலம் ஒரே தடவையில் 3 தொலைக்காட்சி இயந்திரங்கள் வரை, அர்ப்பணிக்கப்பட்ட (குறிப் பாக ஒதுக் கப்பட்ட) ஃபைபர் இணைப்பு ஊடாக ஒரே தடவையில் 15 தொலைக்காட்சி இயந்திரங்களுக்கு மேல் PEO TV சேவை வழங்கப்பட்டது.

இதற்கு இடைப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்து செயற்படுகின்ற PEO TV BIZ மூலம் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்றுறைகள் மீது குறித்த இடங்களில் தொலைக்காட்சி இயந்திரங்கள் பலதிற்கும் ஒரே தடவையில் சேவையை வழங்குவதற்காக மிகப் பொருத்தமான தீர்வொன்று வழங்கப்படுகிறது.

இந்நாட்டின் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக மத்திய தரத்திலான ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலா இல்லங்களுக்கான கேள்வி அதிகரித்து வருகின்ற காலத்தில் PEO TV போன்ற தொலைக்காட்சி சேவை ஒன்று அங்கு நிறுவப்பட்டிருப்பது கட்டாய தேவையாக மாறியுள்ளது.

இதன்போது ஒரு அறைக்கு ஒன்று என்ற வகையில் PEO TV தொலைக்காட்சி சேவையை பெற்றுக்கொள்வது நடைமுறைச் சிக்கல்கள் பலதையும் ஏற்படுத்துவதோடு, இவ்வாறு ஒரு ஃபைபர் இணைப்பு அனைத்து தொலைக்காட்சிகளுக்கு மான தேவையைப் பூர்த்தி செய்து கொள்வது இதற்கு சிறந்த தீர்வாக அமையும்.

பல்பொருள் அங்காடிகள், வேறு காட்சியகங்கள், வைத்தியசாலைகள் மற்றும் பராமரிப்பு நிலையங்கள் என்பவற்றுக்கு தொலைக்காட்சி சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு இந்த PEO TV BIZ பொருத்தமான தீர்வாகும்.

PEO TV என்பது நிலையான அலைவரிசை ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற தொலைக்காட்சி சேவை வழங்கல் என்பதால் மழை போன்ற காலநிலை சூழலில் எந்த ஒரு ஒளிபரப்பு தடங்கலும் ஏற்படாத நம்பிக்கையான சேவையாகும் அதே போன்று PEO T.V சேவையை பெற்றுக் கொள்ளுமபோது. தமது வாடிக்கையாளர்களின் தேவைக்கு அமைய முக்கியமாக தயாரிக்கப்பட்ட பக்கேஜ்களை தேர்வு செய்யும் சந்தர்ப்பம் வர்த்தகர்களுக்கு கிடைக்கும்.

அடிப்படை முதலீடு இன்றி அல்லது மிகக் குறைந்த அடிப் படை முதலீடு ஒன்றின் மூலம் இந்த சேவையை பெற முடி யுமாக இருப்பதும் சிறப்பம்சமா கும். PEO TV சேவையை இணைக்கும் போது டிஸ்க் அல்லது அன்டெனா ஆகியன பயன்படுத்தப்படுவதில்லை என்பதால் ஹோட்டல் அல்லது வர்த்தீக இடங்களில் பார்வை மற்றும் அழுகுக்கு இதனால் எந்த ஒரு பாதிப்பும் ஏற்படாது.


இதுபோன்ற காரணங்கள் அனைத்தையும் கவனத்தில் கொள்ளும்போது PEO TV மூலம் வழங்கப்படுகின்ற PEO TV BIZ என்ற இந்த "பல் வழங்கல் கொண்ட தனி இணைப்பு" இலங்கை வர்த்தகத் துறையில் இன்றைய காலத்தின் தொலைக்காட்சி சேவையின் தேவையை சிறப்பாக பூர்த்தி செய்கின்றது.

# போர்த்துக்கீசர் - ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணப் பட்டினம் - ஒரு பார்வை

10

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.





ஊர்காவற்றுறை (Map of the island of Leiden)

| தமிழ்ப்பெயர் | உச்சரிப்புக் கேற்ப டச்சுமொழியில் பெயர் |
|---|---|
| வேலணை | Welene |
| சரவணை | Charawane |
| நாரந்தனை | Narendane |
| கரம்பொன் | Caremben |
| மண்கும்பான் | Mangoepaen |
| அல்லைப்பிட்டி | Allapetti |
| மண்டைதீவு | Mandativeo |

### தீவுகளிலிருந்த கோவில் பற்றுக்கள்

இத் தீவுகள் 7 கோவில் பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

அவையாவன: (1) காரை தீவு (காரைநகர்), (2) புங்குடு தீவு, (3) அனலைதீவு, (4) நயினாதீவு, (5)வேலணை, (6) அல்லைப்பிட்டி மற்றும் (7) ஊர்காவற்றுறை (டச்சு மொழியில் "Oeratoere"). இவைக்குள் பல கிராமங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### வலிகாமம் மாகாணத்திலிருந்த கோவில் பற்றுக்கள்

வலிகாமம் மாகாணம் 14 கோவில் பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவையாவன:

பல கிராமங்கள் ஒவ்வொரு கோவில் பற்றுக்குள்ளும் உள்ளடங்கியிருந்தன. ஒல்லாந்தர் மொத்தமாக 68 கிராமங்களை இப் பதினான்கு கோவில் பற்றுகளுக்குள் அடையாளப் படுத்தியிருந்தர்கள். இக் கிராமங்களில் பல கீழே காட்டப்பட்டுள்ள இட விளக்கப் படத்தில் குறித்துக்காட்டப்பட்டுள்ளன.

### கோவில் பற்றுக்களும் கிராமங்களும்

(1) வட்டுக்கோட்டை கோவில் பற்று (3 கிராமங்கள்):- மேல் வட்டுக்கோட்டை , கீழ் வட்டுக் கோட்டை மற்றும் அராலி

(2) சங்கானை கோவில் பற்று (4 கிராமங்கள்):- சங் கானை, மூளாய், தொல்புரம் மற்றும் சுழிபுரம்

(3) பண்டத்தரிப்பு கோவில் பற்று:- சில்லாலை, மாதகல், பெரியவிளான், சிறுவிளான் மற்றும் சில கிராமங்கள்

(4) உடுவில் கோவில் பற்று (5 கிராமங்கள்):- உடுவில், சங்குவேலி , சுன்னாகம், இணுவில் மற்றும் தாவடி

(5) மானிப்பாய் கோவில் பற்று (5 கிராமங்கள்):- மானிப்பாய், சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி மற்றும் சண்டிலிப்பாய்

(6) மல்லாகம் கோவில் பற்று:- மல்லாகம், அளவெட்டி, ஈவினை, ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் மற்றும் சில கிராமங்கள் .



வலிகாமம் மாகாணம்
கோவில் பற்றுக்கள்-14
கிராமங்கள் - 68

| தமிழ்ப்பெயர் | உச்சரிப்புக் கேற்ப டச்சுமொழியில் பெயர் |
|---|---|
| வட்டுக்கோட்டை | Battecotte |
| சங்கானை | Changane |
| பண்டத்தரிப்பு | Pandatripoe |
| உடுவில் | Oedoewil |
| மானிப்பாய் | Manipaey |
| மல்லாகம் | Mallagem |
| வண்ணார்பண்ணை | Wannaerponne |
| தெல்லிப்பழை | Tellipalle |
| மயிலிட்டி | Maylettie |
| அச்சுவேலி | Atchoewely |
| கோப்பாய் | Coopaey |
| புத்தூர் | Poettoer |
| நல்லூர் | Nalloer |
| சுண்டிக்குளி | Choendikoeli |

(7) வண்ணார்பண்ணை கோவில் பற்று (1கிராமம்):- வண்ணார் பண்ணை

(8) சுண்டிக்குளி கோவில் பற்று (6 கிராமங்கள்):- சுண்டிக் குளி, கரையூர், கொழும்புத்துறை, சிவியார்தெரு மற்றும் இரு கிரா மங்கள்

(9) தெல்லிப்பழை கோவில் பற்று (5 கிராமங்கள்):- தெல் லிப்பழை, மாவிட்டபுரம், பளை, வீமன்காமம் மற்றும் கட்டுவன்

(10) மயிலிட்டி கோவில் பற்று (7 கிராமங்கள்):- மயிலிட்டி, வயாவிளான், பலாலி, வறுத் தலைவிளான்,தையிட்டி மற்றும் இரு கிராமங்கள்

(11) அச்சுவேலி கோவில் பற்று (7 கிராமங்கள்):- நவக் கிரி, பத்தமேனி, கதிரிப்பாய், வள் ளாய், தம்பாளை மற்றும் இரு கிராமங்கள்.

(12) கோப்பாய் கோவில் பற்று (5 கிராமங்கள்):- கோப் பாய், இருபாலை,உரும்பிராய், ஊரெழு, மற்றும் நீர்வேலி

(13) புத்தூர் கோவில் பற்று (4 கிராமங்கள்):- புத்தூர், சிறுப்பிட்டி, அச்செழு மற்றும் ஆவரங்கால்

(14) நல்லூர் கோவில் பற்று (4 கிராமங்கள்):- நல்லூர், திருநெல்வேலி,கொக்குவில் மற்றும் கேரண்டாவில்

### வடமராட்சி மாகாணத்திலிருந்த கோவில் பற்றுக்கள்

வடமராட்சி மாகாணம் 3 கோவில் பற்றுக்களாகப் பிரிக் கப்பட்டிருந்தன. அவையா வன:

**தமிழ்ப்பெயர்- உச்சரிப்புக் கேற்ப டச்சுமொழியில் பெயர்**

(1) உடுப்பிட்டி-Ureputti

(2) பருத்தித்துறை Par etitoere/ PuntoPedro

(3) கட்டவேலி-Katte welie

ஒல்லாந்தர் மொத்தமாக 9 கிராமங்களை இம் மூன்று கோவில் பற்றுகளுக்குள் அடையாளப்படுத்தியிருந்தார்கள். இக் கிராமங்களில் பல கீழே காட்டப்பட்டுள்ள இடவிளக்கப் படத்தில் குறித்துக்காட்டப்பட்டு ள்ளன.

(தொடரும்...)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

177



சென்னையில் தங்கசாலைத் தெருவிலுள்ள நாவலர் அச்சகத்தில் அன்னார் உபயோகித்த புத்தகப் பலகை,விபூதிச் சம்புடம், அச்சுமாலை ஆகியன இன்றும் பேணி வைக்கப்பட்டுள்ளன

> “யாழ்ப்பாணத்திலிருந்த சிறிய அச்சுக்கூடம் நாவலருடைய வெளியீட்டுத் தேவைகளுக்குப் போதாமல் இருக்கவே அவர் சென்னையில் ஜூலை 1858 இல் ஒரு பெரிய அச்சுக் கூடத்தை நிறுவினார். நாவலரது முயற்சியின் பரந்துபட்ட வீச்சையும் அளவையும் மட்டுமன்றித் தமிழ்மக்களுக்கு இந்த வெளியீடுகள் மூலம் அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கு எவ்வளவு தாராளமான வாய்ப்புக்களை அளித் தார் என்பதும் இதனால் தெரிகின்றது”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

### சைவத் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி

பத்தொன்பதாவது நூற்றாண்டின் நடுப்பகுதியில் நாவலர் அச்சுக்கூடத்தை நிறுவியபோது சைவ இலக்கியம், தமிழ் சிறப்பிலக்கியம் இரண்டுமே புத்துயிர் பெற்றன.

நாவலருக்கு முன்பு தமிழருக்குச் சொந்தமான அச்சுவசதிகள் எதுவும் இருக்கவில்லை. எனினும் சைவத் தமிழ் இலக்கியங்கள் சில தென்னிந்தியாவிலுள்ள தமிழ்நாட்டில் அச்சிட்டு வெளியிடப்பட்டன.

இந்த வெளியீடுகள் தவறுகள் நிறைந்தவையாகக் காணப்பட்டதால் தவறற்ற பூரணத் தன்மை வாய்ந்த நாவலரின் முயற்சி அறிஞர்களால் உயர்வாகப் பாராட்டப்பட்டது.

செல்லரித்துப் போகும் ஓலைச் சுவடிப் பிரதிகளைச் சேகரித்து ஊக்கமுடன் அவற்றை வெளியிட்ட பெருமை நாவலரையே சாரும். அவருடைய பங்களிப்புக்களில் முக்கியமானவற்றுள் இதுவும் ஒன்றாகும்.

சைவத்தமிழ்ப் பாரம்பரியங்களை பாதுகாத்துப் பேணும் நடவடிக்கைகளான அவருடைய கிறிஸ்தவ எதிர்ப்பு நடவடிக்கைகள் போன்று சைவசமயக் கோட்பாடுகள் பற்றிய உரைகள் போன்று சைவப் பாடசாலைகளை நிறுவியமை போன்று இதுவும் இருந்தது.

நாவலரது ஆரம்ப இலக்கிய முயற்சிகளின் முன் தமிழ் மொழி மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தது. சைவத் தமிழ் சிறப்பிலக்கியங்கள் பண்டிதர்களின் உடைமையாகவே கோவில் மற்றும் ஆசிரமங்களில்தான் வைக்கப்பட்டிருந்தன.

எனவே பொதுவாக இவை எல்லோருக்கும் கிடைக்கும் வகையில் இருக்கவில்லை. நாவலரே அவர்களை இணங்கச் செய்து அவர்களிடமிருந்து இலக்கிய ஆக்கங்களை இரவல் பெற்று அவற்றைப் பிழைகளின்றிப் பதிப்பித்துப் பிரசுரிக்கக் கடுமையாக உழைத்தவர். நாவலருடைய முயற்சிகள் பற்றி அண்மைக் காலத்து ஆய்வாளரொருவர் எழுதியிருப்பதாவது,

நாவலர் பெருமான் பகலெல்லாம் ஏடும் கையுமாக இருந்தார். எப்பொழுதும் ஏட்டுப் பிரதிகளை சுத்தமாக எழுதிக் கொண்டு இருந்தார். அவருக்கு கைலாயபிள்ளை, சதாசிவம் பிள்ளை போன்ற சிலர் பிரதி செய்ய உதவுவதுண்டு. ஒவ்வொரு பிரதியையும் நாவலர் ஒன்றுக்கு ஐந்து தடவை பார்த்து ஒரு புள்ளிகூடப் பிசகாமல் திருத்தியே அச்சுக் கோர்ப்பார்.

யாழ்ப்பாணத்திலிருந்த சிறிய அச்சுக்கூடம் நாவலருடைய வெளியீட்டுத் தேவைகளுக்குப் போதாமல் இருக்கவே அவர் சென்னையில் ஜூலை 1858 இல் ஒரு பெரிய அச்சுக்கூடத்தை நிறுவினார். நாவலரது முயற்சியின் பரந்துபட்ட வீச்சையும் அளவையும் மட்டுமன்றித் தமிழ் மக்களுக்கு இந்த வெளியீடுகள் மூலம் அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கு எவ்வளவு தாராளமான வாய்ப்புக்களை அளித்தார் என்பதும் இதனால் தெரிகின்றது.

அறிவுத் தாகங்கொண்ட மக்களிடையில் அறிவைப் பரப்புவதில் நாவலர் எத்துணை ஊக்கமாக இருந்தார் என்பது அவரது பின்வரும் கூற்றிலிருந்து ஓரளவு தெரிகின்றது.

வாருங்கள் வந்து கற்றுக் கொள்ளுங்கள்! என்ற வார்த்தைகளுடன் நாவலர் தனது அறிவுக் கேணியில் மொண்டு ஊற்றுப்போல் பெருகி அறிவுத் தாகம் கொண்டவர்களுக்கு உலக நிலைமை பற்றிய தகவல்களையும் புதிய அறிவையும் வழங்கினார்.

சிறப்பிலக்கியங்களை மறுபதிப்புச் செய்தல், உரை விளக்கங்களை வெளியிடுதல், புதிய இலக்கியங்களை ஆக்குதல் என நாவலர் மூன்று பெரிய வெளியீட்டுத் திட்டங்களை மேற்கொண்டார். நாவலராலும் அவரைப் பின்பற்றியவர்களாலும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை நாம் ஆராய்வது அவசியம்.

நாவலர் பல சிறப்பிலக்கியங்களை மறுபதிப்புச் செய்தார். கோவில்புராணம், கந்தபுராணம், சேதுபுராணம், பெரியபுராணம், பாரதம், நைடதம், தொல்காப்பியத்திலிருந்து இலக்கணம் என்பன இவையாகும்.

இத்துறையில் நாவலர் ஆற்றிய பணியை இலங்கைத் தமிழரும் தமிழ்நாட்டுத் தமிழரும் பாராட்டினர். இத்திட்டமானது பல அறிஞர்களினாலும் குறிப்பாக நாவலருடைய சகாக்களினாலும் மாணவர்களினாலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட ஒன்றாக இருந்தது.

இவர்களுள் அதிமுக்கியமான சி.வை. தாமோதரம்பிள்ளை கிறிஸ்தவராகப் பிறந்து ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவப் பாடசாலையில் கல்வி பயின்று பின்னர் சைவ சமயத்தைத் தழுவியவர். இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தனது உயர்கல்வியைத் தொடர்ந்து அப்பல்கலைக்கழகத்தில் 1857 இல் பட்டம் பெற்ற முதல் பட்டதாரிகளில் ஒருவராகும்.

இதன்பின்னர் தொடர்ந்தும் இந்தியாவில் வசித்துக் குடியேற்ற அரசாங்கத்தில் வேலை பார்த்த தாமோதரம்பிள்ளை அங்கிருந்த காலத்தில் இலக்கிய முயற்சிகளிலும் ஈடுபட்டார்.

பழந்தமிழ் ஓலைச்சுவடிகளைப் பதிப்பிப்பதில் இவர் பாரிய சிரமங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. தமிழ் நாடெங்கிலும் பயணம் செய்து இவற்றைச் சேகரிக்கவும் அதிலுள்ளவற்றைப் புரியும்படி மாற்றவும் இவருக்குப் பெருமளவு நேரமும் முயற்சியும் தேவைப்பட்டது.

(தொடரும்)

# போர்க்காலத்தில் எனது தம்பி கொல்லப்பட்டார் அதற்காக தமிழ் மக்களுடன் முரண்படவில்லை

## மறப்போம், மன்னிப்போம் பாணியில் முன்னாள் படைத்தளபதி கருத்து



(கொழும்பு)

நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதில் சிங்கள மக்கள் தமது கடமையை சரிவர நிறைவேற்றியுள்ளனர். எனவே தமிழர் தரப்பிலிருந்துதான் மேலதிகப் பங்களிப்பு அவசியம் என முன்னாள் விமானப்படைத் தளபதி மார்ஷல் ரொஷான் குணதிலக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "போர் முடிவடைந்த பின்னர், விடுதலைப் புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டனர்.

குறித்த திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இவ்வாறு விடுதலைப்புலி உறுப்பினர்கள் மன்னிக்கப்பட்டு, விடுவிக்கப்பட்டுள்ள இத்தகைய செயற்பாடுகளை தமிழர் தரப்பு வரவேற்கவேண்டும்.

நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு சிங்கள மக்கள் என்ற வகையில் எமது கடமையை சரிவர செய்துள்ளோம். ஆகவே, நல்லிணக்கம் என்ற இலக்கு வெற்றியடைய வேண்டுமென்றால், தமிழர் தரப்பு கூடுதல் பங்களிப்பை வழங்க முன்வரவேண்டும்.

போர்க்காலத்தில் எனது தம்பி கொல்லப்பட்டார். அதற்காக நான் தமிழ் மக்களுடன் முரண்படவில்லை. எனக்கு அதிகளவில் தமிழ் நண்பர்கள் இருக்கின்றனர்.

படையினருக்கு எதிராக தாக்குதல் தொடுத்த புலிகள் மன்னிக்கப்பட்டனர்.

எனவே, தமிழர் தரப்பிலிருந்து இதைவிடவும் மேலதிகப் பங்களிப்பை எதிர்பார்க்கின்றோம்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அனைத்துச் சமூகத்தினரும் ஒன்றிணைந்து வாழவேண்டும்

## குமார் சங்கக்கார அறிவுரை



(கொழும்பு)

அனைத்து சமூகத்தினரும் ஒன்றிணைந்து வாழ்ந்தால்தான் சிறந்த பலன் கிடைக்கும் என முன்னாள் கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

சர்வதேச பாடசாலை ஒன்றின் தடகள போட்டிகள் நிறைவு விழாவில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்த நாட்டில், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். நாம் அனைவரும் ஏதோ ஒரு வகையில் இணைக்கப்பட்டுள்ளோம்.

எவராலும் தனித்து வாழ முடியாது. அனைவருக்கும், கனவு மற்றும் இலட்சியம் உண்டு. எனவே அனைவரும் ஒன்றிணைந்து வாழ வேண்டும்.

நாட்டில் இருக்கும் மக்களில் ஒரு பகுதியினர் மட்டுமே குரல் கொடுப்பதால் எந்தவித பலனும் கிடையாது. உதாரணமாக கைதட்டும் ஓசையை எடுத்துக் கொண்டால் நான்கு விரல்களும் சேர்ந்தால் மட்டுமே ஓசை வரும்.

அதே போல அனைத்து சமூகமும் ஒன்றிணைந்து வாழ்ந்தால்தான் சிறந்த பலன் கிடைக்கும். எனவே இந்த நிலைப்பாட்டை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்ல வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### வடக்கு–கிழக்கு இளைஞர்களுடன்

# ஜனாதிபதித் தேர்தல் குறித்து கோத்தபாய கலந்துரையாடல்



(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, வடக்கு, கிழக்கிலுள்ள இளைஞர்கள் சிலரை கொழும்புக்கு அழைத்து பேச்சு நடத்தியுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

வெளிச்சம் என்ற அமைப்பின் செயற்பாடுகளை இவ்விரு மாகாணங்களிலும் தீவிரமாக முன்னெடுப்பதற்கான செயற்றிட்டங்கள் குறித்தே இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

இதன்படி அடுத்த மாதத்துக்குள் மாவட்ட இணைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளதுடன், தொகுதி மட்டத்திலான செயற்பாட்டாளர்களுக்கான நியமனமும் வழங்கப்படவுள்ளது.

புதிய அரசியலமைப்பு, ஜனாதிபதித் தேர்தல் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பிலும் மேற்படி சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன கூட்டணியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷவே களமிறக்கப்படவேண்டும் என பங்காளிக் கட்சிகளும், கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளும் வலியுறுத்தி வருகின்றன.

ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து கோத்தபாய ராஜபக்ஷவும் செயற்பாட்டு அரசியலில் இறங்கியுள்ளார்.

இந் நிலையிலேயே, வடக்கு, கிழக்கு மாகாணங்களையும் கோத்தபாய குறிவைத்து தற்போது காய் நகர்த்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1651

Search for people, places and things

### மனோ

அருமையான புகைப்படம்... தலைகீழாகவும் பாருங்கள்... வாழ்க்கையும் அப்படித்தான். சில சமயங்களில் நமக்கான தீர்வுகளை அது வேறு வழிகளிலும் நமக்குத் தரும்...



### பாமினி

வெள்ளை அடிக்காத சுவரும்
வசிலின் போடாத பிகரும் பளிச்சின்னு
இருந்ததா சரித்திரமே




### அசோக்

மற்றவர்களை அழிக்க நினைப்பவர்கள் அழிந்து போவார்கள் என்பதற்குச் சரியான உதாரணம் ERESAR




### விமல்



### அஸ்வின்

I Phone நாங்களும் வச்சிருக்கிறமல்ல




### ராகவன்

நாங்களும் யோசிப்போம்ல



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஞானசாரருக்கு எதிரான தீர்ப்பை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்

## ஜனாதிபதியிடம் பொதுபல சேனா கோரிக்கை



(கொழும்பு)

**பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞான சார தேரரின் விடுதலை தொடர்பில் கடந்த காலங்களில் முறையான வழிமுறைகளை கையாண்டும் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படவில்லை. எனவே பௌத்தமத மகாநாயக்க தேரர்களும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இவ்விடயம் தொடர்பிலும் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பிலும் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என பொதுபல சேனா அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

பொதுபல சேனா அமைப்பின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அந்த அமைப்பினர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தனர்.

அந்த அமைப்பின் இளம் பிக்குகள் தெரிவிக்கையில், பௌத்த மத பாதுகாப்பை கருத்திற் கொண்டே பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் மதமாற்றம் செய்ய முனையும் ஒரு சில தரப்பினருக்கும், முஸ்லிம் அடிப்படைவாதிகளுக்கு எதிராகவும் செயற்பட்டமையானது பௌத்த மதத்தை பாதுகாக்கும் ஒரு துறவியின் கடமையாகும்.

ஆனால் இவ்விடயங்களை ஒரு தரப்பினர் தங்களின் அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்தி இவரது கருத்துக்களை தவறான வழிமுறையில் சித்திரிக்க ஆரம்பித்து விட்டனர்.

ஞானசார தேரர் ஒரு இனவாதி என்ற பொய்யான அபிப்பிராயத்தை சில அரசியல் வாதிகள் குறிப்பிட்டே தங்களை அரசியலில் அறிமுகப்படுத்தி பிரபல்யமடைந்து கொண்டார்கள்.

நீதிமன்றத்தின் தீர்ப்பை எவரும் விமர்சிக்க முடியாது. ஆனால் அதற்கு முன்னர் இவர் மீது சாட்டப்பட்ட குற்றங்கள் யதார்த்தமான விடயங்களை மாத்திரம் உள்ளடக்கி அரசியல் செல்வாக்குடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.

ஞானசார தேரரின் விடுதலை தொடர்பில் கடந்த 6 மாத காலமாக நாங்கள் பல வேறு வழிமுறைகளில் நடவடிக்கைகளை மேற்கொண்டோம் . ஜனாதிபதியிடம் பலமுறை மனுக்களை சமர்ப்பித்தும் இதுவரை காலமும் எவ்விதமான முன்னேற்றகரமான தீர்வும் கிடைக்கப் பெறவில்லை.

ஞானசார தேரரது விடுதலைக்காக தற்போது முன்னெடுக்கின்ற அனைத்து விதமான முயற்சிகளையும் தொடர்ந்து செய்யவுள்ளோம் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அபிவிருத்தித் திட்டங்களுக்காக 4000 மில்லியன் ரூபா கோரல்

(ஹற்றன்)

பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான அபிவிருத்தி அதிகார சபையின் ஓர் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்காக நிதி அமைச்சிடம் 4000 மில்லியன் ரூபாய் நிதி கோரப்பட்டுள்ளது.

அதிகார சபையின் பணிப்பாளர்களுள் ஒருவரான எம்.வாமதேவன் இதனைத் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான புதிய அபிவிருத்தி அதிகார சபை கடந்த 7ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இந் நிலையில் அதிகார சபைக்கான கட்டடத்தையும், தேவையான உபகரணங்கள் உள்ளிட்ட ஏனைய மூலதனச் செலவுகளுக்காகவும், உத்தியோகத்தர்களை பணிக்கு அமர்த்துவதற்காகவும் மொத்தமாக 180 மில்லியன் ரூபாய், நிதி அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது.

அந்த நிதி கிடைக்கப் பெற்றதன் பின்னரே அதிகார சபையின் பணிகளை ஆரம்பிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இனவாதம் பேசுவோர் மனிதவளத்தை இனியும் வீணடிக்கக்கூடாது - நஸீர்

(கொழும்பு)



இனவாதம் பேசுவோர், நாட்டின் அனைத்து சமூக இளைஞர்,யுவதிகளின் பெறுமதியை அளவிடமுடியாத மனித வளத்தையும் அவர்களது எதிர்காலத்தையும் வீணடிக்க இனியும் இடம் கொடுக்ககூடாது என தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் தலைவர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் தலைவராக நியமனம் பெற்றுள்ள அவர் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போதுஅவர் மேலும் தெரிவிக்கையில், பின்தங்கிய கிராமங்களைத் தொடர்ந்தும் பின்தள்ளி வைக்காமல் வீட்டுக்கொரு தொழில் வாய்ப்பை உருவாக்கி கைத்தொழில் கிராமங்களாக மலரச் செய்வதை இலக்காகக் கொண்டு தான் செயற்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

பின்தங்கிய கிராம மக்களே பொருளாதார. உட்கட்மான, கல்வி, வேலைவாய்ப்பு. அரசியல் என்று எல்லா வகையான பாரபட்சங்களுக்கும் முகங்கொடுத்து வருவதால் கிராமங்களிலேயே கைத்தொழில் பேட்டைகள் உருவாக்கப்பட வேண்டும்.

அந்தவகையில் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இந்த கைத்தொழில் பேட்டைகள் இயங்கி வருகின்றன.

ஏறாவூரில் சர்வதேச தரத்திலான 3 ஆடைத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்ற நிலையில் ஏறாவூரில் இன்னும் ஒரு தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. அதுவும் இயங்கத் தொடங்கிவிட்டால் சர்வதேச உத்தரவாத தொழிற்றகைமையுடன் பயிற்சி பெற்ற சுமார் 1000 பேருக்கான தொழிற் பேட்டையாக அது விளங்கும்.

இதனுடன் இணைந்ததாக கிராமங்களில் வட்டியில்லாக் கடன் மூலம் சிறு கைத்தொழில்களை ஆரம்பித்து இளைஞர்,யுவதிகளுக்கு பெருளாதார வளத்தை ஏற்படுத்தும் திட்டங்களும் அமுல்படுத்தப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## இருவருக்கு மரண தண்டனை

# 704 படையினர் மீது அரசு குற்றச்சாட்டு!



### முன்னாள் தளபதிகள் விசனம்

(கொழும்பு)

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் 67 அதிகாரிகளும், 637 படையினரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிடும் போதே முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க, முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் றொஷான் குணதிலக, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் திசார சமரசிங்க ஆகியோர் இவ்வாறு குற்றம் சுமத்தினர்.

"2015 ஜனவரிக்குப் பின்னர் முப்படைகளையும் சேர்ந்த 67 அதிகாரிகளும், 637 படையினரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்தக் காலப்பகுதியில் இராணுவ அதிகாரிகள் 15 பேரும், கடற்படை அதிகாரிகள் 35 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில், இராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகள் 7 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.


ஒரு அதிகாரிக்கும் ஒரு இராணுவச் சிப்பாய்க்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது" என அவர்கள் இதன்போது கூட்டாக குற்றம் சுமத்தியிருந்தனர். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 60 | 60 | 110 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 80 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 140 | 160 | 200 |
| தக்காளி | 40 | 30 | 50 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 70 | 40 | 60 |
| கோவா | 50 | 50 | 50 | 50 | 60 |
| கரட் | 120 | 100 | 100 | 90 | 120 |
| பூசணி | 40 | 30 | 20 | 40 | 40 |
| புடோல் | 60 | 60 | 60 | 30 | 60 |
| வாழைக்காய் | 80 | 90 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 120 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 100 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 | 40 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 80 | 100 | 80 | 50 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 30 | 25 | 50 | 40 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 300 | 350 | 600 |
| போஞ்சி | 50 | 50 | 80 | 70 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 40 | – | 50 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 50 | 80 | 60 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 100 | 130 | 120 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 40 | 60 | 60 | 60 | 100 |
| முள்ளங்கி | 30 | 50 | 40 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 15 | 40 |
| வல்லாரை | 15 | 60 | 20 | 10 | 30 |
| ஈரப்பலா | 50 | – | 40 | 100 | 80 |




# புலிக்கு பிறந்தது பூனை ஆகுமா?



ஒரு சமயம் அரபுநாட்டு அரசர், கிருஷ்ணதேவராயருக்கு ஒரு அதிசய ரோஜா செடி ஒன்றை பரிசாக அளித்தார். அதை மன்னர் தனது தோட்டத்தில் நட்டு வைத்தார்.

சிறிது காலத்திற்கு பிறகு அந்தச் செடியில் இருந்து ரோஜா மலர்கள் மலர்ந்தன. அங்கு வந்த தெனாலி ராமனின் மகன் அதை பறித்து தனது தாய்க்கு பரிசாகக் கொடுக்க நினைத்து பூக்களை பறிக்க தொடங்கினான். பூக்களைப் பறித்துக் கொண்டு இருக்கும் போது அரண்மனைக் காவலர்கள் பார்த்துவிட்டனர்.

அரண்மனைக் காவலர்கள் தெனாலி ராமனின் மகனை அரசர் கிருஷ்ண தேவராயரிடம் காண்பிக்க அழைத்துச் சென்றனர். செல்லும் வழியில் தெனாலி ராமன் காவலர்களை பார்த்து “என் மகனை எங்கே அழைத்துக்கொண்டு செல்கிறீர்கள்?" என்று கேட்டான்.

அவர்களோ! “உங்கள் மகன் ரோஜா பூக்களை திருடிய போது அவனை நாங்கள் பிடித்துவிட்டோம். இப்போது அவனை மன்னரின் பார்வைக்காக அழைத்துச் செல்கிறோம். வேண்டுமென்றால் அவன் கைகளில் உள்ள திருடிய ரோஜா பூக்களை பார்" என்று அவன் கைகளைக் காண்பிக்கச் செய்தனர்.

தெனாலிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இருந்தாலும் தன் மகனை காப்பாற்ற விரும்பிய தெனாலி சிறிது நேரம் யோசித்து தான் அணிந்திருந்த மேலாடையைக் கழற்றி மகன் மேல் போர்த்திவிட்டான்.

இன்று வெயில் அதிகமாக உள்ளது. இந்த துணி என் மகனை காப்பாற்றும் என்று கூறிவிட்டுச் சென்றார்.

புலிக்குப் பிறந்தது பூனை ஆகுமா? தெனாலி மகன் தந்தை கூறியதை யோசிக்க தொடங்கினான். உடனே ஒவொரு பூக்களாக சாப்பிட ஆரம்பித்தான். துணி மூடி இருப்பதனால் அவன் பூக்களை சாப்பிடுவதை காவலர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை

அரண்மனைக் காவலர்கள் தெனாலி ராமனின் மகனை அரசர் கிருஷ்ண தேவராயர் முன்னால் அழைத்துச்சென்றனர்.

காவலர்கள் மன்னரை பார்த்து “அரசே! தெனாலி ராமனின் மகன் பூக்களை திருடிய போது அவனை நாங்கள் பிடித்துவிட்டோம். இந்த குற்றத்திற்கு நீங்கள் தண்டனை வழங்க வேண்டும்" என்று கூறினர்.

மன்னரும் எல்லாவற்றையும் கேட்டறிந்து, பின்னர் அரசர் காவலர்களை பார்த்து, “திருடிய பூக்கள் எங்கே?" என்று கேட்டார்.

காவலர்கள் மன்னரை பார்த்து, “பூக்கள் அனைத்தும் அவன் கைகளில் தான் அரசே உள்ளது" என்று காவலர்கள் கூறினர்.

அரசர் தெனாலி மகனை பார்த்து, “உன் கைகளை காட்டு" என்று கூறினார்.

அவனும் வெறும் கைகளைக் காண்பித்தான். அவன் கைகளில் எதுவும் இல்லை.

மன்னர் தெனாலி மகனைப் பார்த்து, “நீ பறித்த பூக்கள் எங்கே?" என்று கேட்டார்.

அவனோ! மன்னரைப் பார்த்து, “நான் பூக்கள் எதுவும் பறிக்கவில்லை. என் தந்தைக்கு அவமானம் ஏற்படுத்தவே இந்த இரண்டு காவலர்களும் இப்படிச் செய்தார்கள்" என்று கூறினான். மன்னரும் அந்த இரண்டு காவலர்களையும் திட்டி அனுப்பிவிட்டார். தெனாலியும் அவன் மகனும் எப்படியோ தப்பித்தோம் என்று சிரித்துக் கொண்டே வீட்டிற்குப் புறப்பட்டனர்.

## பழங்களைப் பார்



பாப்பா இங்குள்ள பழங்களை பார்
பல பல நிறத்தில் பழங்களுண்டு
மஞ்சள் நிறத்தில் வாழை பழங்கள்
சிவப்பிலும் இருக்குது வாழை பழங்கள்

அதனுக்கு “செவ்வாழை" என்ற பெயருண்டு
சிவப்பும் மஞ்சளும் கலந்த பப்பாளி
இதை உண்பதில் மிகவும் சுவையுண்டு
சிவப்பும் மஞ்சளும் கலந்த நிறம்

இது மாம்பழத்தின் கனிந்த நிறம்
பச்சையும் மஞ்சளும் கலந்த நிறம்
இது கொய்யா பழத்தின் கனிந்த நிறம்
பச்சை நிறத்தில் முள்ளாய் நிறைந்த பழம்

உருவத்தில் பெருத்த பலாவின் நிறம்
மஞ்சளில் முள்ளாய் நிறைந்த பழம்
அன்னாசி என்று பெயருண்டு
அறுத்து சாப்பிட சுவையுண்டு

இரத்த சிவப்பாய் இறுகிய தோலாய்
இருக்கும் பழத்திற்கு “மாதுளை" பெயருண்டு
உள்ளுக்குள் இருக்கும் முத்துக்கள்
உடலுக்கு இரத்தத்தை சேர்த்திடுமே !

பொதுவாய் பழங்கள் எல்லாமே
உடலுக்கும் உள்ளத்துக்கும் பலம் சேர்க்கும்

## வியப்பூட்டும் தகவல்கள்

- மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 தடவைகள் கொத்துமாம்.
- அவுஸ்திரேலியாவில் வசிக்கும் மித்ரா என்ற பறவை ஒன்பது நிறத்தில் தெரியுமாம்.
- கடல் புறாக்கள் நீரில் மிதந்து கொண்டே தூங்குமாம்.
- பச்சோந்தியின் கண்கள் எப்போதும் சுழன்று கொண்டே இருக்குமாம்.
- புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கி.மீ. வரை பறக்கும் திறன் படைத்ததாம்.
- குவாரின் என்ற பறவை மல்லாந்து தூங்குமாம்.
- கங்காருவும்கைகளால்சண்டை போடும்.
- யானையும் குறட்டை விட்டுத் தூங்கும்.
- கொரில்லாவிற்கு 32 பற்கள் உண்டு.
- பெங்குயின் பறவை நடந்து செல்லும்.
- குரங்கு பேன் பார்க்கும்.

## பொது அறிவு

- மேற்கே குஜராத் முதல் கிழக்கே அருணாச்சல பிரதேசம் வரை உள்ள தூரம்?
  **2933 கி.மீ.**
- இந்தியாவின் அண்டை நாடுகள்?
  **பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், பூட்டான், சீனா, பங்களாதேஷ், மியன்மார்**
- இந்தியாவையும் இலங்கையும் பிரிக்கும் நீர்ச்சந்தி?
  **பாக் நீர்ச்சந்தி**
- இந்தியாவில் வடகிழக்கில் அமைந்துள்ள மலைத் தொடரின் பெயர்?
  **பூர்வாச்சல்**
- இமயமலை தொடரின் நீளம் எத்தனை கிலோமீற்றர்கள்?
  **2560 கிலோமீற்றர்கள்**
- எவரெஸ்ட் சிகரத்தின் உயரம்?
  **8848 மீற்றர்கள்**
- உலகின் இரண்டாவது பெரிய சிகரம்?
  **மவுண்ட் காட்வின் ஆஸ்டின் (8611 மீற்றர்கள்)**
- எகிப்து நாகரிகம் எந்த நதிக்கரையில் தோன்றியது?
  **நைல் நதி**
- எகிப்து நாகரிகம் எவ்வாறு அழைகப்படுகிறது?
  **நைல் நதியின் நன்கொடை, நைல் நதியின் மகள்**
- சூரிய குடும்பத்தில் உள்ள திடக்கோள்கள் எவை ?
  **புதன், வெள்ளி, பூமி, செவ்வாய்**

உண்மை ஒருநாள் வெல்லும் – இந்த உலகம் உன் பெயர் சொல்லும்.

~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## போர்க்குற்றவாளிகளை மறைப்பதும் போர்க்குற்றமே

இலங்கையில் போர்க்குற்றம் நடந்துள்ளதை பல்வேறு ஆதாரங்கள் சான்றுப்படுத்தி நிற்கின்றன.

இதற்கு மேலாக இந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களும் போர்க்குற்றம் இடம்பெற்றுள்ளதை ஏற்றுள்ளனர்.

ஆக, வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த கொடும்போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்ட நிலையில் தமிழின அழிப்பு நடந்துள்ளமை உறுதியாகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், சர்வதேசப் போர்க்குற்ற விசாரணை இடம்பெறாமல் தாமதிக்கின்ற ஒவ்வொரு கணமும் உண்மை வெளிப்படாமல் மறைக்கப்படுவதற்கான சந்தர்ப்பத்தை தரும்.

தவிர, போர்க்குற்ற விசாரணை இடம்பெறாத காரணத்தால் அரசியல்வாதிகள் சிலரும் படைத் தளபதிகள் சிலரும் போர்க்குற்றம் இடம்பெறவில்லை எனக் கூறிவருகின்றனர்.

இவ்வாறு இவர்கள் கூறுவதானது போர்க்குற்றத்தை மறைப்புச் செய்கின்ற மிக மோசமான செயற்பாடாகும்.

எனவே போர்க்குற்றம் இடம்பெறவில்லை என்று கூறுகின்றவர்கள் தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் இத்தகையவர்களும் போர்க்குற்றம் இழைத்தவர்களாகக் கருதப்பட்டு அவர்கள் மீதும் விசாரணை நடத்தப்படுவது கட்டாயமானதாகும்.

2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த யுத்தம் என்பது தமிழினத்தை அழிப்பதற்கானது என்பதை சர்வசே சமூகம் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டியுள்ளது.

சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட காணொளிகள் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த போர்க்குற்றத்தை தெட்டத் தெளிவாக ஆதாரப்படுத்தியுள்ளது.

இவையெல்லாம் இருந்தும் இன்னமும் சர்வதேச போர்க்குற்ற விசாரணை இடம்பெறாமை துரதிர்ஷ்டமானது.

போர்க்குற்றம் இடம்பெறவில்லை எனக் கூறுபவர்கள் கூட, தமது மனச்சாட்சிக்கு விரோதமாகச் செயற்பட முடியாமல் போர்க்குற்றம் நடந்ததை ஏற்றுள்ளனர்.

போர்க்குற்றம் நடந்துள்ளதை முன்னாள் ஆட்சித் தலைவர் சந்திரிகா குமாரதுங்கவும் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஏற்றுக் கொண்டுள்ள பின்னரும் போர்க்குற்ற விசாரணை நடத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறவில்லை என்றால்,

சர்வதேச சமூகம் போர்க்குற்றத்தை சமாளிக்க நினைக்கிறதா என்ற ஐயம் எழவே செய்யும்.

இதற்கு மேலாக போர்க்குற்றம் இடம்பெற்றது என்று யார் கூறினாலும் அவர்கள் படையினரைக் காட்டிக் கொடுத்துவிட்டனர் என போர்க்குற்றத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் கூறுவதன் உள்ளார்ந்தத்தை ஆராய்ந்தால்,

போர்க்குற்றம் இழைத்தவர்களை காட்டிக் கொடுக்காமல் மறைப்புச் செய்ய வேண்டும் என்ற பொருளடக்கம் அதற்குள் இருப்பதைக் காண முடியும்.

எனவே போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை இடம்பெறுவதன் மூலமாக பயங்கரமான தகவல்கள் வெளிவருவதற்கும் சம்பந்தப்பட்டவர்களை இனங்காண்பதற்கும் உரிய சந்தர்ப்பம் கிடைக்கும்.

## நீதித்துறை நிராகரித்ததால் மகிந்த தரப்பு கோபம்

# அரசியல் அமைப்பில் குறைபாடுகள் இருப்பின் அதைப்புதுப்பித்து சுயாதீனப்படுத்த வேண்டும்

## அமைச்சர் கிரியெல்ல விளக்கம்

(கொழும்பு)

அரசியல் அமைப்பு பேரவையில் குறைபாடுகள் இருப்பின் அதனை புதுப்பித்து சுயாதீனப்படுத்த வேண்டுமே தவிர அரசியல் அமைப்பு சபையை நிராகரிக்கக் கூடாது. பின்வாசல் வழியாக ஆட்சிபீடம் ஏறிய மகிந்த ராஜபக்ஷவை நீதித்துறை நிராகரித்த காரணத்தால் தான் அவர்கள் இன்று நீதித்துறை மீது கோபமாக உள்ளனர் எனசபை முதல்வர் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சியினால் கொண்டு வரப்பட்ட அரசியல் அமைப்பு பேரவை குறித்த விவாதத்தில் உரையாற்றும்போதே லக்ஸ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பு பேரவை மிகவும் ஆரோக்கியமான ஒன்றாகும். இன்று அரசியல் அமைப்பு பேரவையில் நீதியரசர் நியமனம் ஒரு கேள்வியாக எழுப்பப்பட்டு வருகின்றது.

எனினும் நீதியரசர் நியமனத்தில் ஜனாதிபதியின் தலையீடு இருந்தது. ஜனாதிபதி தான் நீதியரசர் நியமனத்தை செய்தார். அதன்போதும் அவர் நியமித்த நபர் ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்ட நபரை விடவும் நான்கு தரங்கள் குறைந்தவராகவே இருநதார். இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றன.

ஆனால் அரசியல் அமைப்பு பேரவை அதனை நிராகரித்தது. பொருத்தமான நபர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பதே அதன் நோக்கமாக இருந்தது.

மேலும் சந்திரிகா குமாரதுங்க அம்மையாரின் ஆட்சியில் தனது அரசாங்கத்தை கொண்டு நடத்த பெரும்பான்மை இருக்கவில்லை. ஆட்சியை கொண்டு நடத்த அதிகாரம் இருக்கவில்லை. அப்போதுதான் ஜே.வி.பி முன்வநது ஆட்சியை கொண்டு நடத்த ஆதரவு வழங்குவதாகவும் ஆனால் அரசியல் அமைப்பு பேரவை என்ற ஒன்றினை உருவாக்க வேண்டும் என்ற யோசனையை முதல் முதலாக முன்வைத்தனர்.

பின்னர் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. எமது ஆட்சியில் சட்டமாக கொண்டு வந்து பாராளுமன்றத்தில் சகலரதும் அங்கீகாரம் கிடைத்தது. அரசியல் அமைப்பு பேரவைக்கு பாராளுமன்றத்தின் முழுமையான அங்கீகாரம் கிடைத்தது. இன்று அதனையே குழப்பப் பார்ப்பது நியாயமற்றதாகும்.

அரசியல் அமைப்பு பேரவையில் குறைபாடுகள் இருக்கலாம். அதனை பேச்சுவார்த்தை மூலமாக சரிசெய்து கொள்ள முடியும். எமது ஆட்சியை சூழ்ச்சியால் கைப்பற்றினீர்கள். பின் வாசல் வழியாக மகிந்த ராஜபக்ஷ ஆட்சிபீடம் ஏறினார். இறுதியாக நீதிமன்றம் அவர்களின் சூழ்ச்சிகர ஆட்சியை நிராகரித்தது. ஆகவேதான் இன்று நீதித்துறை மீது நீங்கள் கோபமாக உள்ளீர்கள். ஆனால நியாயம் என்ற ஒன்று உள்ளது.

இன்று நீதியின் சுயாதனத்துவம் உறுதிப்படுத்தப்பட்டுளளது. இன்று மீண்டும் இனவாத கருத்துக்களை பரப்பும் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றீர்கள்.

மத ரீதியில் நீதியரசர் நியமிக்கப்படுவதாக கூறுகின்றீர்கள். இது முழுப்பொய். உலகில் எங்கும் அவ்வாறு இடம்பெற வில்லை. எமது நாட்டில் நீதியரசர் நியமாங்களை சரியாக செய்யவே அரசியல் அமைப்பு பேரவை கொண்டு வரப்பட்டது.

இதில் பிழை இருப்பினும் முறைமையை புதுப்பிப்போம். அதை விடுத்து நாம் இதனை நீக்க வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை **யாழ்.பிரதேசத்தில** சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டு சந்தையிலிருந்து நல்லூர் கோவில் வரை, நல்லூர் குறுக்கு வீதி, செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மலர்மகள் வீதி, கலைமகள் வீதி, பூமகள் வீதி,சாஸ்திரியார் வீதி, நடுத்தெருலேன், நாவலர் வீதி, நொத்தாரிஸ் லேன், வேலப்பர் வீதி, புவனேஸ்வரி அம்மாள் வீதி, புறூடி லேன், ஸ்ரான்லி கல்லூரி வீதி, சுப்பிரமணியம் வீதி, முதலியார் வீதி, பாரதி லேன், புங்கன்குளம் வீதி புகையிரத கடவை வரை, நாயன்மார் வீதி, குகன் வீதி, பொன்னம்பலம் வீதி, நாவலர் வீதியில் மாம்பழம் சந்தியிருந்து நல்லூர் குறுக்கு வீதி வரை, A9 வீதியில் பாரதி வீதியிலிருந்து செம்மணி வளைவு வரை, நெடுங்குளம் வீதி புகையிரதக் கடவை வரை, முள்ளி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, Cey- Nor பவுண்டேஷன் லிமிட்டெட், மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், SOS சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி, நாயன்மார்கட்டு Carlton Sports Network (CSN), உடுவில் ஒரு பகுதி, சங்குவேலி, மானிப்பாய் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** முள்ளியவளைப் பிரதேசம் முழுவதும், வற்றாப்பளைப் பிரதேசம் முழுவதும், மாஞ்சோலை வைத்தியசாலை, விமானப் படை1 மற்றும் 2, 59 ஆவது படைப்பிரிவு முகாம், SFHQ வற்றாப்பளை, Mari time pattu, பலநோக்கு கூட்டுறவு சங்கம் குமுழமுனை, 12 VIR, 16ESR, FMA, SLASC ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** பம்பைமடுவிலிருந்து குருக்கள் புதுக்குளம் வரை, பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், வேளாங்குளம் விமானப்படை முகாம், A9 வீதி நீர்ப்பாசனம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** பெரிய கரைசல் பிரதேசம் முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், அரிப்பு, சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### பாடுதல், எண்ணங்களைப் பரப்புதல், அகந்தை

எண்ணங்களை பரப்ப மற்றவர்களுடன் தொடர்பு கொள்வதில் மூன்று முறைகள் உள்ளன:

அறிவின் மூலம் தொடர்பு கொள்வதில் நீ பேசுகிறாய்.

இதயத்துடன் தொடர்பு கொள்வதில் நீ பாடுகிறாய்.

ஆன்மாவுடன் தொடர்பு மௌனத்தில் நிகழ்கிறது.

ந மனிதாகளை சநதிககும போது பெருமபாலும அறிவு மூலமாக தொடர்பு கொள்கிறாய் (பேசுகிறாய்). இயற்கையோடு நீ இருக்கும் போது நீ பாடுகிறாய்.இயற்கையுடன் இதயத்திலிருந்து தொடர்பு கொள்கிறாய். பெரும்பாலும் நீ மற்றவர்களுடன் இருக்கும் போது பேசிக்கொண்ட இருககிறாய.பிதற றுகிறாய.ந தொடாபை அறிவு மட்டத்திலேயே **(head level)** வைக்கிறாய் .ஆனால் நீ இயற்கையுடன் உள்ள போது பாடலை முணுமுணுக்கிறாய் . உன்னுடைய தொடர்பு இதயத்திலிருந்து **(head level)** வருகிறது.நீ குருவுடன் இருக்கும் போது உணாசசிகளிலலாது வெறுமையாகிறாய. கேளவிகளையெல்லாம் மறந்து விடுகிறாய். அப்போது ஆன்மாவின் மூலம் **( soul level)** மௌனத்தில் தொடர்பு ஏற்படுகிறது.

நீ மற்றவர்களை சந்திக்கும் போது நீ அறிவு பூர்வமான நிலையிலேயே இருகக விருமபுகிறாய .முறையாக ஏறபாடு செய்யப்பட்டிருந்தால் தவிர மற்றவர்களுடன் என்றும் நீ பாடுவதிலலை. உன அகநதை ந பாடுவதைத தடைசெயகிறது. பலருககு பிறரோடு சோநது பாடுவது ஒதது வருவதில்லை .நீ எல்லோருடனும் சேர்ந்து பாடுவது தான் இதயம அல்லது உணர்வு நிலைக்கு இறங்கி வருகிறாய்.(தொடரும்)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### உங்கள் இராசியில் இராகு-கேது ஒன்றாக சஞ்சரித்தால் என்ன செய்ய வேண்டும்?

**மிதுனம்**

நந்தி யோகத்தின் காரணமாக மிதுன இராசிக்காரர்களுககு கலலரல தொடரபான பிரசசினைகள ஏறபடலாம. அதுமடடுமினறி வாகன விபததுகள, வாழககையில அமைதியினமை போனற பிரசசினைகள ஏறபடலாம. இந்த சூழ்நிலையில் சனிக்கிழமைகளில் அரசமரத்திற்கு கீழே கடுகு எண்ணெய் ஊற்றி விளக்கேற்றி வழிபடவும.

**கடகம்**

கடக இராசிக்காரர்களுக்கு நந்தி யோகம் ஏற்பட்டால் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை மட்டுமின்றி திருமண வாழ்க்கையிலும் பல பிரச்சினைகளை ஏறபடுததும. மேலும இது மனரதியான குழபபஙகளையும் ஏற்படுத்தும். இந்த சூழ்நிலையில் தினமும் காலை சிவபெருமானை தண்ணீர் வைத்து வழிபடவும். முடிந்தால் திங்கட்கிழமைகளில் விரதம் இருக்கவும்.

**சிம்மம்**

சிம்ம இராசியில பிறநதவரகளுககு நநதி யோகததால கடுமையான உடல்நல பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. அவரகளுககு எலுமபு மறறும வயிறு தொடரபான பிரச்சினைகள் ஏற்படும். காலை நேரத்தில் சூரிய பகவானுக்கு வெல்லம் வைத்து வழிபடுவது இதன் பாதிப்புகளை குறைக்கும். (தொடரும்)

# அரியாலை கரப்பந்தாட்ட தொடர் இறுதியில் புத்தூர் வளர்மதி



அரியாலை சுதேசிய திருநாள் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் யாழ். மாவட்ட ரீதியான கரப்பந்தாட்ட தொடரில் கடந்த 19 ஆம் திகதி அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற 2 ஆவது அரையிறுதி போட்டியில் புத்தூர் வளர்மதி அணி ஆவரங்கால் இந்து இளைஞன் அணியை 25:20,25:23, 22:25, 25:23 புள்ளிகள் அடிப்படையில் 3:1 என்ற ரீதியில் வீழ்த்தி இறு திக்குள் நுழைந்தது.

இறுதிப்போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (க)





கிளி/சோரன் பற்று சி.சி.த.க. பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது... (க-7)

# மாவட்ட மட்ட மேசைப்பந்தாட்டம் சம்பியனாகியது உடுவில் பிரதேச செயலகம்



யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப்பிரிவு நடத்தும் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட விளையாட்டு நிகழ்வுகளின் வரிசையில் பெண்களுக்கான மேசைப்பந்தாட்ட தொடர் கடந்த 17 ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரி உள்ளக அரங்கில் நடைபெற்றது. தொடரின் இறுதிப்போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணியினை 3:2 என்ற ரீதியில் வீழ்த்தி மாவட்ட சம்பியன் ஆகியது உடுவில் பிரதேச செயலகம். (க)

# மாவட்ட மட்ட மேசைப்பந்தாட்டம் சம்பியனாகியது யாழ். பிரதேச செயலகம்



யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு நடத்தும் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட விளையாட்டு நிகழ்வுகளின் வரிசையில் ஆண்களுக்கான மேசைப்பந்தாட்ட தொடர் கடந்த 17 ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரி உள்ளக அரங்கில் நடைபெற்றது. தொடரின் இறுதிப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணியினை 3:1 என்ற ரீதியில் வீழ்த்தி மாவட்ட சம்பியன் ஆகியது யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி. (க)

# "கொலைக் காண்டில் வரோம்" இம்ரான் தஹிர் டுவிட்



ஐ.பி.எல்.போட்டிகள் அடுத்த மாதம் தொடங்கவுள்ள நிலையில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வீரர் இம்ரான் தஹிர் உற்சாகமாக டுவீட் செய்துள்ளார்.

12 ஆவது ஐ.பி.எல்.போட்டி தொடருக்கான முதற்கட்ட அட்டவணையை பி.சி.சி.ஐ.வெளியிட்டது. இந்தத் தொடரின் முதல் போட்டியில் டோனி தலைமையிலான சி.எஸ்.கே.அணியும் விராட் ஹோலியின் தலைமையிலான ஆர்.சி.பி. அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

முதல் போட்டியே டோனி-ஹோலி மோதும் போட்டியாக இருப்பதால் ரசிகர்களிடையே எதிர்பார்ப்பு இப்போதே எகிறியுள்ளது. இந்நிலையில், தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளரும் சென்னை அணியின் வீரருமான இம்ரான் தஹிர் தனது டுவீட்டர் பக்கத்தில் ஐ.பி.எல்.குறித்து டுவீட் செய்துள்ளார்.

அதில் அவர் கூறுகையில், 'என் இனிய தமிழ் மக்களே நலமா? களம் இறங்குகிறோம் மார்ச் 23 நமது கோட்டையில். வந்தோம் வென்றோம் சென்றோம் வருவோம் வெல்வோம் செல்வோம்.

இந்த வருடம் எங்க காளியோட ஆட்டத்தைப் பார்ப்பீங்க. கொல காண்டுல வரோம், செண்டிமெண்ட் இருக்கறவன் குறுக்க வராதீங்க... எடுடா வண்டிய போடுடா விசில...' என தெரிவித்துள்ளார். (க)

# சிக்ஸ் மழை பொழிந்த கெய்ல் புதிய உலக சாதனை படைப்பு



சர்வதேச கிரிக்கெட்டில் அதிக் சிக்சர் விளாசி மேற்கிந்தியத்தீவுகள் அணியின் கெய்ல் உலக சாதனை படைத்துள்ளார். இங்கிலாந்து - மேற்கிந்திய தீவு அணிகளுக்கிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் முதலாவது ஆட்டம் பிரிட்ஜ்டவுனில் நடந்தது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணியில் தொடக்க ஆட்டக்காரர் கிறிஸ் கெய்ல் சிக்சர் மழை பொழிந்தார். தொடக்கத்தில் நிதானமாக ஆடிய அவர் போகப் போக ரசிகர்களுக்கு வாணவேடிக்கை காட்டினார்.

ஒரு சிக்சர் 121 மீற்றர் தூரத்திற்கு பறந்தது. மற்றொரு முறை பந்து மைதானத்திற்கு வெளியே சென்றது. 35 ஓவர் முடிந்திருந்த போது அந்த அணி 3 விக்கெட்டுக்கு 229 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

அப்போது 39 வயதான கிறிஸ் கெய்ல் 100 ஓட்டங்களுடன் (3 பவுண்டரி, 9 சிக்சர்) களத்தில் இருந்தார்.

இது அவருக்கு 24 ஆவது சதமாகும். மேலும் ஒட்டுமொத்த சர்வதேச கிரிக்கெட்டில் (20 ஓவர், ஒரு நாள் மற்றும் டெஸ்ட்) அதிக சிக்சர் விளாசியவர் என்ற சாதனையையும் கெய்ல் படைத்தார். முதல் சிக்சர் அடித்த போது, இந்தச் சாதனை பட்டியலில் முதலிடத்தில் இருந்த பாகிஸ்தானின் அப்ரிடியை (476 சிக்சர்) அவர் முந்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# பாகிஸ்தானுடன் விளையாட்டு வேண்டாம் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி



காஷ்மீர் மாநிலத்தின் புல்வாமா மாவட்டத்தில் கடந்த வாரம் ஜெய்ஷ்-இ-முகமது பயங்கரவாத இயக்கம் நடத்திய தற்கொலை தாக்குதலில் துணை இராணுவ வீரர்கள் 40 பேர் வீர மரணம் அடைந்தனர். இச் சம்பவத்திற்கு பலரும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். கிரிக்கெட் வீரர்களும் இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில், பாகிஸ்தானுடனான போட்டியில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என இந்திய கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங் கருத்து தெரிவித்திருந்தார். இது தொடர்பாக கிரிக்கெட் வாரியம் ஆலோசனை நடத்தி வருகிறது.

இந்நிலையில் டில்லியில் நேற்று தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முன்னாள் இந்திய கிரிக்கெட் அணி தலைவரான சவுரவ் கங்குலி பாகிஸ்தானுடனான சகல போட்டிகளையும் இரத்துச் செய்ய வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகளில் 10 அணிகள் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணியும் மற்ற 9 அணிகளுடன் மோத வேண்டும். இம்முறை உலக கோப்பையில் இந்தியா ஒரு போட்டியில் விளையாடாமல் போனால், அணிக்கு பெரிய இழப்பு ஏதும் இல்லை.

புல்வாமாவில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல் மிகவும் மோசமான ஒரு நிகழ்வாகும். இரு நாடுகளுக்கிடையே எவ்வித தொடர்பும் இருத்தல் கூடாது. பாகிஸ்தானுடன் கிரிக்கெட் மட்டுமின்றி ஹொக்கி, கால்பந்து போன்ற அனைத்து விளையாட்டு உறவுகளையும் இந்தியா முறிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (க)

## வலிந்து காணா...

பாகிஸ்தான், ருவாண்டா, சவூதி அரேபியா, சூடான், ஐக்கிய அரபு இராஜ்ஜியம் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் அடங்குகின்றன.

அவசர நடைமுறைக்கு முன்னதாக புதிதாக பதிவுசெய்யப்பட்ட வழக்குகள் மற்றும் முன்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டவற்றில் புதுப்பிக்கப் பட்ட தகவல்கள் உள்ளிட்ட 758 வழக்குகளையும் இக் குழு பரிசோதித்தது. இந்த அமர்வின் போது ஆய்வு செய்யப்பட்ட பிற 37 நாடுகளில் இலங்கையும் அடங்குகின்றது. (ம-3)

## நீதிமன்றத்தை...

ஆகிய மூவரும் நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றஞ்சுமத்தப் பட்டது.


மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய கட்டளைக்கு அமைய, தம்மை மீண்டும் அமைச்சுப் பதவிக்கு நியமிக்காமல் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் செயற்பட்டுள்ளமையினால் அவர் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக பா.டெனீஸ்வரன் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

டெனீஸ்வரனின் மனுவுக்கு ஆட்சேபனை தெரிவித்து விக்னேஸ்வரன் உள்ளிட்ட மூவரால் ஆட்சேபனை மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த ஆட்சேபனை மனுவை கடந்த வாரம் மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இந்த நிலையில் விக்னேஸ்வரன் உள்ளிட்ட மூவரும் நீதிமன்றை அவமதித்தனர் என்ற குற்றச்சாட்டு மனு மீதான விசாரணை மேன்முறையீட்டு மன்றால் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எனினும் மனு மீதான விசாரணையை வரும் மே 23 மற்றும் மே 31ஆம் திகதிகளில் முன்னெடுக்க உத்தரவிட்டது மேன்முறையீட்டு நீதிமன்றம். (ம-3)

# அறங்காவலர் திருநாவுக்கரசு காலமானார்



(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயத்தின் அறங்காவலரும் ஆன்மிக வாழ்வுக்காகத் தன்னை அர்ப்பணித்தவருமான பொ.வி.திருநாவுக்கரசு அவர்கள் நேற்றுக் காலமானார்.

இறைவழிபாட்டினூடாக ஆன்மிக வாழ்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்த பொ.வி.திருநாவுக்கரசு அவர்கள் மண்டைதீவில் மக்கள் மீளக்குடியமர்வதற்கான சூழலை உருவாக்கியவர்.

உயர் பாதுகாப்பு வலயமாக மண்டைதீவை அறிவித்த போதிலும் திருவெண்காட்டுச் சித்திவிநாயகர் ஆலயத்தில் பூசைவழிபாடுகள் இடம்பெறவேண்டுமென வலியுறுத்தி அதனை நடைமுறைப் படுத்தியதன் ஊடாக மண்டைதீவின் ஒரு பகுதியில் மக்கள் மீளக்குடியிருப்பதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கியவர்.

அவரின் பூதவுடல் மண்டைதீவு திருவெண்காட்டிலுள்ள அவரது இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. (ந)

## இரண்டு புதிய...

றாலை மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக, இலங்கை முதலீட்டுச்சபை தெரிவித்துள்ளது.

வாயு சக்தி விற்பன்னர் தனியார் நிறுவனம், 2.2 பில்லியன் ரூபாய் முதலீட்டில் ஒரு காற்றாலை மின் நிலையத்தையும், யாழ் வாயு பகவான் தனியார் நிறுவனம் 2.2 பில்லியன் ரூபாய் முதலீட்டில் மற்றொரு காற்றாலை மின் நிலையத்தையும் அமைக்கவுள்ளன.

இந்த நிறுவனங்கள், 10 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யவுள்ளன.

இதன் மூலம், எரிபொருள் மூலம் பூர்த்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு குறைக்கப்படும் என்றும் முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது. (ம-3)

## கேப்பாப்புலவு...

அவர்களின் காணிவிடுவிப்பு தொடர்பில் இதுவரை ஏற்பட்ட மாற்றங்கள் குறித்தும் அரசாங்கத்தினால் ஏதாவது வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டுள்ளனவா என்பது பற்றியும் போராட்ட காரர்களின் தற்போதைய நிலைகுறித்தும் கேட்டறிந்து கொண்டுள்ளார்கள். (ம-3)

## ஜனாதிபதி மைத்...

இதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில், கடந்த 6ஆம்திகதி இரவு இருவருக்குமிடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றன. சுமார் 2 மணித்தியாலங்கள் நடந்த இந்தப் பேச்சுக்களில், ஜனாதிபதி ஸ்மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, ஜி.எல்.பீரிஸ், பாராளுமன்ற உறுப்பினர்கள் தயாசிறி ஜெயசேகர, மஹிந்த அமரவீர, தினேஸ் குணவர்த்தன, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, டக்ளஸ் தேவானந்தா, வாசுதேவ நாணயக்கார, ஏ.எச்.எம். அதாவுல்லா, திஸ்ஸ விதாரண உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் பரந்துபட்ட கூட்டணியை அமைப்பதற்கான, பேச்சுக்களை நடத்துவதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

இந்த குழுவிடம் இரண்டு வாரங்களுக்குள் புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் இன்று முக்கிய சந்திப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## உருவாக்கப்பட்ட 19ஆவது...

பல்வேறு எதிர்பார்ப்புகளுடனும் பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களில் 215 பேரின் ஆதரவுடன் அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டதை ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அரசியலமைப்பு சபை தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

19ஆவது திருத்தத்திற்கு ஏற்ப அரசியலமைப்பு சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அதன் பொறுப்புக்கள், கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் பற்றி 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள போதும் அவற்றில் எந்தவொரு விடயமும் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

19வது திருத்தத்தின் ஊடாக உருவானவையே சுயாதீன ஆணைக் குழுக்களாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அது பிழையான வழியில் செல்லுமானால் நல்லாட்சியையும் ஜனநாயகத்தையும் எதிர்பார்க்கும் சமூகம் விரும்பும் நோக்கங்களை அடைந்துகொள்ள முடியாது என்றும் குறிப்பிட்டார்.

உலகின் எந்தவொரு தலைவரும் மேற்கொள்ளாத வகையில் அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் தனது அதிகாரத்தை தானம் செய்த இந்த யுகத்தின் ஒரே தலைவர் நானாகும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி தான் அவ்வாறு செய்தது சிறந்ததோர் அரச நிர்வாகத்தை உருவாக்கும் தூய்மையான நோக்கத்திற்காகவேயாகும் என்றும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை இரத்துச் செய்வது பற்றிய பாராளுமன்றத்தின் தீர்மானம் எதுவானாலும் அன்று போல் இன்றும் தான் அதற்கு உடன்படுவதாகவும் மேலும் தெரிவித்தார். (ம-3)

## சர்வதேசத்துக்கு உரத்து...

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்தின் இரண்டு வருட நிறைவையும் ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத்தொடரின் மார்ச் மாத அமர்வினையும் கருத்தில் கொண்டு எதிர்வரும் 25 ஆம் திகதி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தழுவிய அளவில் நடைபெறவிருக்கும் மாபெரும் கவன ஈர்ப்பு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கங்கள் ஒன்றிணைந்து நடத்தும் இந்த கவன ஈர்ப்பு போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையில் பொதுமக்கள் கலந்துகொண்டு இலங்கைக்கு மேலதிக கால அவகாசம் வழங்கக் கூடாது என்று ஏகோபித்த குரலில் ஒலிக்கவேண்டும் என்றும் சர்வதேச சட்டம் மற்றும் கோட்பாடுகளின் அடிப்படையில் மாற்று வழிமுறைகளை ஐ.நா சபை இலங்கை விடயத்தில் இனிமேல் கையாள வேண்டும் என்று வலியுறுத்தவேண்டும் என்றும் நீதியரசர் விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தினை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தவறியுள்ள நிலையிலும் தொடர்ந்தும் வடக்கு கிழக்கில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுவரும் நிலையிலும் அவற்றை கண்காணிப்பதற்கு ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராலயம் கட்டாயமாக அலுவலகங்களை திறக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதனை புலம்பெயர் தமிழ் மக்களும் தம்மால் முடிந்தளவுக்கு சர்வதேச அரசியல் மற்றும் ராஜதந்திர மட்டங்களில் எடுத்துரைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-3)

## கொழும்புத்துறை...

விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று குறித்த பொதி மீட்கப்பட்டுள்ளது.

அதில் 4.125 கிலோகிராம் நிறையுடைய கேரள கஞ்சா காணப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்படாத நிலையில், கைப்பற்றப்பட்ட பொதி யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (ம-3)

## தமிழ் மக்கள் ஒரு படி முன்னேற...

தெரிவித்துள்ளார்.

யாழ்.புல்லுக்குளம் பகுதியில் தனியார் பஸ்தரிப்பிட கண்காணிப்பு நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்.

வடக்கில் உள்ள அரசியல்வாதிகளையும் இணைந்து உரிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவது இந்த முறை உரிய முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தப்பட்டு, யாழ்.மாநகர சபைக்கும் முதல்வரும், சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ள இந்த வேளையிலேயே, மாநகர சபை தொடர்பான விடயங்களிலும், பங்களிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது.

நானும், சம்பிக்கவும் வானூர்தியில் இரு திசையில் ஒரு திசையில் இருந்து வந்தோம் என்று வடமாகாண ஆளுநர் ஒரு விடயத்தை சொன்னார். ஆம், நாங்கள் பயணித்த திசை யாழ்ப்பாணத்தை நோக்கியதாகத் தான் இருந்தது.

ஆகையினால், நாங்கள் பயணித்த திசையில் தவறு கிடையாது. மக்களை மேம்படுத்த வேண்டும். அது பௌதீக அபிவிருத்தி சார்ந்ததாக இருக்காது. ஏனெனில், இந்தப் புதிய பயணத்தை ஆரம்பித்தது இன்று அல்ல. 2015 ஆம் ஆண்டு முதல் ஒன்றாக பயணித்தவர்கள், புதிய அரசியலமைப்பு பணிகளுக்கென்று உருவாக்கப்பட்ட வழிநடத்தல் குழுவிலே, நானும் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும், மூன்றரை வருடங்களாக செயற்பட்டு வருகின்றோம்.

அதில் தற்போது, ஒரு படி நிலைக்கு வந்துள்ளோம். எதிர்வரும் காலங்களில் எவ்வாறு ஆகுமென்ற சந்தேகம் இருந்தாலும் கூட ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளோம். தற்போது இரண்டாவது அறிக்கை வெளியிடவுள்ளது.

இன்னும் சற்றுத் தூரம் எங்களுடன் பயணிக்க வேண்டும். தமிழ் மக்கள் இந்த நாட்டில் எவ்வாறு ஒன்றாக வாழ விரும்புகின்றார்கள் என்றும், அவ்வாறு ஒன்றாக வாழும் போது, எமது கைகளில் ஆட்சி அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும். அது நியாயமான அரசியல் அபிலாசை என்பதை நீங்களும் இணைந்து எங்களுடன் கைகோர்த்து அந்தப் பணியில் தமிழ் மக்கள் வெற்றி பெறுவதற்கு. இந்தப் பாராளுமன்ற காலத்தில் தமிழ் மக்கள் ஓர் படியை எடுத்து வைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென மேலும் தெரிவித்தார். (ம-9,101)

## 250 மில்லியன்...

கம் தெரிவித்துள்ளது.

வடக்கில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் புரட்சியை ஏற்படுத்துவதற்கும் அதனூடாக பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் யாழ்ப்பாணத்தில் தகவல் தொழில்நுட்பமையம் அமைக்க இந்தியா 250 மில்லியன் ரூபாய் நிதியை வழங்குகிறது.

இதற்கான உடன்படிக்கை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து மற்றும் இலங்கை வெளிநாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் எஸ்.ரி.கொடிகார ஆகிய இருவரும் கைச்சாத்திட்டனர். (ம-3)

## அரசியல் அமைப்பு பேரவை...

கட்சியினால் கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்பு பேரவை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

எதிர்க்கட்சி இன்று நீதித்துறை மீதான விமர்சனத்தை முன்வைத்து இந்த விவாதத்தை கொண்டு வந்துள்ளது. ஆனால் இந்த நாட்டின் கடந்த கால சட்ட நகர்வுகள் எவ்வாறு கையாளப்பட்டது என்பது எமக்கு தெரியும். அப்போதைய பிரதம நீதியரசர் உங்களின் விருப்பத்திற்கு தீர்ப்பு வழங்கவில்லை என்ற காரணத்தினால் ஒரே நாளில் அவரை நீக்கினீர்கள்.

அதேபோல் இன்னொரு நீதியரசர் கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது அலரிமாளிகையில் இருந்தார், அவருக்கு அங்கு என்ன வேலை இருந்தது. இவ்வாறான கேள்விகளே எமக்கு நீதித்துறை மீது எழுந்தது. ஆகவே சட்ட நன்மதிப்பு என்பது மிகவும் முக்கியமானது. (ம-3)

மஹஜன சம்பத
திகதி 2019/02/21
சீட்டிழுப்பு இலக்கம் 3860
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
P 0 2 5 5 3 7
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.02.21
சீட்டிழுப்பு இலக்கம் 2042
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
N 12 56 79 80
தேசிய லொத்தர் சபை

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1532 திகதி 2019/02/21
Q K J
வெற்றி இலக்கங்கள் போனஸ் இலக்கம்
21 44 45 52 72
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/02/21
சீட்டிழுப்பு இலக்கம் 515
லக்கினம் வெற்றி இலக்கங்கள்
தனுசு 02 11 44 66 57
தேசிய லொத்தர் சபை

## கட்டார் வேலைவாய்ப்பு

எலக்ரீஷியன், பிளம்பர், மேசன், பெயின்ரர், பார் பென்டர் டிரைவர், ரயர் மெக்கானிக், வாகன பெயின்ரர், சமையல்காரர்

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்

Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

முற்றிலும் இலவச பயணம்

077 00 38 215 ☎ 021 221 9 221

(C-5587)

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk



## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 */=Kg
கனடா-900 */=Kg
ஜேர்மனி- 700 */=Kg
நெதர்லாந்து-700 */=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240

V2 TRAVELs

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-5439)


## இறக்குமதிக்கு...

இந்தியாவில் இருந்து பழங்களை இறக்குமதி செய்யும் போது, கடைப்பிடிக்க வேண்டிய தொற்று நோய்த் தடுப்பு நடவடிக்கை தொடர்பான விதிமுறைகளை பூர்த்தி செய்யாத நிலையிலேயே, இந்த தடையை விதிக்க முடிவு செய்திருப்பதாக தேசிய தாவர நோய்த்தடுப்பு சேவை தெரிவித்துள்ளது.

இந்த தடை கடந்த டிசெம்பர் 28ஆம் நாள் தொடக்கம் நடைமுறைக்கு வந்திருப்பதாக, தேசிய தாவர நோய்த்தடுப்பு சேவை மேலதிக பணிப்பாளர் விக்ரம ஆராச்சி தெரிவித்தார்.

இந்த தடை தொடர்பாக கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தின் ஊடாக, இந்திய அரசாங்கத்துக்கு விவசாய அமைச்சர் பி.ஹறிசன் தெரியபடுத்தியுள்ளார். (ம-3)


## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

சகல பரீட்சைகளுக்குமான சகல வினாத்தாள்களுக்குமான வகுப்புக்களும் நடைபெறும்

பிரதி ஞாயிறு
9.00 – 3.00 மணிவரை

- SLAS
- SLEAS
- LLB

- வரிமதிப்பீட்டாளர்
- நீதிமன்ற பதிவாளர்
- புள்ளிவிபரவியலாளர்

தொடர்புகளுக்கு : 076 688 3394

பல்கலைக்கழக விசேடகற்கை உளச்சார்பு

சனி 11.00–2.00 மணிவரை

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரிவீதி கொமர்ஷல் வங்கியருகில்)

(C-5582)



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## ஆங்கிலத்தைக் கண்டு அச்சமா?

### இலக்கணத்தைக் காட்டி மிரட்டுகிறார்களா?

இலக்கணம் பற்றிய எந்த அச்சமுமின்றி 6ம் வகுப்புவரை தமிழில் பேசவும், எழுதவும் கற்றுக்கொண்டதுபோல்,

### 3ஏ மாதத்தில் ஆங்கிலத்தில் பேசுங்கள்!

| | | |
|---|---|---|
| Rapid ENGLISH | 20 Hrs | Rs. 5,000/- |
| Beginners Level | 40 Hrs | Rs. 10,000/- |
| Advanced Level | 80 Hrs | Rs. 20,000/- |
| IELTS Preparatory | 120 Hrs | Rs. 30,000/- |

Money Back Guarantee
3 மாதத்தில் ஆங்கிலத்தில் பேசாவிட்டால் பணம் மீளளிக்கப்படும்

CAMBRIDGE ENGLISH Language Assessment

வெளிநாடு செல்ல விரும்புவோர், தொழில் புரிவோர், பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்/மாணவர்கள், பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கு உகந்தது

077 36 16 798
021 221 9 221

SIKARAM ACADEMY
Business - Hospitality - Media
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017

(C-5583)

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
(இஷாரா ரெக்ஸ் → ரீன் கேர்ல் அருகே)


## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் விநாயகமூர்த்தி திருநாவுக்கரசு

(மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தா)



மண்டைதீவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் விநாயகமூர்த்தி திருநாவுக்கரசு அவர்கள் நேற்று 21.02.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மண்டைதீவு. தகவல் : குடும்பத்தினர்


## வேலைவாய்ப்பு

### 90 நாட்களில் நிரந்தர தொழில் வாய்ப்பு

O/L பயின்றவர்கள் விண்ணப்பிக்கலாம். அனுபவம், கணனி, சகோதர மொழி மேலதிகத் தகைமைகளாக ஏற்றுக்கொள்ளப்படும்.

- தங்குமிடம், மருத்துவம் இலவசம்
- பயிற்சியின் போது குறைந்தது 22,000/- வரை பின்னர் 45,000/- க்கு மேல்
- 30 வயதிற்கு உட்பட்ட வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம்

பிரதேசத்தினர் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு : 077 408 3273

(7622)


## இலவச புற்றுநோய் பரிசோதனையும், கருத்தரங்கும்.

*இடம் : சுகாதார நலன்புரி நிலையம், கந்தரோடை.*
*காலம் – 24.02.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி.*

புற்றுநோய் சம்பந்தமான விழிப்புணர்வு பற்றிய இலவச புற்றுநோய் பரிசோதனையும், கருத்தரங்கும். புற்றுநோய் உதவி வடக்கு கிழக்கு அமைப்பு (CANE) அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறையும், தொற்றா நோய் தடுப்புப் பிரிவும் இணைந்து நடாத்தும் இவ் நிகழ்வில் 30 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றலாம். தொற்றாநோய் பரிசோதனைகளான நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம் என்பனவும் பரிசோதிக்கப்படும்.

- பரிசோதிக்க விரும்புபவர்கள் 23.02.2019 சனி இரவு 8.00 மணிக்கு பின் உணவு உண்ணக் கூடாது.
- இரத்தப் பரிசோதனைக்கான இரத்த மாதிரி 24.02.2019 காலை 8.00 மணிக்கு எடுத்த பின்பு சிற்றூண்டி (இலைக்கஞ்சி, வடை) வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 077 129 1582 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்கவும்
சுகாதார நலன்புரி நிலையம், கந்தரோடை.

(7621)


## NEW SCIENCE HALL, JAFFNA.
## ENGLISH MEDIUM PHYSICS(A/L)

**2021 :- MECHANICS**
Sat, Sun } 12.00-1.30
WED 5.30 P.M-7.00P.M

**2020 :- Optics**
Sat 7.30 A.M-9.30A.M
Sun 7.30A.M-9.30 A.M & 2.00-3.30
Mon 5.30 P.M-7.00 P.M

**2019:- Matter and Radiation**
mon 7.00 p.m-8.30 PM
Wed 7.00 PM-8.30 PM

Paper Classes(Last 10 years) Sat, Sun } 9.30 A.M-11.30A.M

(C-5583)

**M.KUGANESWARAN** B.Sc (Hons)Dip in Edu



## After O/L , A/L

தாதியர் ஆவதற்கான ஓர் அரியவாய்ப்பு



Approved by Ministry of Health

Next Intake
03 - March - 2019

*Diploma in Nursing
(3 Years)

*Cert in Health Care
(1 Year)

Admission Help line : 070 3903060

Institute of Medical Sciences

Green Memorial Hospital. Manipay.
021 225 6990 , 021 225 6335 www.theims.net

(C-5575)


## அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பு

அமரர்

### இராசமாணிக்கம் சிவசுப்பிரமணியம்



தோற்றம்: 09.03.1921 - மறைவு: 03.02.2019

கடந்த 03.02.2019 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் இராசமாணிக்கம் சிவசுப்பிரமணியம் அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.02.2019) வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், சபிண்டீகரண நிகழ்வு நாளை (23.02.2019) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு: தயவுகூர்ந்து இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக்கொள்கின்றோம்*

பழைய உடையார் ஒழுங்கை, பருத்தித்துறை.

(C-5572)

தகவல்: குடும்பத்தினர்.


# Ahtus

**Ahtus Enterprises (Pvt) Ltd**

ஆதுஸ் என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிட்

குழந்தைகள் தாய்மார்களுக்கு வேண்டிய அனைத்து பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.



## Your Baby is our Concern

உலகின் அதிசிறந்ததை உங்கள் குழந்தைக்கு வழங்கிடுங்கள்

இல.30, கன்னாதிட்டி றோட்,
(வண்.சிவன் கோயில் முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 742 7322




(C-5570)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.